# பொம்மை

பிற்சேர்க்கை

## விளையாட்டுப் படகு (4+)

கேரள அரசு
**கல்வித் துறை**

தயார் செய்தது

**மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்**
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம் - 695 012
Phone: 0471-2341883, 2340323, e-mail: scertkerala@gmail.com

# ஆசிரியர்களுக்கு

விளையாட்டுகள் வாயிலாக புலப்படுபவையும் பழக்கமுள்ள பொருட்களையும் நிகழ்வுகளையும் அடிப்படையாகக் கொண்டு பெற்றுக்கொள்ளும் அனுபவங்கள் வாயிலாக திறன்கள், மதிப்புகள் வளர்ச்சிக்கு மழலையர் பள்ளியில் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

குழந்தைகளின் தனி நபர் வேற்றுமை, சமூக கலாச்சார பண்பாடுகளின் இடைவெளி, சமூகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் மாற்றங்கள் போன்றவைகளைக் கருத்திற் கொண்டு மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மழலையர் பள்ளி பாடத்திட்டமும் மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கான ஆசிரியர் உதவி கையேடு 'பொம்மை'யும் வடிவமைத்துள்ளது.

உடல் இயக்க வளர்ச்சி, மொழி வளர்ச்சி, அறிவுசார் வளர்ச்சி, சமூக உள வளர்ச்சி, படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு போன்ற ஐந்து வளர்ச்சி மண்டலங்களிலாக 86 திறன்கள் நான்கு வயது நிறைவடையும் போது குழந்தைகள் பெற்றிருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மழலையர் பள்ளிச் செயல்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளது. திறன்களை வளர்த்துவதற்காகக் குழந்தைக்கு அறிமுகமான 30 மையக்கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு செயல்பாட்டு அனுபவங்கள் ஆசிரியர் வடிவமைக்க வேண்டும். வகுப்புச் செயல்பாடுகள் திட்டமிடுவதற்கான உதவிக் கருவியாக விளையாட்டுப் படகு என்ற மழலையர் பள்ளி ஆசிரியர் பனுவல் தயாரிக்கப்பட்டுள்ளது.

மழலையர் பள்ளி பாட ஏற்பாட்டினுடையவும் ஆசிரியர் பனுவல் 'பொம்மை'யினுடையவும் அடிப்படையில் மழலையர் பள்ளி மாணவர்களுக்காக (3+, 4+) தயாரிக்கப்பட்ட 'விளையாட்டுப் படகு' என்ற பெயரில் உள்ளவை தான் செயல்பாட்டு அட்டைகள். வகுப்பறையில் இந்த அட்டைகளை வழங்குவதற்கான உதவிக் கருவியே இக்கைப்புத்தகம். சுயமாக செயல்பாடுகள் வடிமைக்கவும் செயல்பாட்டு அட்டைகள் விரிவாக்கம் செய்வதற்கும் ஆசிரியர்களுக்குச் சுதந்திரமுண்டு. இந்தப் பனுவலை நன்கு பயன்படுத்துவீர்களல்லவா'

வாழ்த்துகளுடன்,

**முனைவர். ஜெ. பிரசாத்**

இயக்குநர்

## விளையாட்டுப் படகு

## பயிற்சித்தாள் பயன்படுத்தும் போது

மையக்கருத்தின் கருத்துப் பரிமாற்றத்தின் முதற் படியாகவோ, குழந்தையின் சிந்தனைத் திறன், படைப்பாற்றல் போன்றவற்றை ஊக்குவிப்பதாகவோ மையக் கருத்து பரிமாற்றத்திற்குப் பின் குழந்தையின் கருத்து வெளியீடு நடத்துவதற்காகவோ பயிற்சித்தாளைப் பயன்படுத்தலாம். பல்வேறு மையக்கருத்துகளோடு தொடர்பு படுத்தி குறிப்பிட்ட திறன்களின் வளர்ச்சிக்காகக் கொடுக்கப்படும் அனுபவச் செயல்பாடுகளின் தொடர்ச்சியாகவோ, முழுமைப்படுத்துதலாகவோ, மதிப்பிடுவதற்காகவோ இப்பயிற்சித்தாளைப் பயன்படுத்தலாம். சில வாய்ப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

- **மையக்கருத்துச் செயல்பாடுகள் → பயிற்சித்தாள் → மையக்கருத்துச் செயல்பாடுகள்.**

மையக்கருத்துடன் தொடர்புடைய அனுபவங்களை அளித்தும் தொடர்ச்சியாகவும் இயல்பாகவும் பயிற்சித்தாள் அளித்தும் தொடர்ந்து செயல்பாடுகளைத் திட்டமிடலாம்.

- **பயிற்சித்தாள் + மையக்கருத்துச் செயல்பாடுகள் → மையக்கருத்துச் செயல்பாடுகள் → பயிற்சித்தாள் → மையக்கருத்துச் செயல்பாடுகள்.**

பயிற்சித்தாளைச் செயல்பாடகவே அளிக்கலாம். அத்துடன் இயல்பாகவே சங்கிலித் தொடராக பிற செயல்பாடுகளைக் கொடுக்கலாம்.

- ஒரு அனுபவக் கருவியாக பயிற்சித்தாளைப் பயன்படுத்தலாம்.
- குழந்தைகளின் பயிற்சித்தாளை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தி அலசி ஆராயவும் வளர்ச்சியை வேறுபடுத்தி அறிவதற்கும் உதவும் வகையில் பயிற்சித்தாளைப் பயன்படுத்தலாம். ஒரு குழந்தையின் தொடர்ச்சியான மாற்றத்தைத்தான் மதிப்பிட வேண்டும்.
- குழந்தை ஈடுபடும் செயல்பாடுகளின் செயல்வரிசையை ஆசிரியை உற்று நோக்கிக் கொண்டிருக்க வேண்டும்.
- குழந்தைகளின் பயிற்சித்தாளை ஒப்புமைப்படுத்தக் கூடாது.
- ஒவ்வொரு குழந்தையினுடையவும் வளர்ச்சி மண்டலங்களின் வேகம் வேறுபட்டதாகும். ஆதலால் குழந்தைகளின் வெளியீடுகளை ஒப்புமைப்படுத்தக் கூடாது.
- அளிக்கப்பட்டுள்ள பயிற்சித்தாள்களின் தொடர்ச்சியாகவோ அதன் பிற்சேர்க்கையாகவோ புதிய பயிற்சித்தாளை வடிவமைப்பதற்கான சுதந்திரம் ஆசிரியைக்கு உண்டு.
- குழந்தை பயிற்சித்தாளைப் பூர்த்தி செய்தபின் அதைப் பாதுகாத்தல், மீள்பயன்பாடு போன்றவை குறித்த சரியான அறிவு ஆசிரியைக்கு இருக்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட பயிற்சித்தாள்களைப் படைப்புத் தொகுப்பில் பாதுகாக்க வேண்டும்.
- பயிற்சித்தாளை முறைப்படியான கற்றல் முறையில் அணுகக் கூடாது.

## பயிற்சித்தாள்கள் – செயல்பாடுகள்

**பல்வேறு வளர்ச்சி மண்டலங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் பயிற்சித்தாள்கள் இங்கு தரப்பட்டுள்ளன. கீழே விரிவாகவும் கூறப்பட்டுள்ளது.**

### 1. உடல் இயக்க வளர்ச்சி

நுண் தசை வளர்ச்சிக்குத் தேவையான வாய்ப்புகள் எல்லா பயிற்சித்தாள் களிலும் அளிக்கப்பட்டுள்ளன. படம் வரைதல், வண்ணம் தீட்டுதல், உருவாக்குதல் போன்றவை இந்த வளர்ச்சி மண்டலத்திற்கு முக்கியத்துவம் அளிப்பவை. வரைந்து இணைத்தல் வட்டமிடுதல், முன் வரைதல் போன்ற செயல்பாடுகளால் நுண்தசைப் பயிற்சி கிடைக்கிறது. கிழித்தல், வெட்டுதல், ஒட்டுதல், போன்ற அனுபவங்கள் வாயிலாக நுண் தசைகளின் வளர்ச்சி உருவாகிறது.

3+ பருவத்திலுள்ள குழந்தைகளுக்கு நுண் தசைகளின் இயக்கம் குறைவாக இருக்கும். எனவே அவர்களால் செய்ய இயல்கின்ற சிறு சிறு செயல்பாடுகள் தான், விளையாட்டுப் படகில் குறிப்பிடப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல் பெருந்தசை வளர்ச்சிக்காக ஓடுதல், குதித்தல், படிகள் ஏறி இறங்குதல், ஊர்தல், தவழுதல் போன்ற ஏராளம் அனுபவச் செயல்பாடுகளை வகுப்பறையில் திட்டமிடவேண்டும்.

4+ குழந்தைகளுக்கு இன்னும் அதிகமான நுண் கவனம் தேவையுள்ள செயல்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக கத்தரிக்கோல் பயன்படுத்தி துல்லியமாக வெட்டுவதற்கான பயிற்சி. இதற்காக குழந்தை பாதுகாப்பு (child safe) கத்தரிக்கோலைப் பயன்படுத்துவது நன்று. புள்ளிகளை இணைத்து வரைந்து படத்தை முழுமைப்படுத்துதல் தனிப்பட்ட செயல்பாடாகும். ஒன்றாம் வகுப்பில் குழந்தை எழுத்துகளையும் சொற்களையும் வாக்கியங்களையும் எல்லாம் எழுத வேண்டும். அதனால் 4+ ல் வைத்து முன் எழுத்துச் செயல்பாடுகள் ஏராளம் அளித்தல் வேண்டும்.

### 2. மொழி வளர்ச்சி

மழலையர்ப்பள்ளி காலகட்டத்தில் உரையாடலுக்கு மிக முக்கிய பங்குண்டு. கூச்சமும் பயமும் இல்லாமல், தயக்கமின்றி பேசுவதற்காக குழந்தைகளைத் திறமையானவர்களாக்க நாம் முயற்சிக்க வேண்டும். அனைத்து பயிற்சித்தாள்களிலும் இதற்கான வாய்ப்பு உள்ளன.

படம் வாசித்தல், இயற்கை நடத்தல், பொம்மை விளையாட்டு, பாத்திர நடிப்பு, விளையாட்டு, பிற அனுபவச் செயல்பாடுகள் போன்றவற்றில் ஒவ்வொரு குழந்தைக்கும் பேசுவதற்கான வாய்ப்பு அளிக்க வேண்டும். படங்களில் உள்ள நிகழ்வுகளைச் சொல்லுதல், வரைந்ததும் வண்ணம் தீட்டியதுமான படங்களைப் பற்றிக் கூறுதல், பிறர் வரைந்த படங்களின் கருத்துகளைக் கூறுதல், செய்த காரியங்களின் யுக்தியும் காரிய காரணங்களையும் கூறுதல் போன்ற உரையாடலுக்கான பன்முக வாய்ப்புகள் பயிற்சித்தாள் செயல்பாடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

3+ பருவத்தில் தனது வீட்டில் பேசும் மொழி வாயிலாகத்தான் குழந்தைகள் கருத்துப் பரிமாற்றம் நடத்துவார்கள், இச்சூழலில் கேலிசெய்தல், தடை செய்தல், புறக்கணித்தல் போன்றச் செயல்களை ஆசிரியை செய்தல் கூடாது. அது குழந்தையின் தன்னம்பிக்கையைச் சிதைத்து விடும். பேசுவதற்கான ஊக்குவித்தலை அளித்தல் அவசியம்.

4+ பருவத்திற்கு வரும்போது வழக்கு மொழியின்றி இலக்கிய மொழி வளர்ச்சி அடைவதற்கான மாதிரிகைகளும் அனுபவங்களும் அளித்தல் வேண்டும். இதுபோன்ற வாய்ப்புகளை பயிற்சித்தாளில் வழங்கும் போது கவனத்துடன் பயன்படுத்த நம்மால் இயல வேண்டும். இந்த நிலையில் முன்எழுத்துச் செயல்பாடுகள் வழங்கும் முறையில் விளையாட்டுப் படகில் உள்ள பயிற்சித்தாள்கள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

### 3. அறிவுசார் வளர்ச்சி

அறிவியல், கணித மண்டலத்திலுள்ள அனுபவச் செயல்பாடுகள் இம்மண்டலத்தில் உட்படுத்தப்பட்டுள்ளன. பெரிது/சிறிது, கூடுதல்/குறைவு, அண்மையில்/தூரத்தில், நீளம் கூடியது/குறைந்தது, உயரம் கூடியது/குறைந்தது போன்ற முன் – கணிதக் கருத்துகள், பொருட்கள், எண்ணுதல், இணைத்தல் போன்றவை உட்படுத்தப் பட்டுள்ளன. வகுப்பறையில் ஏராளம் நேர்முக அனுபவங்களை அளித்த பிறகு தான் பயிற்சித்தாளைப் பயன்படுத்தவேண்டும்.

உற்று நோக்குதல், ஒப்புமைப்படுத்துதல், ஒற்றுமை வேற்றுமைகள் கண்டறிதல், வகைப்படுத்துதல், கண்டுபிடித்த உண்மைகளை வெளியிடுதல் போன்ற செயல் வரிசைத் திறன்களுடன் தொடர்புடைய ஏராளம் செயல்பாடுகள் விளையாட்டுப் படகில் உட்படுத்தப்பட்டுள்ளன.

படங்களை உற்றுநோக்குதல் மட்டுமே பயிற்சித்தாள் வாயிலாகக் கிடைக்கிறது. அதனால் கண்டறிதல், கேட்டறிதல், முகர்ந்து அறிதல், சுவைத்தறிதல், தொட்டு அறிதல் ஆகிய ஐம்புலன்கள் வாயிலான கற்றல் அனுபவங்கள் கிடைக்கும் வகையிலும் திட்டமிட வேண்டும். யுக்திச்சிந்தனை, காரண காரியத் தொடர்புகளைக் கண்டறிந்து கூறுதல், அடுக்குகள் வடிவமைத்தல், பல வகையான உருவாக்கச் செயல்களில் ஈடுபடுதல், நினைவுப்படுத்திக் கூறுதல் போன்ற அனுபவங்கள் குழந்தைக்குக் கிடைக்க வேண்டும்.

மூன்று வயதினருக்கு இலகுவான முன் கணிதக் கருத்துகள், நிறங்களைப் பிரித்தறிதல், வேறுபாடு அறிதல், படங்களை உற்று நோக்கி அதிலுள்ள நிகழ்வுகளைக் கூறுதல், ஒரே போலுள்ளவைகளைக் கண்டறிதல், குழுவில் சேராதது கண்டுபிடித்தல், அதன் காரணம் கூறுதல் போன்ற செயல்பாடுகள் தான் தரப்பட்டுள்ளன.

நான்கு வயதினருக்கு இவைகளைவிட உயர்தரச் செயல்பாடுகளுடன் 1 முதல் 5 வரையுள்ள எண்ணறிவோடு தொடர்புடைய செயல்பாடுகளும் உட்படுத்தப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்குகாகத் தரப்பட்டுள்ள செயல்பாடுகளைத்தழுவி பயிற்சித்தாள்களைப் பயன்படுத்தலாம்.

### 4 படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

படம் வரைதல், வண்ணம் தீட்டுதல், உருவாக்கல் போன்ற முக்கியமான செயல்பாடுகள் இம்மண்டலத்தோடு தொடர்பு படுத்தி விளையாட்டுப் படகில் உட்படுத்தப்பட்டுள்ளன. மொழி வாயிலான படைப்பாற்றலுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

படம் வரைதல் (சுதந்திரமாகவும், கட்டுப்பாட்டுடனும்), வண்ணம் தீட்டுதல் போன்றவை மேலே கூறப்பட்டுள்ளதல்லவா, பல வகையான உருவாக்கல் வாய்ப்புகளை உட்படுத்துவதற்கு முயற்சி செய்யப்பட்டுள்ளன. மணல் படங்கள், விரல் படங்கள், இலை மிருகக் காட்சி சாலை வடிவமைத்தல், பூக்கள் உருவாக்குதல், அடையாள அட்டை தயாரித்தல், கொடி வடிவமைத்தல், தோரணங்கள் தயாரித்தல் போன்று, கைவிரல் பதித்து படம் உருவாக்கல், இலை அச்சு, பஞ்சு, பென்சில் சீவிய துகள் போன்றவற்றை ஒட்டி, படங்களை முழுமைப் படுத்தல் போன்ற பல் வேறுபட்ட உருவாக்குதல் வாய்ப்புகள் விளையாட்டுப் படகில் உள்ளன.

3+ பருவத்தினருக்குத் தகுந்த எளிமையான உருவாக்கல் செயல்பாடுகள் தரப்பட்டுள்ளன. இச்செயல்பாடுகளை வழங்கும் போது படைப்பு மற்றும் அழகியல் மேம்பாட்டுடன் நுண் – பெருந்தசைகளின் பயிற்சிக்கான வாய்ப்புகளும் உண்டல்லவா. மேலும் சமூக – உள வளர்ச்சிக்கும் இவை பயன்படுகின்றன. ஒற்றுமை மனப்பாங்கும், தலைமை தாங்கும் திறன்களும் அடையும் படியான குழுச் செயல்பாடுகளைத் திட்டமிட வேண்டும்.

4+ பருவத்திலுள்ள குழந்தைகளுக்கு சிறிது உயர் தரத்திலான பயிற்சித்தாள் உட்படுத்தப்பட்டுள்ளது. கத்தரிக்கோல் பயன்படுத்தி

வெட்டவும் ஒட்டவும், காகிதம் பயன்படுத்தி பூக்கள், ஓரிகாமி வடிவங்கள் போன்றவை உருவாக்கவும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இயற்கையில் இருந்து கிடைக்கும் பொருட்கள், உபயோகமற்ற பொருட்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி உருவாக்கச் செயல்பாடுகளைச் செய்யவைக்க வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே குழந்தையின் படைப்பாற்றல் வளர்ச்சி மேம்படும்.

## 5. சமூக உள வளர்ச்சி

'விளையாட்டுப்படகிலுள்ள செயல்பாடுகள்' அனைத்துமே தனிநபர் செயல்பாடாகும். ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்கான வாய்ப்புகளையும் உருவாக்க இயலும். வண்ணம் தீட்டுவதற்கான கிரையான்களைக் கொடுத்தும் உருவாக்கச் செயல்பாடுகளில் குழுக்களாகவும் சேர்ந்து ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் உருவாகுமல்லவா. சில செயல்பாடுகளில் குறிப்பிட்ட நிறமுள்ள கிரையான் தேவைப்படும். (எடு:) இலைகளுக்குப் பச்சைநிறம் அளித்தல். ஒருவர் வண்ணம் தீட்டி முடியும் வரை காத்து நிற்க குழந்தையை ஊக்குவிக்க ஆசிரியையால் இயலும். கத்தரிக்கோல் பயன்படுத்தி வெட்டும் சூழலிலும் இவ்வாறு காத்து நிற்க வேண்டியது வரும்.

கதைகளில் வரும் மனவெழுச்சிகளைத் தனது மனவெழுச்சிகளுடன் தொடர்பு படுத்துதல் வாயிலாக சமூக உள வளர்ச்சியை உருவாக்க இயலும். பயிற்சித்தாள் வழங்கும் போது கதைக் களம், நிகழ்வு, வகுப்பில் கூறும் கதைகள், பாடல்கள், கதைப் பாடல்கள், பொம்மை நாடகம், பாத்திர நடிப்பு போன்றவை சமூக உள வளர்ச்சிக்காகவும் பயன்படுத்தும்போது தான் ஆசிரியை வெற்றி அடைகிறார்.

## மதிப்பீடு

ஒவ்வொரு வளர்ச்சி மண்டலத்திலும் ஒவ்வொரு குழந்தையும் எந்நிலையில் நிற்கிறார்கள் என்பதை ஆசிரியையால் கண்டறிய இயல வேண்டும். குழந்தையின் தனிநபர்த் திறன்களை உணர்ந்து தேவையான ஊக்குவித்தல் அளிக்க இது ஆசிரியருக்கு உதவும். மேலும் தனது திட்டமிடலில் உள்ள குறைகளை உணர்ந்து மேன்மைப்படுத்தவும் மதிப்பிடல் வாயிலாக இயலும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைக்கு அளிக்கவேண்டிய உதவிகள் என்னென்ன என்பதைக் குறிப்பிட்டுக் கூறவும் ஆசிரியைக்கு உதவுவது தொடர் மதிப்பீடு வாயிலாகப் பெறும் குறிப்புகள் தான்.

ஒவ்வொரு பயிற்சித்தாள்களிலும் என்னென்ன மதிப்பிட வேண்டும் என்று பனுவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. செயல்பாடுகள் நடக்கும் போது ஆசிரியர் செய்யும் உற்று நோக்கலும் பயிற்சித்தாள் என்ற படைப்பை மதிப்பிடுதல் வாயிலாகவும் தான் தொடர்மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது. பெற்றோருடன் உள்ள கலந்துரையாடல் வாயிலாகவும் சில முக்கியமான உற்றுநோக்கல் குறிப்புகள் நமக்குக் கிடைக்கும்.

ஒவ்வொரு பயிற்சித்தாளும் செய்து காட்சிப்படுத்திய பின் குழந்தையின் படைப்புத் தொகுப்புப் பையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதை அலசி ஆராயும் போது குழந்தையின் வளர்ச்சி மண்டலத்தில் ஏற்பட்ட சீரான வளர்ச்சி ஆசிரியைக்கும் பெற்றோருக்கும் புரிந்து கொள்ள முடியும். ஆண்டிறுதியில் இவைகளை ஒருங்கிணைத்து குழந்தையைக் குறித்துள்ள சரியான மதிப்பிடுதல் தயாராக்க முடியாதா?

குழந்தைக்கும் பெற்றோருக்கும் தேவையான பின்னூட்டம் நடத்தி மேன்மைப் படுத்த இதன் வாயிலாக ஆசிரியைக்கு இயலும்.

## மையக் கருத்து 1 குடும்பம்

பொம்மை செயல்பாட்டு புத்தகத்தில் இடம்பெறும் ஒவ்வொரு மையக் கருத்தோடும் தொடர்புடைய வளர்ச்சி மண்டலங்களில் தரப்பட்டுள்ள செயல்களின் வாய்ப்புகளின் வெளியீடு வரிசைக்குத் தகுந்த இடங்களில் பயிற்சித்தாள்களைப் பயன்படுத்த வேண்டும். கதைக்கூற்று, பாடல், விளையாட்டு, உருவாக்கம், பொம்மலாட்டம் போன்ற உத்திகள் வாயிலாகச் செயல்பாடு நடத்திய பின்/ நடத்தும் போதோ பயிற்சித்தாள் பயன்படுத்த வேண்டும். கதைக்கூற்று, கற்பனை, அறியவேண்டும் என்ற ஆவலைத் தூண்டுவதாக அமைதல் வேண்டும். நிகழ்வைக் கூறுதல், கதை சொல்லுதல் அல்ல. கதை கூறுதலில் முழுமை வேண்டும் – கற்பனை நயம் வேண்டும். மனக்காட்சி ஓட்டம் நடக்க வேண்டும். குடும்பத்தோடு தொடர்புடைய செயல்வரிசை கீழே தரப்பட்டுள்ளது. தேவையான மாற்றங்கள் செய்து கொள்ளலாம்.

### செயல்பாட்டு வரிசை

1. குடும்பத்தோடு தொடர்புடைய பாடல் கேட்டல், பாடுதல்/கூறுதல்.

↓

2. குடும்பத்தோடு தொடர்புடைய படம் விவரித்தல்.

↓

3. பயிற்சித்தாள் 1.1 "உங்கள் வீட்டில் யாரெல்லாம்?"

↓

4. கதையிலுள்ள நிகழ்வுகளை நடித்துக் காட்டுதல்.

↓

5. குடும்பத்தோடு தொடர்புடைய பாட்டு பாடுதல். (தனது பெயர் கூறுதல், தாயின் பெயர் கூறுதல்.)

↓

6. உயிரினங்களோடு தொடர்புடைய பாட்டுகள் பாடுதல்.

↓

7. கதை சொல்லுதல், பயிற்சித்தாள் 1.2 "அம்மாவிடம் சேர்ப்பீர்களா?" அளித்தல்.

↓

8. பெயர் கூறும் விளையாட்டு, அப்பா, அம்மா, அண்ணன், அக்கா, பெயர் கூறுதல்.

↓

9. கதை சொல்லுதல், பயிற்சித்தாள் 1.3 "வேறுபாடு காண்போம் கூறுவோம்" அளித்தல்.

↓

10. குடும்பத்தோடு தொடர்புடைய பாட்டு பாடுதல்.

↓

11. பெரிய குடும்பம், சிறிய குடும்பம் – கூறுதல்.

↓

12. கதை சொல்லும் பயிற்சித்தாள் 1.4 "என் வீட்டில் வசிப்பவர்கள் அளித்தல்.

↓

13. குடும்பத்தோடு தொடர்புடைய படங்கள் சேகரித்து ஒட்டுதல்.

↓

14. ஓடி – குதித்தல் விளையாட்டு, பயிற்சித்தாள் 1.5 "பெரிய குடும்பம்" அளித்தல்.

↓

15. பாத்திர நடிப்பு. சோறும் கறியும் விளையாட்டு.

## பயிற்சித்தாள் – 1.1 உங்கள் வீட்டில் யாரெல்லாம்?

**வளர்ச்சி மண்டலங்கள் :**
- மொழி வளர்ச்சி
- உடல் இயக்க வளர்ச்சி

**திறன்கள் :**

1. சுதந்திரமாகப் படம் வரைந்து வண்ணம் தீட்ட இயல்கிறது. (5)
2. படங்களை உற்று நோக்கி தகவல்களைக் காணவும், வெளியிடவும் இயல்கிறது. (4)

**கருத்து :** அப்பாவும் அம்மாவும் குழந்தைகளும் சேர்ந்தது தான் குடும்பம் (முன்னறிவின் மீள் அனுபவம்)

**கருவிகள் :** பாட்டுகள், கதைகள், கட் அவுட்டுகள், பெரிய ஒளிப்படத் திரை, பயிற்சித்தாள், கிரையான்ஸ், வண்ணங்கள்

**சூழல் :** குடும்பத்தோடு தொடர்புடைய பாடல்கள், கதைகள் – கேட்டல், கூறுதல், குழந்தையின் குடும்பத்தைக் குறித்த நட்புக் கலந்துரையாடல் போன்றவை ஆயத்தப்படுத்துவதற்கு பயன்படுத்தலாம்.

**செயல்முறை**

**• கதைக் கூற்று :** கொக்கரக்கோ கோ...... கொக்கரக்கோ கோ........

பொழுது புலர்ந்தது. நல்ல குளிர்! அப்பு போர்வையை இழுத்துச் சுருண்டு படுத்தான். "தனது கன்னத்தில் யாரோ தொட்டாங்களே" யாராக இருக்கும்? (சுதந்திர பிரதிபலிப்பு) பாட்டியின் மணம். அப்பு மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தான்.

"அப்பு எழும்பு'...... பாட்டி அப்புவின் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்தார். அவனைக் கட்டிலிலிருந்து கீழே இறக்கினார். பீ....பீ....பீ... ஓசை எழுப்பிக் கொண்டு முற்றத்திற்கு ஓடினான்.

தாத்தா நானும் தண்ணீர் விடட்டுமா? அப்பு தாத்தாவுக்கு உதவினான். செடிகளுக்குத் தண்ணீர் விடுதல் அவனுக்கு மிகவும் பிடிக்கும்.

அப்பு...... அப்பு.....; அழைப்பு கேட்டதும் அவன் அக்காவின் அருகே ஓடி வந்தான்.

"அப்பு, உனக்கு தென்னங்குரும்பை வண்டி வேண்டுமா? அக்காவும், அப்புவும் குரும்பை வண்டி உருட்டி விளையாடினர்.

'எனக்குப் பசிக்கிறது, அக்கா. விளையாடியது போதும்.

'அம்மா தோசை சுடுகிறார்?' நல்ல மணம்!

இருவரும் பல் தேய்த்தனர். சமையல் அறைக்கு வந்தனர். அம்மா தோசை சுட்டுக்கொண்டு இருக்கிறார். தோசையைத் திருப்பிப் போட்டார். தோசைக் கரண்டியால் எடுத்து தட்டில் வைத்தார். (இந்நிகழ்வை நடிக்கவேண்டும்) தோசை மாவை ஊற்றும் போது சூ.... என்ற ஒலி எழுப்ப வேண்டும். வீட்டில் உள்ள அனைவரும் சேர்ந்து உண்டனர்.

## பெரிய திரை பயன்படுத்தியுள்ள செயல்பாடுகள்

- அப்பு, தாத்தா இவர்களின் கட் அவுட்டுகளை

பெரிய திரையில் ஆசிரியை வைக்கிறார்.

- வீட்டில் வேறுயாரெல்லாம் உள்ளனர்? குழந்தைகள் கூறுவதற்கேற்றவாறு கட் அவுட்டுகளைக் குத்தி வைத்தல்.
- "இனி யாராவது இருப்பார்களா?" நமக்குப் பார்ப்போம்

- பயிற்சித்தாள் - 1.1. "உங்கள் வீட்டில் யாரெல்லாம்?" அளித்தல்.
- **படவாசிப்பு**
  - படத்தில் யாரெல்லாம்?
  - உங்கள் வீட்டில் உள்ளவர்கள் யார் யார்?
  - அவர்களின் பெயரைக் கூறுங்கள்?
  - அப்புவின் வீட்டிற்கு வண்ணம் தீட்டுவோம்.
  - தனது வீட்டின் படத்தை வரைந்து வண்ணம் தீட்டும் செயல்பாடைத் தொடர்ந்து அளிக்க வேண்டும்.

## மதிப்பீடு

- குடும்பத்தில் உள்ளவர்களைக் கண்டறிந்து கூற முடிகிறது.
- பல வண்ணங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.
- வண்ணம் தீட்டுவதில் நுண் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
- குடும்ப உறுப்பினர்களைப்பற்றிய (பெயர்கள், உறவுகள்) கூடுதல் காரியங்களைக் கூற முடிகிறது.

**பயிறிச்சித்தாள் - 1. 2. அம்மாவிடம் சேர்ப்பீர்களா?**

**வளர்ச்சி மண்டலம்:**
- அறிவு சார் வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்கள்:**

1. கேட்ட பாடலைத் தாளத்துடன் பாட இயல்கிறது (64)
2. புதிய வரிகளைச் சேர்த்துப் பாட இயல்கிறது. (65)
3. கண்டறிதல் செயல்பாடுகளில் பங்கேற்று அனுபவத்தின் அடிப்படையில் பொது முடிவு வெளியிட இயல்கிறது. (31)

**கருத்து :** குடும்பத்தில் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புடனும் அன்புடனும் மதிப்புடனும் ஒவ்வொரு நபர்களும் செயல்படுகிறார்கள்.

**கருவிகள் :** பயிற்சித்தாள், கிரையான்ஸ், பாட்டுகள்

**சூழல் :** குடும்பத்தோடு தொடர்புடைய எளிய கலந்துரையாடலுக்குப் பின்.

**செயல்முறை**

**நட்புக் கலந்துரையாடல்**

- உங்கள் வீட்டில் உயிரினங்களை வளர்க்கிறீர்களா? (சுதந்திரமான பிரதிபலிப்பு)
- அப்புவின் வீட்டில் உயிரினங்களை வளர்க்கிறார்களா?
- அப்புவின் வீட்டில் என்னென்ன உயிரினங்களை வளர்த்திருப்பார்கள்?

"நாம் ஒரு பாட்டு பாடுவோமா?"

ஆசிரியையும் குழந்தைகளும் சேர்ந்து பாடுகிறார்கள்.

"வீட்டில் ஒரு நாய்
வீரனான நாய்
அங்கே பார்த்தால் பௌ பௌ
இங்கே பார்த்தால் பௌ பௌ
வீட்டில் ஒரு பூனை
வெள்ளை நிறப் பூனை
அங்கே பார்த்தால் மியாவ் மியாவ்
இங்கே பார்த்தால் மியாவ் மியாவ்

வீட்டில் ஒரு கோழி
.......................................................
.......................................................

வரிகளைச் சேர்த்துப் பாடுதல்.

- **கதைக் கூற்று** : உணவு உண்டபின் அப்புவும் அக்காவும் விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்களுடன் விளையாட வேறு சிலர் இருந்தனர். யார், யார் என்று கூற முடியுமா? (சுதந்திர பிரதிபலிப்பு)

பூனைக்குட்டி, கோழிக்குஞ்சு, நாய்க்குட்டி. விளையாடிக் கொண்டிருக்கும் போது ஒரு சத்தம் டும்.....டும்.... குழந்தைகள் பயந்து அழுதனர். (ஒலி – போலச்செய்தல் – பூனை அழுவது, நாய்க்குட்டி அழுவது, கோழிக்குஞ்சு அழுவது) "இடியின் சத்தம், குழந்தைகளே விரைவில் உள்ளே வாருங்கள்.... மழை பெய்யத் தொடங்கிவிட்டது. அப்புவும் அம்முவும் வீட்டிற்குள் ஓடி வந்தனர். தாய் நாய், குட்டிகளையும் அழைத்துக் கொண்டு உள்ளே ஓடி வந்தது. தாய்ப் பூனை குட்டிகளை கௌவிக்கொண்டு வீட்டினுள் வந்தது. அதோ தாய்க்கோழி மட்டும் நனைகிறது. குஞ்சுகளைக் காணவில்லை எங்கே போனது? அப்புவும் அம்முவும் பார்த்தனர். காணவில்லை மழை நின்றது. கோழிக்குஞ்சுகள் தாய்க்கோழியின் சிறகுகளின் அடியில்! அவைகள் தலையை வெளியே நீட்டின. அனைவரையும் பார்த்துச் சிரித்தன. குழந்தைகள் மீண்டும் விளையாடத் தொடங்கினர். அப்போது மீண்டும் டும்......டும். குழந்தைகள் தாய்மார்களின் அருகே ஓடினர்.

## பயிற்சித்தாள் – 1.2 அம்மாவிடம் சேர்ப்பீர்களா?

- குழந்தைகளை அவர்களின் அம்மாவிடம் கொண்டு செல்லுங்கள்.
- வரைந்து இணைக்க வேண்டும்.
- வண்ணம் தீட்டுவோம்.
- ஒருவருக்கொருவர் மதிப்பிடுதல்.

அப்புவின் வீட்டைக்குறித்து வரிகளைப் சேர்த்துப் பாடுகிறார்கள்.

அப்புவின் வீடு
அழகான வீடு
பாட்டி உண்டு வீட்டில்
.......................................................
.......................................................

ஒவ்வொருவரும் தனது பெயரைச் சேர்த்துப் பாடுகிறார்கள்.

வீடு நல்ல வீடு
என்ன! அழகு வீடு
..........................................................
..........................................................

- **கதைக்கூற்று** :
(தொடர்ச்சி)

இருவரும் மழையில் நனைந்தீர்களா? காய்ச்சல் வராதா? வாங்க குழந்தைகளே! அம்மா அவர்களின் தலையைத் துவட்டி விட்டார். உடல் குளிர்ச்சியாக இருந்தது. அம்மா அன்புடன் அவர்களை அரவணைத்துக் கொண்டார். தாய்மார்களின் அன்பு குறித்த கலந்துரையாடல். அம்மாவிடம் உள்ள அன்பையும் கலந்துரையாட வேண்டும்.

## மதிப்பீடு

- சரியானவற்றை வரைந்து இணைக்கப்பட்டுள்ளது.
- குழந்தையின் தரத்திற்கேற்ப பொது முடிவுகள் கூற முடிகிறது.
- கவரும் தன்மையில் வண்ணம் தீட்டியுள்ளனர்.

## பயிற்சித்தாள் - 1.3 வேறுபாடு காண்போம் கூறுவோம்.

**வளர்ச்சி மண்டலங்கள்:**
- அறிவுசார் வளர்ச்சி
- மொழி வளர்ச்சி

**திறன்கள் :**

1. படங்களை உற்று நோக்கி தனித்தன்மைகளைக் கண்டறியவும் கூறிவெளியிடவும் இயல்கிறது (*36*)
2. படங்களை உற்று நோக்கி விளக்கங்களையும் கண்டறிதலையும் வெளியிட இயல்கிறது (*21*)

**கருத்து :** வீட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கே உரிய கடமைகளும் பொறுப்புகளும் உள்ளன.

**கருவிகள் :** பயிற்சித்தாள், பாட்டுகள், விசில், பந்து.

**சூழல் :** வீட்டு வேலைகளில் குழந்தை உதவும் சூழலைக் கலந்துரையாடிய பின் வெளியிடலாம்.

### செயல்முறை

- **பெயர் சொல்லும் விளையாட்டு:**

குழந்தைகள் வட்டத்தில் நிற்கிறார்கள். ஆசிரியை விசிலடிக்கும் போது பந்து கை மாறுதல். மீண்டும் விசிலடிக்கும் போது பந்து யார் கையில் உள்ளதோ அவர் தன் பெயரையும் அம்மாவின் பெயரையும் கூற வேண்டும்.

- **பாடல் :** விளையாடி முடிந்தபின் அம்மாவைக் குறித்த ஒரு பாடல்

“அம்மா நல்ல அம்மா
வீட்டில் உண்டு அம்மா
அம்மா நல்ல அம்மா
முத்தம் தரும் அம்மா”

- **சுதந்திர உரையாடல்:** குழந்தாய், இன்று உன்னைக் குளிக்க வைத்தது

யார்? பொட்டு வைத்ததோ? உடை அணிவித்தது யார்? (சுதந்திர பிரதிபலிப்பு) "வீட்டிலுள்ள அனைத்து வேலைகளும் செய்வது அம்மாவா? (சுதந்திர பிரதிபலிப்பு) அப்புவின் வீட்டில்........?

## பயிற்சித்தாள் - 1.3 வேறுபாடு கண்டுபிடிப்போம் கூறுவோம்

- படவாசிப்பு :

**(ஒப்புமை செய்தல்)** இடப்பக்கமும் வலப் பக்கமும் உள்ள படங்களைப் பாருங்கள். இரண்டும் ஒரே போல் உள்ளதா? எனக்கு ஒரு சந்தேகம்? ஏதாவது வேறுபாடு உள்ளதா? யார் முதலில் கண்டுபிடிப்பீர்கள்? கூர்ந்த கவனத்துடன் படங்களை உற்று நோக்குதல்.

- தேவையென்றால் குறிப்புகள் அளிக்கலாம்.
- முதற் படத்தில் உள்ள யாரோ இரண்டாவது படத்தில் இல்லை.
- வாசலையும், சன்னலையும் பார்த்து கிளி பறந்து வந்தது. பறந்து போனது.
- முதற்படத்திலிருந்து மறைந்தது என்னவெல்லாம்? இவ்வாறு குறிப்புகள் அளிக்கலாம்.

- **கலந்துரையாடல்** : தொடர்ந்து படத்தின் அடிப்படையில் கலந்துரையாடல்
- **ஊமைநடிப்பு** : வீட்டிலுள்ள வேலைகளைக் குழந்தைகள் ஒவ்வொருவராக வந்து ஊமை நடிப்பு நடித்துக் காட்டல்.

**மதிப்பீடு** :

- படவாசிப்பில் மேன்மை
- உற்றுநோக்கி கண்டறிந்து வெளியிடுவதில் மேன்மை.
- நான்கு வேறுபாடுகளையும் கண்டறிந்துள்ளனர்.
- நடிப்பின் மேன்மை.

## பயிற்சித்தாள் - 1.4 என் வீட்டில் வசிப்பவர்கள்

**வளர்ச்சி மண்டலங்கள்:**
- உடல் இயக்க வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்** : சுதந்திரமாகப் படம் வரைந்து வண்ணம் தீட்ட இயல்கிறது.

**கருத்து** : குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபர்களும் ஒற்றுமை, ஒத்துழைப்பு, அன்பு, மதிப்புடனும் செயல்படுதல்.

**கருவிகள்** : பயிற்சித்தாள், படங்கள், நிறங்கள், பெரிய திரை.

**சூழல்** : குடும்பத்ினரோடு தொடர்புடைய கதைகளைக் கேட்டல் (மூத்தவர்களை மதித்தல் என்ற கருத்து உள்ளடங்கியது) என்ற செயல்பாட்டிற்குப் பின்.

**செயல்முறை**

- **கதைக் கூற்று** : இரவில் அப்பா ஒரு பரிசுடன் வந்தார். பரிசுப் பொட்டலத்தில் என்ன இருக்கும்? (சுதந்திர பிரதிபலிப்பு) "அப்பா..... அப்பா பொட்டலத்தில்

என்ன?'' அப்பா பரிசுப்பொட்டலத்தை அப்புவிற்குக் கொடுத்தார். அப்பு பொட்டலத்தை அவிழ்த்துப் பார்த்தான். ''ஹாய்! பென்சில்'' அப்பு துள்ளிக் குதித்தான். விரைவாக அறையை நோக்கி ஒடினான்.

புத்தகமெடுத்தான். "என்ன செய்யலாம்?" "ஒரு படம் வரைந்தாலோ? அவன் ஆலோசித்தான். எதை வரைப்பது? எப்படி வரைப்பது! அப்பு வருந்தினான்.

"ஹாய்! தோழா, ஏன் கவலையுடன் இருக்கிறாய்?"

"எனக்கு அம்மாவின் படத்தை வரைய வேண்டும்."

"நான் உதவுகிறேன்" பென்சில் கூறியது. பென்சில் பெரிய வட்டம் வரைந்தது. இரண்டு கண்கள், மூக்கு, வாய்...... ஹாய்! அம்மாவின் படம்.

''எனக்கும் வரையவேண்டும்''. "இது போல வட்டம் வரைந்து நானும் வரைவேன். அப்பு கூறினான். அப்படியானால் வரைந்துகொள்.

"நீங்களும் அம்மாவை வரைய வேண்டாமா? வரைவோமா?!

- **பயிற்சித்தாள் – 1.4 ''என் வீட்டில் வசிப்பவர்கள்'' அளித்தல்.**
    - தேவையான பரிந்துரையை ஆசிரியை கூறுதல்.
    - ஒவ்வொருவரும் அவரவர்களுடைய வீட்டில் வசிப்பவர்களின் படத்தை வரைதல்.
    - வண்ணம் தீட்டுதல்.
    - வரைந்த படத்தைக் காட்சிப்படுத்திப் பேசுதல்.
    - பொதுவாகக் காட்சிப்படுத்துதல்.
    - சுயமாகவும் / ஒருவருக்கொருவரும் மதிப்பிட்டுக் கருத்துகளைக் கூறுதல்.

**சிறிய குடும்பம் பெரிய குடும்பம்**

- குழந்தைகள் வரைந்த குடும்பப் படங்களைக் குழுவில் காட்சிப் படுத்துதல். ஆசிரியை வினாக்கள் கேட்டல்.
- யாருடைய வீட்டில் கூடுதல் நபர்கள் உள்ளனர்?
- பெரிய குடும்பம், சிறிய குடும்பம் குழுவில் கண்டடைதல்.
- குழுக்களைப் பெரிய கூட்டம், சிறிய கூட்டம் எனப் பொதுவாக பெரிய திரையில் காட்சிப் படுத்துகிறார்கள்.
- குடும்பத்தோடு தொடர்புடைய படங்களைச் சேகரித்து ஒட்டுகிறார்கள்.

**மதிப்பீடு :**

- படம் வரைய இயல்கிறது.
- இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி வண்ணம் தீட்டுகிறார்கள்.
- வரைந்த படங்களைக் குறித்து தயக்கமின்றி பேச முடிகிறது.

**பயிற்சித்தாள் – 1. 5 பெரிய குடும்பம்.**

**வளர்ச்சி மண்டலம்** : அறிவு சார் வளர்ச்சி

**திறன் :** பொருட்களை/படங்களை ஒப்புமைப்படுத்தி

கணிதமொழி பயன்படுத்த இயல்கிறது. (39)

**கருத்து** : குடும்பத்திலுள்ள நபர்கள் சேர்ந்து ஒரே வீட்டில் வாழ்கிறார்கள்.
(முன்னறிவின் மீள் அனுபவம்)

**கருவிகள்** : படங்கள், பாட்டுகள்

**சூழல்** : பொருட்களைச் சிறியது, பெரியது, என்ற முறையில் வரிசைப்படுத்தும் செயல்பாட்டைத் தொடர்ந்து.

**செயல்முறை**

- **விளையாட்டு** "ஓடி – குதித்தல்,"
குழந்தைகள் வட்டத்தில் நிற்கிறார்கள். வட்டத்தின் உள்ளே மூன்று வேறுபட்ட வட்டங்களை வரைதல்.
"ஓடுங்கள் ஓடுங்கள் குழந்தைகளே
வட்டத்தில் ஓடுங்கள் குழந்தைகளே
குதியுங்கள் குதியுங்கள் குழந்தைகளே
குழியில் குதியுங்கள் குழந்தைகளே
    - எந்த குழியில் கூடுதல் குழந்தைகள்?
    - எந்த குழியில் குறைவு குழந்தைகள்?

மீண்டும் விளையாட்டு தொடர்தல் பெரிய கூட்டம் எது? சிறிய கூட்டம் எது?

- **கதைக்கூற்று** : அப்புவின் வீட்டில் உள்ளவர்களும் சின்னுவின் வீட்டில் உள்ளவர்களும் புகைப்படம் எடுக்கத் தீர்மானித்தனர். புகைப்படம் எடுப்பது எப்படி? (கைபேசி பயன்படுத்தி குழந்தைகள் புகைப்படம் எடுத்தனர். குழந்தைகளை நாற்காலியில் அமரச் செய்து எடுக்க வேண்டும். புகைப்படத்தை அவர்களுக்கு காண்பிக்க வேண்டும்.) வீட்டில் உள்ளவர்களுக்காக புகைப் படம் பிடிப்பவர் ஆறு நாற்காலிகளைக் கொண்டு வந்துள்ளார். (ஆசிரியை ஆறு நாற் காலிகளை வரிசைப்படுத்துகிறார்.) அவ்வீட்டில் யார் யார் உள்ளனர்?
முதல் நாற்காலியில் அம்மா, இரண்டாம் நாற்காலியில் அப்பா, மூன்றாம் நாற்காலியில்....
இவ்வாறு தாத்தா பாட்டி வரை சொல்ல வைக்க வேண்டும்.
    - பொதுவாக காட்சிப்படுத்தப்பட்ட குடும்ப அங்கங்களின் படத்தை மீண்டும் காட்டுதல். பெரிய குடும்பம், சிறிய குடும்பம் கண்டடைகிறார்கள்.

- பயிற்சித்தாள் 1.5 பெரிய குடும்பம் கொடுத்தல்.
    - சின்னுவின் குடும்பம். அடுத்தது அப்புவின் குடும்பம்
    - எந்த குடும்பத்தில் கூடுதல் நபர்கள்?
    - (ஒரே பார்வையில் பிரித்தறிய இயலாதவர்கள் உள்ளனர் என்றால் படங்களைச் சேர்த்து இணைத்து வரைந்து கூடுதலாக வருகிறவர்களைக் கண்டறிவதற்காக செயல் வரிசை அடிப்படையில் செயல்படுத்த வேண்டும்.)
    - நபர்கள் கூடுதல் உள்ளது தான் பெரிய குடும்பம். அதனைச் சுற்றி வட்டம் வரையட்டும்.

- படங்களை ஒருவருக்கொருவர் கைமாற்றி மதிப்பிடுதல்.

**மதிப்பீடு :**

பெரிய குடும்பத்தைக் கண்டறிந்து அடையாளப் படுத்த இயல்கிறது.

## மையக் கருத்து 2 வீடும் சுற்றுப்புறமும்

பயிற்சித்தாள் அளிக்கும் போது பெற வேண்டிய திறன்களையும் கருத்துகளையும் மனதில் திட்டப்படுத்த வேண்டும். அந்த கருத்துகள் குழந்தைகளின் அனுபவத்திலிருந்து உருவப்படுத்தியெடுக்க வேண்டும். நேரடியாகச் சொல்லிக் கொடுப்பதில்லை. அத்தகைய அனுபவங்கள், திறன்களை விரிவுபடுத்த உதவும். ஒரு பயிற்சித்தாள் ஒன்றோ இரண்டோ திறன்களையும் ஏதேனும் சில கருத்துகளையும் இலக்காகக் கொண்டிருக்கும். மையக்கருத்துகள் வழிச் செல்லும் போது தான் குழந்தைக்கு முழுமையான படம் மனதில் உருவாகும்.

## செயல்பாட்டு வரிசை

1. என் வீடு (பொம்மை பக்கம் 200) பாட்டு பாடுதல்.

↓

2. கதை சொல்லுதல் – பயிற்சித்தாள் 2.1 "படம் பார்த்துக் கூறுங்கள்! வண்ணம் தீட்டுங்கள்!" அளித்தல்.

↓

3. சிறு விளையாட்டுப் பொருட்கள் உருவாக்கல். (தென்னங்குரும்பை வண்டி, தீப்பெட்டி இரயில் வண்டி போன்றவை).

↓

4. கதை சொல்லுதல் பயிற்சித்தாள் 2.2. "மணல் படம் தயாரிப்போம்" அளித்தல்.

↓

5. இயற்கை நடத்தலின் போது கண்ட வீடுகளைக் குறித்து ஆசிரியையுடனும் குழந்தைகளுடனும் கூறுதல்.

↓

6. வீடுகளுக்கிடையேயான வேறுபாடுகள் கண்டறிந்து கூறுதல்.

↓

7. காகிதம், களிமண், இலை, குச்சிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி வீட்டின் வடிவம் செய்தல்.

↓

8. வீடுகளை உற்றுப்பார்த்து வீட்டின் மேற்கூரை, ஓடு, ஓலை, காங்கிரீட், வைக்கோல் என்று கூறுதல்.

↓

9. பல்வேறு அறைகள், கருவிகள் இவற்றின் பயன்களைக் கூறுதல்.

↓

10. ஜய், ஜய், விளையாட்டு.

↓

11. "வீடு நல்ல வீடு...... பாடல்.

↓

12. கதை சொல்லுதல் பயிற்சித்தாள் –2.3 "வரைந்து இணைப்போம்" அளித்தல்.

↓

13. படங்கள் வரைந்து கிரையான், பென்சில், நீர் வண்ணக்கலவை போன்றவற்றைப் பயன்படுத்தி வண்ணம் அளித்தல். (வீடும் சுற்றுப்புறமும்).

↓

14. வீட்டிலுள்ள உயிரினங்களைக் குறித்துள்ள பாட்டுகள் பாடுதல்.

↓

15. பயிற்சித்தாள் 2.4. "பூ வரைப்போம் வண்ணம் தீட்டுவோம்". அளித்தல்.

↓

16. பூவைக் குறித்து வரிகள் கூட்டிச் சேர்த்துப் பாடுதல்.

↓

17. பறவைகளுடையவும் விலங்குகளுடையவும் அசைவுகள் (தவளை சாடுதல், முயல்).

↓

18. களிமண்/மைதா/பிளாஸ்றிசின் போன்றவை குழைத்து வீடும் சுற்றுப்புறமும் உருவாக்கல் (குழுச் செயல்பாடு).

↓

19. படப் புதிர்கள் செய்தல்.

## பயிற்சித்தாள் – 2.1 படம் பார்த்துக் கூறுங்கள்... வண்ணம் தீட்டுங்கள்.

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- மொழி வளர்ச்சி
- உடல் இயக்க வளர்ச்சி

**திறன்கள்** :

1. பார்த்தும் கேட்டும் புரிந்துகொண்ட நிகழ்ச்சிகள், அனுபவங்கள் போன்றவற்றைக் கருத்துக் கசிவு இன்றி பிறருடன் பகிர்ந்து கொள்ள முடிகிறது. (16)
2. படங்களுக்கு வண்ணம் தீட்ட இயல்கிறது. (5)
3. பொருட்களை ஒப்புமைப்படுத்துவதற்கு கணித மொழியைப் பயன்படுத்த முடிகிறது. (கூடுதல், குறைவு) (39)
4. பொருட்கள் (இயற்கையிலிருந்து கிடைப்பவை/ பயனற்ற பொருட்கள்) பயன்படுத்தி விளையாட்டுப் பொருட்கள் உருவாக்குகிறார்கள் (83)

**கருத்து**: அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, அண்ணன்/ அக்கா, தம்பி/தங்கை போன்றவர்கள் குடும்பத்திலுள்ள நபர்கள் ஆவர். அவர்கள் பல்வேறு வேலைகள் செய்கின்றனர்.

**கருவிகள்**: பயிற்சித்தாள், கிரையான்ஸ், தென்னங் குரும்பை, ஈர்க்கில், நூல்.

**சூழல்** : குடும்பத்தில் உள்ளவர்களின் காரியங்களைக் குறித்துக்கேட்ட பின் செயல்பாடு நடத்துதல்.

**செயல்முறை**

- **கதைக் கூற்று** : சக்கிப்பூனை விழித்தது. உடலை நக்கித் துடைத்தது. மியாவ்... மியாவ். அவள் படுக்கை அறையில் சென்று கட்டிலில் குதித்து ஏறினாள். நே..... சின்னுவும் மின்னுவும் எங்கே? அவர்கள் முன்னதாகவே எழும்பி விட்டார்களா? சக்கிப்பூனை வீட்டின் முன்பகுதியில் ஒடிச் சென்றது. வீட்டின் முன்பகுதியில் சென்ற சக்கி என்னென்ன பார்த்திருக்கும்?
- பயிற்சித்தாள் –2.1. "படம் பார்த்துக் கூறுங்கள்! வண்ணம் தீட்டுங்கள்" அளித்தல்.
- **பட வாசிப்பு**
  - படத்தில் யாரெல்லாம்?
  - சின்னு சக்கியிடம் என்ன கேட்டாள்?
  - சக்கி என்ன கூறியிருக்கும்?
  - தாத்தா என்ன செய்கிறார்? அப்பா என்ன செய்கிறார்? பாட்டியோ?
  - உங்கள் வீட்டில் ஒவ்வொருவரும் என்னென்ன செய்வார்கள்?
- **கதைக் கூற்று** (தொடர்ச்சி) அப்பா செடிக்கு நீர் பாய்ச்சுகிறார். சின்னு கூறினாள் "இங்க பாருங்கப்பா, பூனை அப்பாவுக்கு உதவலாம் என்று கூறுகிறது." அப்பா திரும்பினார். அப்போது தண்ணீர்க்குழாய் பூனைக்கு

நேரானது. குழாயிலிருந்து தண்ணீர் பாய்ந்தது. பூனை நனைந்தது. மியாவ்...... அது ஓடியது. அப்பா சிரித்தார். அப்போது குழாய் அம்மாவின் நேரானது அம்மா நனைந்தாள். ஓ....... இந்த அப்பா..... சின்னு குழாய் வாங்கினாள். அப்போது குழாய் தெரியாமல் அப்பாவின் நேரானது. அப்பா நனைந்தார். அதைப் பார்த்து தாத்தாவும் பாட்டியும் கல கல வென்று சிரித்தார்கள். மின்னு சோப்புடன் வந்தாள். இனி குளித்தாலோ? அதைக் கேட்டு எல்லோரும் சிரித்தனர். (இந்தக் கதையில் ஒருவரைப் பற்றி மட்டும் கூறவில்லை. அது யாரை என்று கூறமுடியுமா?)

- வீட்டில் உள்ள நபர்களுக்கு மட்டும் வண்ணம் தீட்டுவோம்.
- இப்போது படத்திலுள்ளவர்களுக்கு வண்ணம் தீட்டுங்கள்.

**ஆசிரியைக்கு :** குடும்பத்திலுள்ளவர்களின் உறவுப் பெயர்களைக் கூறும்போது வட்டார மாற்றங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும் (எடு: அம்மா, உம்மா, பெரியம்மா, அப்பாத்தா, அம்மாத்தா, பாட்டி, ஆச்சி, போன்றவர்கள்)

**தென்னங்குரும்பை வண்டி உருவாக்கலாம்:**

சின்னுவும் மின்னுவும் குரும்பையுடன் பாட்டியின் அருகே வந்தனர். பாட்டி...... குரும்பை வண்டி செய்து தருவீங்களா? பாட்டி இருவருக்கும் தென்னங்குரும்பை வண்டி செய்து கொடுத்தார். சின்னுவும் மின்னுவும் வண்டி உருட்டி விளையாடினர். உங்களுக்கும் விளையாட வேண்டாமா? குரும்பைகளை மூன்று குழுக்களாக இடுதல். எந்த குழுவில் கூடுதல்/ குறைவு? கணித வாய்ப்புகளைப் பயன்படுத்துகின்றனர்.

ஆசிரியையின் பரிந்துரைக்கேற்ப குழந்தைகள் வண்டி உருவாக்குகிறார்கள்.

## மதிப்பீடு:

- படத்திலுள்ள கருத்துகள் தயக்கமின்றி பிறருடன் பங்கு வைக்க இயல்கிறது.
- பரிந்துரைகளுக்கேற்ப படத்திற்கு வண்ணம் தீட்ட இயல்கிறது.
- பரிந்துரைக்கேற்ப விளையாட்டுப் பொருட்களை உருவாக்குகிறார்கள்.

## பயிற்சித்தாள் - 2.2.. மணல்படம் தயாரிப்போம்

**வளர்ச்சி மண்டலங்கள்:**
- உடல் இயக்க வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு.

**திறன் :** இயற்கை பொருட்கள் (மணல், மரப்பொடி) பயன்படுத்தி கொளாஷ் தயாரித்தல் (83)

**கருத்து:** பலவகை தாவரங்களை வீட்டின் சுற்றுப்புறத்தில் வளர்ப்பதுண்டு.

**கருவிகள் :** பயற்சித்தாள், வண்ணமணல்/பொடி, பசை

**சூழல் :** வீட்டின் சுற்றுச் சூழலில் உள்ள தாவரங்களையும் பூக்களையும் குறித்துக் கேட்ட பின் பயிற்சித்தாள் வெளியிடுதல்.

செயல்முறை

- **கதைக்கூற்று** : மின்னுவும் சின்னுவும் பூந்தோட்டத்திற்கு வந்தனர். "ஹாய், மின்னு..... சக்கி..... இதைப் பார்த்தாயா? நமது செடியில் பூ மலர்ந்துள்ளது. "அக்கா நான் முகர்ந்து பார்க்கட்டுமா?" "ஹாய்! நல்ல மணம்" சக்கி செடியில் உரசியது. "அக்கா இப்பூவை நான் பறிக்கட்டுமா?" "ஐயோ! பூவைப் பறிக்காதே."
"வா.. மின்னு... நான் உனக்கு பூ செய்து தருகிறேன்".
சின்னு காகிதத்தில் பூ வரைந்தாள். பூவில் ஒரு பட்டாம் பூச்சி வந்து அமர்ந்தது. பட்டாம் பூச்சி அவர்களைப் பார்த்து. "நல்ல பூ! உண்மையிலேயே பூ என்றுதான் நான் நினைத்தேன்." பட்டாம் பூச்சி பறந்து சென்றது. சின்னு வரைந்த பூவை உங்களுக்கு பார்க்க வேண்டாமா?

பயிற்சித்தாள் - 2.2. "மணல் படம் தயாரிப்போம்!" அளித்தல்

- பயிற்சித்தாளில் தரப்பட்டுள்ள படத்தில் பசை தேய்த்தல்.
- பசை தேய்த்த பகுதியில் குழந்தை வண்ணம் கலந்த மணல் தூவுதல்.
- காய்ந்த பின் காட்சிப் படுத்துதல்.

**ஆசிரியைக்கு :** பல வண்ணங்கள் கலந்த மணலைப் பயன்படுத்தலாம். வண்ணப் பொடிகளையும் பயன்படுத்தலாம்.

## மதிப்பீடு :

- மணல் படம் முழுமையாக்கப் பட்டுள்ளது.
- படத்தின் கவர்ச்சித்தன்மை

## பயிற்சித்தாள் - 2.3 வரைந்து இணைப்போம்

**வளர்ச்சி மண்டலம்:** அறிவுசார் வளர்ச்சி

**திறன் :** பொருட்கள்/படங்களை உற்று நோக்கி குழுவில் சேராததைப் பிரித்தறிந்து காரணம் கூற இயல்தல் (33)

**கருத்து :** கட்டில், மேசை, நாற்காலி, பாத்திரங்கள் போன்ற பொருட்கள் வீட்டில் உள்ளன.

**கருவிகள் :** பயிற்சித்தாள், பாட்டுகள்

**சூழல் :** வீட்டில் ஏறலாம் விளையாட்டு, வீட்டில் பயன்படுத்தும் பொருட்கள் போன்ற செயல்பாடுகளின் தொடர்ச்சியாக பயிற்சித்தாள் அளிக்கலாம்.

செயல்முறை

- **விளையாட்டு** : **ஐய் ஐய் விளையாட்டு**

  * தரையில் சமையல் அறை, வரவேற்பறை, படுக்கை அறை, குளியல் அறை போன்றவற்றை சாக்பீசால் வரைதல். ஒவ்வொரு அறையையும் குழந்தைக்குப் புரியும் படியாக அவ்வறையில் பயன் படுத்தும் பொருளையும் வரைய வேண்டும். (சமையல் அறை - குடம், வரவேற்பறை - தொலைக்காட்சி, படுக்கை அறை - கட்டில், குளியல்அறை - வாளி)

- **பாடல்**

  * ஆசிரியை பாடுதல்
  அறையில் ஏறுவோம் நண்பரே (2)
  ஓடியோடி அறையில் ஏறுவோம் (3)

(குழந்தைகள் வட்டத்தில் ஓடுதல்)

* ஆசிரியை பாட்டு பாடி முடிந்ததும் குழந்தைகள் ஓடி அவர்களுக்கு விருப்பமுள்ள அறையில் ஏறுதல்
* ஏறிய உடன் அறையில் உள்ள ஏதாவது ஒரு பொருளின் பெயரை ஒவ்வொருவரும் கூற வேண்டும்.
* பெயர் சொல்லவில்லையெனில் விளையாட்டிலிருந்து வெளியேற்றப்படுவர்.
* பொருளின் பெயர் கூறினால் அவர் ஐய் என்பார்கள் (சமையல் அறை கி ஜய்! தொடர்ந்து குழந்தைகளும் ஆசிரியையும் சேர்ந்து பாடுகிறார்கள்.

"எனக்கு நல்லொரு வீடுண்டு
வீட்டில் அறைகள் பலவுண்டு.
படுத்துறங்க படுக்கை அறை
சமையல் செய்ய சமையல் அறை
குளிக்க நல்லலொரு குளியலறையும் ..........
வரிகளைச் சேர்த்துப் பாடுதல்.

- **கதைக்கூற்று:** உண்ணிக்குட்டா வா, நாம் ஒளிந்து விளையாடுவோம். சின்னுவும் மின்னுவும் உண்ணிக் குட்டனும் சக்கிப் பூனையும் ஒளிந்து விளையாடத் தொடங்கினர். "நான் எண்ணுவேன்" சின்னு கூறினாள். 'ஒன்று, இரண்டு, மூன்று.....' எல்லோரும் ஒளியுங்கள்... ஒய்..... அனைவரும் ஒளிந்தனர். சின்னு பதுங்கிப் பதுங்கிச் சென்று பார்த்தாள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு அறையில் ஒளிந்திருந்தனர். படுக்கை அறையில் சின்னு ஏறினாள். கட்டிலில் யாரோ இழுத்துப் போர்த்திக்கொண்டு படுத்திருந்தார். உண்ணிக் குட்டனாக இருப்பான். அவள் போர்வையை இழுத்தாள். இரண்டு தலையணை நீளமாக வைக்கப்பட்டிருந்தது. கட்டிலின் அடியில் ஒரு அசைவு. அவள் 'பார்த்தேன் பார்த்தேன்' சொல்லிக் கொண்டே குனிந்து பார்த்தாள். அது நாய்க் குட்டியாக இருந்தது. உண்ணிக் குட்டனைக் காணவில்லை. எங்கே ஒளிந்தான்? போம்..... போம்...... போம்....என்ன சத்தம் சின்னு வாசற்கதவின் அண்மையில் ஓடி வந்தாள். ஒரு 'டெம்போ', சின்னு ஓடி வந்து நுழைவாயிற் கதவைத் திறந்தாள். அப்போது உண்ணிக் குட்டன் ஓடி வந்து தொட்டான். ''சின்னு 'தோல்வியடைந்தாயே.' அவன் கூவினான். "இதோ பார் உண்ணிக்குட்டா! டெம்போவில் என்னவெல்லாம் கொண்டு வந்துள்ளனர் என்று பார்!'' என்னென்ன பொருட்கள் கொண்டு வந்துள்ளனர்? குழந்தைகள் ஊகித்துக் கூறுதல். சரி நாமும் பார்ப்போம்.
- பயிற்சித்தாள் – 2.3. 'வரைந்து' 'இணைப்போம்!' அளித்தல்.
- **படவாசிப்பு**
  - டெம்போவில் கொண்டு வந்த பொருட்கள் என்னென்ன?
  - படத்தை உற்று நோக்கிக் கூறுதல்.
  - அறைகளின் பெயர் என்ன?
  - அறையில் என்னென்ன உள்ளன?

- இவை ஒவ்வொன்றும் எந்தெந்த அறைகளில் வைக்க வேண்டும்?
- கலந்துரையாடலுக்குப் பின் குழந்தைகள் பொருட்களைத் தகுந்த அறைகளில் வரைந்து இணைத்தல்.

## மதிப்பீடு :

- பொருட்களைத் தகுந்த அறைகளில் வரைந்து இணைக்கப்பட்டுள்ளது.
- வரைந்து இணைத்துள்ளதன் உத்தியைக் கூற இயல்கிறது.

## பயிற்சித்தாள் — 2.4 பூ வரைப்போம் வண்ணம் தீட்டுவோம்

**வளர்ச்சி மண்டலங்கள்:**
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு
- உடல் இயக்க வளர்ச்சி
- மொழி வளர்ச்சி

**திறன் :** இயற்கையை இரசிக்கவும் ஓவியம் வாயிலாக வெளியிடவும் வண்ணம் தீட்டவும் இயல்கிறது. (80)

**கருத்து :** பலவகை தாவரங்கள் வீட்டின் சுற்றுப்புறத்தில் நட்டு வளர்த்தப்படுகிறது.

**சூழல் :** பூந்தோட்டத்திற்கு இயற்கை நடத்தல் நடத்திய பின்.

**செயல்முறை**

- அனுபவம் பகிர்ந்து கொள்ளுதல்
  - பூந்தோட்டத்தில் எவற்றையெல்லாம் பார்த்தீர்கள்? (குறு வினாக்கள் வாயிலாக குழந்தைகள் பார்த்த காட்சிகளைக் கூற வாய்ப்பு அளிக்க வேண்டும்.

- **கதைக்கூற்று** (தொடர்ச்சி)
  - மின்னு காலையில் எழுந்தாள். வாயும் முகமும் கழுவிய பின் அவள் பூந்தோட்டத்தை நோக்கி ஓடினாள். ஹாய்! செடியில் நேற்று பார்த்த மொட்டு விரிந்துள்ளது. அழகான பூ! அருமையான நிறம்! மணமும் உண்டு. மென்மையான இதழ்கள். மின்னுவிற்கு பூந்தோட்டத்தில் உள்ள பூவை வரைக்க ஆவல் தோன்றியது. தனது நண்பர்களுக்கு காட்டிக் கொடுக்க வேண்டும். மின்னு நினைத்தாள். மின்னு வரைந்த செடியின் படத்தைப் பார்!

- பயிற்சித்தாள் – 2.4 “பூ வரைப்போம் வண்ணம் தீட்டுவோம்”. அளித்தல்.
  - மின்னு வரைந்த செடியில் பூ வரைந்து வண்ணம் தீட்டலாமா?
  - செடியில் பூ வரைந்து வண்ணம் தீட்டுகிறார்கள்.

- **கதைக்கூற்று** (தொடர்ச்சி) : “எங்கிருந்து வருகிறது இந்த மணம்? பிங்கு தேனீ புதிதாக விரிந்த பூவைத் தேடிப் பறந்தது. பிங்கு வந்த வழியை வரைவோமா? தேனீயைப் பூவின் அருகே கொண்டு வருவோம்.

வரைந்து முழுமைப்படுத்துவோம். (முன் எழுத்துச் செயல்பாடு)

**மதிப்பீடு :**

- பூ வரைந்து வண்ணம் தீட்ட இயல்கிறது.
- வண்ணம் தீட்டுவதில் உயர்ந்த தரம்
- வழி வரைக்க இயல்கிறது.

• **தொடர்ச் செயல்பாடு:** அலகுள்ள காகம்

கா கா காகம்
கருமை வண்ணக் காகம்
ஹாய் ஹாய் காகம்.

நான் சக்கிப் பூனையைக் குறித்த ஒரு பாட்டு பாடப்போகிறேன். பாட்டி கூறினார்.

1) மீசையுள்ள பூனை
மியாவ் மியாவ் பூனை
வெள்ளை நிறப் பூனை
ஹாய் ஹாய் பூனை
(எல்லோரும் சேர்ந்து பாடினர்)

2) வாலுள்ள நாய்
பௌ பௌ நாய்
கருமை நிற நாய்
ஹாய் ஹாய் நாய்

3) சின்னு வரைந்த படத்தைக் குறித்து பாடுவோம்.
மணமுள்ள பூ
...................... பூ
...............................
ஹாய் ஹாய் பூ

# மையக் கருத்து 3 நானும் எனது உடலும் (தூய்மை)

ஒவ்வொரு புதிய மையக்கருத்து வழங்கும் போதும் முன்னரே வழங்கிய மையக்கருத்தின் கருத்துகள் மீண்டும் வரலாம். வீடு, குடும்பம் போன்றவற்றில் சில கருத்துகள் இடம் பெறும். நானும் என் உடலும் என்ற மையக்கருத்திலும் இந்த கருத்துகள் இடம்பெறலாம். ஆரோக்கியம் என்ற மையக்கருத்திலும் இடம் பெறும். இவை சுழல் முறையிலுள்ள அனுபவங்களாகும் என்ற எண்ணம் வேண்டும். பயிற்சித்தாளிலும் ஒன்று போலுள்ள கருத்து இடம் பெறலாம். இவ்வாறான மீள் அனுபவச் சூழலில் கூடுதல் விவரித்தலும் கலந்துரையாடலும் நடத்த வேண்டும்.

## செயல்பாட்டு வரிசை

1. உடல் உறுப்புகள் கருத்தாக வரும் பாட்டுகள், சைகைப் பாடல்கள்.

↓

2. தூய்மைப்படுத்தும் செயல்பாடுகள்.

↓

3. சுதந்திரமான உரையாடல். (தனிநபர் சுத்தம்)

↓

4. பயிற்சித்தாள் 3.1. "சேர்ந்து பாடுங்கள் சுற்றி வட்டம் வரையுங்கள்" அளித்தல்.

↓

5. பொம்மலாட்டம்/கதை, கழிப்பறை பயன்படுத்துவதில் முக்கியத்துவம்.

↓

6. கதை சொல்லுதல் - பயிற்சித்தாள் 3.2 "அடுக்கி வையுங்கள் சுத்தப்படுத்துங்கள்" அளித்தல்.

↓

7. நடிப்பு விளையாட்டுகள். (பல் தேய்த்தல், குளித்தல், சோப்பு தேய்த்தல்.)

↓

8. பயிற்சித்தாள் 3.3 "நான் பயன்படுத்துபவை" அளித்தல்.

↓

9. நிறம் அளித்தல்.

↓

10. புதிய வரிகளை உருவாக்கிப் பாடுதல்.

↓

11. வகுப்பறை சுத்தம்.

↓

12. கைக்குட்டையைக் கழுவிக் காயப்போடுதல்.

↓

13. கையில் அழுக்கு புரண்டால். பாட்டு மீண்டும் பாடுதல் (தினமும் குளிக்க வேண்டும். பல் தேய்க்க வேண்டும் போன்ற வரிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் (இதற்குத் தேவையான பொருட்கள்/கருவிகள் கலந்துரையாடல்.

↓

14. தென்னங்குரும்பை மனிதன் செய்தல்.

↓

15. பெருமை பேசுதல்.

↓

16. விடுகதை

↓

17. பாத்திர நடிப்பு

**பயிற்சித்தாள் – 3.1 சேர்ந்து பாடுங்கள் சுற்றி வட்டம் வரையுங்கள்**

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- மொழிவளர்ச்சி
- அறிவு சார் வளர்ச்சி

**திறன்கள்** :
1. கதைப்பாடல்களின் வரிகளைப் படத்துடன் இணைத்துக் கூற இயல்தல். (20)
2. ஆரோக்கிய பழக்கவழக்கங்கள், சுகாதாரப் பழக்கவழக்கங்கள் போன்றவைகளைக் குறித்து அறிதல். (36)

**கருத்து** : உடலைச் சுத்தமாக வைக்க கவனிக்க வேண்டும். குளிக்க வேண்டும், பல் தேய்க்க வேண்டும், நகம் வெட்ட வேண்டும், சுத்தமான ஆடை அணிய வேண்டும்)

**கருவிகள்** : குழைத்த மண், வாளி, தண்ணீர், செய்தித்தாள் காகிதம், துணியின் துண்டுகள், கிரையான்ஸ்/ பென்சில்.

**சூழல்** : 'பொம்மை' பக்கம் 200 'நல்ல செயல்கள்' என்ற பாடல் அறிமுகப்படுத்தும் சூழல்.

**செயல்முறை**

- **பொம்மலாட்டம்** : கீழே தரப்பட்டுள்ள கதையை பொம்மலாட்டமாக வழங்குதல் (கையெழுத்துப் படிவம் தயாரிக்க வேண்டும்)

மீனுவும் ஜோஜியும் சிரட்டைப் புட்டு அவித்தனர். மண்ணைக் குழைத்து சிரட்டையில் நிறைத்தனர். மீனு மூன்று புட்டு செய்தாள். "ஜோஜீ, நீ எத்தனை புட்டு அவித்தாய்?" நீயே எண்ணிப்பார். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு. "நான்கு புட்டு அவித்துள்ளாய்". அப்போது அம்மா உணவு உண்ண அழைத்தார். அவர்கள் உணவு உண்ணச் சென்றனர். அம்மா புட்டு பரிமாறி கடலைக் கறியும் ஊற்றினார். இருவரும் உண்ணத் துவங்கினர். பொறுங்கள்! 'எனம்மா'? "இரண்டு பேரும் கையைக் காட்டுங்கள்."

"கை சுத்தமாக உள்ளதா?"

"நான் கையை நன்றாகக் கழுவினேன்" மீனு கூறினாள்.

"நான் நன்றாகத் துடைத்தேன். அழுக்கொன்றுமில்லை". ஜோஜி கூறினான். மீனு பார்த்தாள். சரிதான் ஜோஜியின் கையில் அழுக்கில்லை. யார் கை சுத்தமானதாக இருக்கும்? (சுதந்திர பிரதிபலிப்பு) ''ஜோஜி, கைகள் திருப்பி வை'', ஜோஜி கைகளைத் திருப்பி வைத்தான். "இப்போது பார்?" மூவரும் பார்த்தனர். நகத்தின் இடையில் கறுப்பாக ஏதோ உள்ளது. மண்! ''அம்மா நான் கை கழுவிவிட்டு வருகிறேன்."

மீனுவின் கையைக் காட்டு. மீனு கைகளைத் திருப்பி வைத்தாள்.

"அதோ! நகங்களுக்கிடையில் மண்."

"நான் கை கழுவினேன்" மீனு கூறினாள்.

"தண்ணீர் ஊற்றினால் மட்டும் கை கழுவியதாகாது. குழந்தாய் நீ மண்ணில் விளையாடினாயே. நன்றாகக் கழுவ வேண்டும். நகமும் வெட்ட வேண்டும்."

அம்மா இருவருக்கும் ஒரு பாடல் பாடிக் கொடுத்தார்.

“உள்ளம் சுத்தமாய் இருப்பதுபோல்......”

"பொம்மையில்” உள்ள இப்பாடலை

ஆசிரியையும் குழந்தைகளும் சேர்ந்து பாடுதல். (பக்கம் 201)

- பயிற்சித்தாள் – 3.1 சேர்ந்து பாடுங்கள் சுற்றி வட்டம் வரையுங்கள்” அளித்தல்.
- **நடிப்பு** :
  - பாடலில் உள்ள காட்சிகள் கூறுவதற் கேற்றவாறு நடித்தல் /சைகை காட்டுதல்.
  - படத்தைப் பார்த்து மீனுவும் ஜோஜியும் செய்யும் செயல்களைக் குழந்தைகள் கூறுதல்.
- **வட்டம் வரைதல்:** ஆசிரியை இரண்டு வரிகள் பாடும் போது கருத்திற்கு ஏற்ற படத்திற்கு வட்டம் வரைதல்.
- **உருவாக்குதல் :** ஆசிரியை அனைவருக்கும் குழைத்த மண்ணைக் கொடுத்தல் (சிறிய உருண்டைகள்)
  - * உள்ளங்கையில் வைத்து பரத்தி ஆப்பம் செய்தல்.
  - * செய்தித்தாள் காகிதத்தில் 4 வீதமுள்ள குழுக்களாக்கி காட்சிப்படுத்துதல். (கணிதத்தோடு தொடர்புடைய வாய்ப்புகளைப் பயன்படுத்தலாம்)
  - * துணித்துண்டுகள் பயன்படுத்தி கைகளை சுத்தம் செய்தல்.
  - * தொடர்ந்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு குவளைத் தண்ணீரில் கைகளை அமிழ்த்திக் கழுவுதல். (ஒருவர் கழுவிய பின் வேறு தண் ணீர் குவளையில் அடுத்தவர் கழுவ வேண் டும்.)
  - * சுத்தப்படுத்திய கைகளிலும் அழுக்கு உள்ளது என்று உணர முடிகிறது.

## மதிப்பீடு

- பாடலில் உள்ள கருத்துகளை படத்துடன் தொடர்புபடுத்த இயல்கிறது.
- ஆரோக்கியம், சுத்தம் கடைபிடித்தல் போன்ற பழக்கங்களை பிரித்தறிந்து கூற இயல்கிறது.

## பயிற்சித்தாள் – 3.2 அடுக்கி வையுங்கள், சுத்தப்படுத்துங்கள்

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- மொழி வளர்ச்சி
- சமூக உள வளர்ச்சி

**திறன்கள்** :

1. ஆரோக்கியம், சுத்தம், சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் குறித்து அறிதல் (47)
2. பொருட்களுடையவும் நிகழ்வுகளுடையவும் படங்களை உற்று நோக்கி விவரிக்கவும் கண்டடையவும் வெளியிடவும் இயல்தல்.

**கருத்து** : வீடும் சுற்றுப்புறமும் வகுப்பறையும் சுத்தமாகப் பாதுகாக்க வேண்டும்.

**கருவிகள்** : வகுப்பறை சுத்தம் செய்யும் கருவிகள்.

**சூழல்** : சுத்தம் செய்தல் என்ற செயல்பாட்டைத் தொடர்ந்து.

**செயல்முறை**

- **கதைக்கூற்று** : வகுப்பில் குழந்தைகள் ஓடி ஆடி விளையாடுவதைக் கண்டபோது மேசைக்கும் நாற்காலிக்கும் விளையாட ஆவல் தோன்றியது. மேசை நகர்ந்து நகர்ந்து மூலையில் சென்றிருந்தது. நாற்காலிகள் "தொட்டுப்பிடித்து" விளையாடியது, கரும்பலகைத் துடைப்பான் தவளைச் சாட்டம் நடத்தியது. நாள்காட்டி "காற்றில் பறந்து வட்டம் சுற்றியது." குடைகள் நொண்டி விளையாடின. மொத்தத்தில் கலகலப்பு. ஆசிரியை வருகிறார். குழந்தைகள் வருகின்றனர். என்ன செய்யலாம்? அவைகள் அசையாமல் அங்கேயே நின்றன. எல்லோரும் வகுப்பில் வந்து பார்த்தபோது, வகுப்பறையே அலங்கோலப்பட்டுக் கிடக்கிறது. யார் இவ்வாறு செய்தது? ஒவ்வொரு பொருளையும் அந்தந்த இடத்தில் வைப்போமா?
- பயிற்சித்தாள் – 3.2 "அடுக்கி வையுங்கள்! சுத்தப்படுத்துங்கள்!" அளித்தல்.
  * ஒவ்வொரு பொருட்களையும் அந்தந்த இடம் கண்டு சுதந்திரமாக இணைத்தல்.
  * அனைவரும் வரைந்தது ஒரே மாதிரியாக உள்ளதா?
  * வரைந்து இணைத்துள்ளதன் உத்தியை விளக்க வாய்ப்பு அளித்தல்.
  * அப்படியென்றால் நாமும் நம்முடைய வகுப்பறையை சுத்தம் செய்யலாமா?
  * வகுப்பறையில் உள்ள பொருட்களை அடுக்கி வைத்தல்.

**பாடல்** : அப்போது ஒரு பாடல் கேட்டது. நாற்காலியும் மேசையும் எல்லாம் பாடுகின்றன.

தொட்டேன் பிடித்தேன் விளையாடலாம்
காற்றில் பறந்து நடக்கலாம்.
தவளைச் சாட்டம் சாடலாம்.
நொண்டி விளையாடி ரசிக்கலாம்.

மேசையும் நாற்காலியும் குடையும் நாள்காட்டியும் குழுவாகப் பாடத்துவங்கினர். சிறு நாற்காலிகள் ஒருவருக்கொருவர் கை தட்டிப் பாடி ரசித்தன. குழந்தைகள் தாளமிட்டு ரசித்தனர்.

## மதிப்பீடு:

- சரியான இடத்தில் இணைத்துள்ளனர்.
- வகுப்பறை சுத்தம் செய்வதில் பங்களிப்பு.
- வரைந்து இணைத்துள்ளதன் உத்தியை விவரிக்கிறார்கள்.

## பயிற்சித்தாள் – 3.3 நான் பயன்படுத்துபவை

**வளர்ச்சி மண்டலம்** : மொழி வளர்ச்சி

**திறன்** : படங்கள், பொருட்கள், இயற்கை போன்றவற்றைப்

பார்த்து கருத்துகள் கூற இயல்கிறது. (14)

**கருத்து** : உடலைத் தூய்மையாகப் பாதுகாக்க வேண்டும்.

**பொருட்கள்** : சோப்புப்பெட்டி/ அட்டை (cover) / ராப்பர், பற்பசை அட்டை, கத்தரிக்கோல், பசை

**சூழல்** : சுத்தம் சுகாதாரப் பழக்கவழக்கங்களோடு தொடர்புடைய கலந்துரையாடல், 'பொம்மை' பக்கம் 90-ல் 'உடலைப் பாதுகாக்க வேண்டும்' என்ற செயல்பாட்டின் கலந்துரையாடல்.

**செயல்முறை**

- **பெயர் கூறுதல்**
  - உடலைத் தூய்மை செய்ய பயன்படுத்தும் பொருட்கள். (சோப்பு, பற்பசை, தூரிகை, செருப்பு) அட்டைகள், பெயர்/பட அட்டைகள், ராப்பர்கள், போன்றவற்றை சேகரித்து ஆசிரியை காட்சிப்படுத்துதல்.
  - ஒவ்வொன்றின் பெயர்களை ஆசிரியையும் குழந்தைகளும் சேர்ந்து வாசித்தல்.
- பயிற்சித்தாள் – 3.3 "நான் பயன்படுத்துபவை" அளித்தல்.
- **படவாசிப்பு**
  - படத்தில் குழந்தைகள் என்ன செய்கின்றனர்?
  - குளிக்கும் குழந்தைகளுக்குத் தேவையான பொருட்கள் ராப்பர் / கவர் எல்லோரும் எடுத்தல்.
  - கீழேயுள்ள குழந்தைகள் என்ன செய்கின்றனர்? அவர்களுக்குத் தேவையான பொருட்களின் கவர் எது?
- **ஒட்டுதல்**
  - குழந்தைகள் திரட்டி வந்த பெயர்/பட அட்டைகள், கவர்கள், தேவையுள்ள அளவில் வெட்டியெடுத்து பயிற்சித்தாளில் தகுந்த கட்டத்தில் ஒட்டுதல்.
  - சுயமாகவும் பிறருடன் கொடுத்தும் பெயர்/ பட அட்டைகள் ஊகித்து கூறுதல்.

## மதிப்பீடு :

- அட்டைகளும் ராப்பர்களும் திரட்டியுள்ளனர்.
- முன் வாசிப்பில் ஈடுபட இயல்கிறது.
- படத்திற்குத் தகுந்தவைகளைத்தான் ஒட்டியுள்ளனர்.

## பயிற்சித்தாள் – 3.4 எவ்வழி செல்ல வேண்டும்?

**வளர்ச்சி மண்டலம்** : அறிவு சார் வளர்ச்சி

**திறன்** : ஆரோக்கியம், சுத்தம், சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் குறித்து அறிதல் (36)

**கருத்து** :
- உடலைத் தூய்மையாகப் பாதுகாத்தல்.
- உடலைத் தூய்மையாகப் பாதுகாக்கவில்லை எனில் நோய் வரும்.

**சூழல்** : மையக் கருத்தின் மதிப்பிடலைச் செயல்பாடாக வழங்கலாம்.

**செயல்முறை**

- பயிற்சித்தாள் 3.4. "எவ்வழி செல்ல வேண்டும்?" அளித்தல்.

- **பட வாசிப்பு**
  - படத்தில் என்னென்ன உள்ளது?
  - ஒவ்வொரு குழந்தையும் என்னென்ன செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.?
  - பயிற்சித்தாளில் வழிகள் பழக்கப் படுத்துதல்.
  - எவ்வழியே செல்வது உங்களுக்கு விருப்பம்?
  - தேர்ந்தெடுத்த வழிக்கு வண்ணம் அளித்தல்.
  - வண்ணம் அளித்த வழியை ஏன் தேர்ந்தெடுத்தனர் என்பதை விவரித்தல்.

**மதிப்பீடு :**

- சரியான வழி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- ஏன் என்று காரணம் விவரிக்க இயல்கிறது.
- நுட்பமாக வழிக்கு வண்ணம் அளிக்கப்பட்டுள்ளது.

## மையக் கருத்து 4 மழையும் காலநிலையும்

உருவாக்கச் செயல்பாட்டுடன் தொடர்புள்ள பயிற்சித்தாளை அளிக்கும் போது குழந்தைகளுக்கு கூடுதல் உதவி தேவையாகும். அவர்களின் வேகம் குறைவாக இருக்கும். ஒவ்வொரு பரிந்துரையையும் கொடுத்து அதை எல்லோரும் முழுமைப்படுத்திவிட்டனர் என்பதை உறுதி செய்த பின்னரே அடுத்த செயல்பாட்டிற்குச் செல்ல வேண்டும். சிலவேளைகளில் மாதிரியைக் காட்டிக் கொடுக்க வேண்டும். கடினம் தோன்றும் குழந்தைக்கு உதவ வேண்டும். ஆசிரியை, படைப்புகளை குழந்தைக்கு உருவாக்கிக் கொடுக்கக்கூடாது. குழந்தைகளின் திறன்களை வளர்க்க வேண்டும். இதை கருத்திற் கொள்ள வேண்டும். சில புதிய செயல்பாட்டுக் குறிப்புகள் இங்கே தரப்பட்டுள்ளன. இவை அனைத்து வளர்ச்சி மண்டலங்களுக்கும் முன்னுரிமை அளிக்கக்கூடியதாக உள்ளது. தகுந்ததென்று தோன்றுவதை பயன்படுத்த வேண்டும்.

### செயல்பாட்டு வரிசை

1. கோடைக்காலம் – கதை.

↓

2. பயிற்சித்தாள் 4.1 “வழி கண்டுபிடிப்போம்” அளித்தல். (அண்மையில் / தூரத்தில்)

↓

3. மழைப்பாடல் – (1)

↓

4. குடைப்படம் வரைதல் (ஸ்டென்சில்) நிறம் அளித்தல்.

↓

5. எத்தனை குடைகள்? எண்ணுதல் குழுக்களாக்குதல்.

↓

6. குடையில் மழை வரைதல்.

↓

7. கொளாஷ் குடை, பயிற்சித்தாள் 4.2, ‘வரைவோம் ஒட்டுவோம்’ அளித்தல்.

↓

8. குடையில் ஏறுவோம் விளையாட்டு.

↓

9. மழைப்பாடல் (2)

↓

10. மழைப்பயண அனுபவம் கூறுதல்.

↓

11. பயிற்சித்தாள் 4.3. ‘விளையாட்டுப் படகு’ அளித்தல்.

↓

12. படகு செய்தல். (ஓரிகாமி)

↓

13. படகுகளை குழுக்களாக்குதல் (3 வரை) கூடுதல் – குறைவு கண்டு பிடித்தல்.

↓

14. ஜிக்ஸோ பஸில்கள். (படகு, குடை, மீன்)

↓

15. தரையில் படம் வரைதல். (ஆறு, மீன், படகு)

↓

16. கதை – மண்ணாங்கட்டியும் கரியிலையும்.

↓

17. சூடும் குளிரும் தொட்டு அறிவோம்.
(சுடு தண்ணீர் நிரப்பப்பட்ட தம்ளர், தண்ணீர், குளிர்ந்த தண்ணீர்)

↓

18. மழைக்காலக் காட்சிகள், அனுபவங்கள் கூறுதல்.

↓

19. பயிற்சித்தாள் 4.4. "ஹாய்! மழை" அளித்தல். (படவாசிப்பு, வண்ணம் தீட்டுதல்)

↓

20. மழைப்பாடல் (3)

↓

21. 'மழைநீரில் விழுந்த எறும்பு' கதை கண்டுபிடி. 4.5 "கதை கூறு வோமா?" அளித்தல்.

↓

22. மழை நடனம் / எய்ரோபிக்ஸ் நடனம். (தப்பித்தவர்களும் நண்பர்களும் சேர்ந்து நடனம்)

↓

23. குடை இல்லாதவர்களுக்கு குடை அளித்தல் – உருவாக்கல். (உருளைக் கிழங்கு / பெரிய வெங்காயம் / காரட் குடையின் வடிவில் வெட்டி. வண்ணக் கலவையில் பதித்து அச்சு செய்தல்.)

↓

24. படம் (குடை) பயன்படுத்தி மேலே/கீழே வெளியிடுதல், குடை, தொப்பி, மழை மேலங்கி இவற்றின் பயன்களைக் கூறுதல்.

↓

25. மழையில் / தண்ணீரில் / சகதியில் நடக்கும் அனுபவம் நடித்தல்.

↓

26. வினாவிடை பாடல்.

↓

27. படம் காட்டுதல் விளையாட்டு.

↓

28. விடுகதை கூறி விளையாடலாம். (மீன், தவளை, குடை.....) இயற்கையை உற்று நோக்கி நடத்தல். (மழைக்கால மாற்றங்கள் – செடியின் வளர்ச்சி, உயிரினங்கள்.....)

↓

29. பயிற்சித்தாள் 4.6. "மழைக்காலமும் கோடைக்காலமும்" அளித்தல் – வேறுபாடு காணல்.

↓

30. படம் அளித்தல். (பயிற்சித்தாள் 4.6)

↓

31. குழுப்பாடல் – (மழை/படகுப்பாடல்) தாளமிட்டுப் பாடுதல்.

↓

32. காகிதக் குடை உருவாக்கல். (கறுப்பு காகிதம் வெட்டியெடுத்து துண்டுகள் சேர்த்து ஒட்டுதல்)

↓

33. குடை ஆல்பம்.
(பல–வகை குடைகளின் படங்கள் திரட்டுதல் / கத்தரிக்கோல் பயன்படுத்தி வெட்டுதல் / ஒட்டுதல்.)

↓

34. பயிற்சித்தாள் 4.7. "காற்றின் குறும்பு" அளித்தல். எண்ணுதல்/ கதை கூறி மீதி கதை முழுமை செய்தல். (பொம்மை – வளங்கள்)

## பயிற்சித்தாள் – 4.1 வழி கண்டு பிடிப்போம்.

**வளர்ச்சி மண்டலங்கள் :**
- உடல் இயக்க வளர்ச்சி
- மொழி வளர்ச்சி

**திறன்கள் :**
1. முன் எழுத்துச் செயல்பாடுகளில் ஈடுபட இயல்கிறது (13)
2. பொருட்களுடையவும் நிகழ்ச்சிகளுடையவும் படங்களை உற்று நோக்கி விவரங்கள்,

கண்டறிந்தவைகளை வெளியிட இயல்கிறது.

**கருத்து** : மழை பெய்யும் காலமும் மழை பெய்யாத காலமும் உள்ளது.

**கருவிகள்** : பயிற்சித்தாள், கிரையான்ஸ்

செயல்முறை :

- **கதைக் கூற்று** கோடைக்காலம் வந்தது. கடுமையான சூடு. மரங்களின் இலைகள் உதிர்ந்து விட்டன. குளம் வற்றி வரண்டது. தண்ணீர் குறைவாக உள்ளது. மீன்கள் வருந்தின. குழந்தைகளா! நாம் இறக்கப் போகிறோம். என்ன செய்வது? மீனம்மா கூறினாள். ஆமை தன் நண்பர்களான மீன்களின் வருத்தத்தைக் கேட்டது. வற்றி வரண்ட குளத்தில் அவர்கள் எவ்வாறு வாழ்வார்கள்? ஆமை ஒரு வழி கண்டடைந்தது. தூரத்தில் உள்ள குளத்திற்கு அவர்களை அழைத்துச் சென்றது. மீன்கள் மகிழ்ந்தன. மீனம்மாவையும் குட்டிகளையும் குளத்திற்குக் கொண்டு செல்லுங்கள்....
- பயிற்சித்தாள் 4.1 "வழி கண்டு பிடிப்போம்" அளித்தல்.
  - கதையின் சூழல்களோடு தொடர்புபடுத்தி உரையாடுதல். பயிற்சித்தாளில் பார்ப்பதைக் கூறுதல்.
  - மீன்கள் குளத்திற்குச் சென்ற வழியை வரைந்து காட்டுதல்.
  - ஒருவருக்கொருவர் படங்களைப் பார்த்தல். சுதந்திரமாகப் பேசுதல்.

## மதிப்பீடு :

- சரியான வழி கண்டுபிடிக்க இயல்கிறது.
- படத்திலுள்ள காரியங்களை சொந்த வாக்கியங்களில் கூற முடிகிறது.

## பயிற்சித்தாள் - 4.2 வரைவோம் ஒட்டுவோம்.

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு.
- உடல் இயக்க வளர்ச்சி.

**திறன்** : பயனற்ற பொருட்கள் (காகிதம்) பயன்படுத்தி கொளாஷ் தயாரிக்க இயல்கிறது. (84)

**கருத்து** : மழை பெய்யும் காலமும் மழை பெய்யாத காலமும் உள்ளது.

**கருவிகள்** : பென்சில், வண்ணக் காகிதத் துண்டுகள், கிரையான்ஸ், பசை.

**சூழல்** : குடையில் மழை வரைதல் செயல்பாட்டிற்குப் பின்.

செயல்முறை

- **கதைக் கூற்று** : பாத்தும்மாவின் உப்பா ஒரு பரிசுடன் வந்தார். ஒரு நீண்ட பொட்டலம். அவள் பொட்டலத்தை அவிழ்த்தாள். மகிழ்ச்சியால் அவள் துள்ளிக் குதித்தாள். ''உம்மா, ஹாய்! குடை, பல வண்ணக் குடை.

பயிற்சித்தாள் 4.2 - "வரைவோம் ஒட்டுவோம்" அளித்தல்.

- பாத்தும்மாவின் குடையில் வண்ணங்களை ஒட்டி அழகாக்கவும்.

- நாமும் குடை அலங்கரிப்போம், ஆசிரியை வண்ணக் காகிதம் அளித்தல்.
- ஆசிரியையின் பரிந்துரைக்கேற்றவாறு குழந்தைகள் காகிதத்தைச் சிறுசிறு துண்டுகளாகக் கிழித்தல்.
- கிழித்த காகிதத்துண்டுகளைக் குடையில் ஒட்டுதல்.
- படங்கள் காட்சிப்படுத்துதல்.
- யாருடைய குடை மிகவும் நல்ல குடை?

- **கதையின் தொடர்ச்சி**

"நான் மழையில் நனைய மாட்டேன். நிறம் போய்விடும். அழகும் போகும்" வண்ணக் குடை கூறியது. பாத்தும்மா தன் குடையின் அழகு போகமாலிருக்க மழைக் காலத்தில் குடை எடுக்கவில்லை. கோடைக்காலம் வந்தது. குடை சொன்னது. நான் வெயில் பட வர மாட்டேன். வண்ணம் குறையும். அழகு குறைந்து விடும். "பாத்தும்மா கோடைக்காலத்திலும் குடை எடுக்கவில்லை. குடை ஒரு மூலையில் அழகுடன் இருந்தது. ஒரு நாள் அவள் குடையை எடுத்து விரித்தாள். ஆங்காங்கே ஓட்டைகள் எலியும் கரப்பான் பூச்சியும் தின்றதாகலாம். குடை அலறியது. மழை நனையாமல், வெயில் அடிக்காமல் சோம்பலுடன் இருந்து ஓட்டை விழுந்துவிட்டதே நீ.......நீ.......

## மதிப்பீடு :

- காகிதத் துண்டுகளை நுணுக்கமாகக் குடையின் வெளிக் கோட்டில் அழகாக ஒட்டி கொளாஷ் உருவாக்க இயல்கிறது.

## பயிற்சித்தாள் – 4.3 விளையாட்டுப் படகு

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- அறிவு சார் வளர்ச்சி மண்டலம்
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்கள்** :
1. ஊர்வன, பூச்சிகள், விலங்குகள், பறவைகள் போன்றனவற்றைப் பிரித்தறிந்து கூற இயல்கிறது (34)
2. இயற்கையை ரசிக்கவும் படங்களுக்கு வண்ணம் தீட்டவும் இயல்கிறது (79)
3. பொருட்களையும் எண்ணிக்கையையும் தொடர்புபடுத்திக் கூறுதல் (44)

**கருத்து** : மழைக்காலத்தில் ஏராளம் தண்ணீர் கிடைக்கிறது.

**கருவிகள்** : பயிற்சித்தாள், கிரையான்ஸ்.

**சூழல்** : குடையில் ஏறலாம் விளையாட்டு, மழைப்பாட்டு மழைக்கால அனுபவங்கள், மழைக்கதைகள் கூறுதல் போன்றவற்றிற்கும் பிறகு.

### செயல்முறை

- **கதைக்கூற்று**

மழை பெய்தது, எங்கும் தண்ணீர். ஆறும் வாய்க்காலும் வயலும் நிறைந்தது. முற்றம் நிறைய தண்ணீர். பாத்தும்மாவும் சோனுவும்

விளையாட்டுப் படகு செய்தனர். தண்ணீரில் விட்டனர். விளையாட்டுப் படகு நீரில் போனது. காற்று வீச, படகு கரையில் வந்தது. "ஹாய் படகு நான் இதில் ஏறட்டுமா?" அணில் குஞ்சு கேட்டது. "நானும் வருகிறேன்", சின்ன எறும்பு கூறியது. காற்று வீசியது. படகு மீண்டும் மிதந்து சென்றது. அவர்கள் துழைந்தனர். விளையாட்டுப் படகு பெரிய நதியில் சென்று சேர்ந்தது. நதி வழியாக ஒரு பயணம். அவர்கள் கீழே தண்ணீரில் பார்த்தனர். யாரையெல்லாம் பார்த்தனர்?

- பயிற்சித்தாள் 4.3 'விளையாட்டுப் படகு' அளித்தல்.
- **படவாசிப்பு** – கூடுதல் உயிரினங்கள் படகிலா? தண்ணீரிலா?
  பிரதிபலிப்பு

**வண்ணம் தீட்டுவோம்**– படகில் பயணிப்பவர்களுக்கு வண்ணம் தீட்டலாம்.

**கதைக்கூற்று**

(தொடர்ச்சி) – தண்ணீரைப் பார்த்த அணில் குஞ்சு பயந்தது. ஒரு முதலை, முதலை படகை நோக்கி வருகிறது. என்ன செய்வது? அவர்கள் வேகமாகத் துழைந்தனர். முதலையும் வேகமாக நீந்தியது. அப்போது சின்ன எறும்பு காற்றை அழைத்தது. காற்று வந்தது. படகை தன் தோளில் சுமந்து பறந்தது. கரையின் அருகே சேர்த்தது. மீன்கள் வந்து படகை தள்ளிக் கரையில் சேர்த்தது.

## மதிப்பீடு

- படத்தில் உள்ள உயிரினங்களைப் பிரித்தறிய இயல்கிறது.
- படங்களுக்கு வண்ணம் தீட்டியதன் உயர்ந்த தரம்.
- கூடுதல் / குறைவு கண்டுபிடிக்க இயல்கிறது.

## பயிற்சித்தாள் – 4.4. ஹாய்! மழை.

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- மொழி வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு.

**திறன்கள்** :

1. நம்மைச் சுற்றியுள்ள பொருட்கள், நிகழ்ச்சிகள், தனது அனுபவங்கள், நிலைமைகள் போன்றவைகளின் மேன்மைகள், தனது அனுபவங்களின் அடிப்படையில் தொடர்புபடுத்திக் கூற இயல்கிறது.
2. இயற்கையை ரசிக்கவும் படத்திற்கு வண் ணம் தீட்டவும் இயல்கிறது (80).

**கருத்துகள்** :
- மழைபெய்யும் காலமும் மழை பெய்யாத காலமும் உள்ளது.
- மழைக்காலத்தில் செடிகள் வளர்கிறது. துளிர்க்கிறது.

**கருவிகள்** : கிரையான்ஸ், வண்ணம், செவித்தோண்டி (இயர்பட்ஸ்)

**சூழல்** : மழைக்காலத்தில் காணும் மாற்றங்கள், அனுபவங்கள் கூறுதல் என்ற செயல்பாட்டுடன் தொடர்புபடுத்தி.

**செயல்முறை**

- **கதைக்கூற்று** : சோனுவும் பாத்தும்மாவும் வாய்க்காலின் கரையில் வந்து சேர்ந்தனர். நேற்று இருந்ததை விட தண்ணீர் கூடியுள்ளதே! சோனு கூறினான். 'ஹாய் வானவில்' வானத்தில் பார்த்தாயா? ..... வாய்க்காலிலும், கரையிலும் என்னென்ன உயிரினங்கள்? செடிகள்? நல்ல காட்சி, சோனுவும் பாத்தும்மாவும் கண்ட காட்சிகளைப் பாருங்கள்.
- பயிற்சித்தாள் 4.4 "ஹாய்! மழை" அளித்தல்.
- **படவாசிப்பு விளையாட்டு** படத்தில் உள்ள நிகழ்வுகளைக் கவனத்தில் கொண்டுவருவதற்கிணங்க விளையாட்டு வாயிலாகத் தொடங்கலாம்.
  - எடு: நான் அங்கேயுள்ளேன். அதன் முதல் எழுத்து 'த'.
  - தொடர்ந்து குழந்தைகள் இதுபோன்ற கேள்விகள் ஒருவருக்கொருவர் கேட்டல்.
- **வண்ணம் தீட்டுதல்** - தொடர்ந்து படத்திற்கு வண்ணம் அளித்து அழகு படுத்துதல்.

  கிரையான், வண்ணம், செவித்தோண்டி (இயர் பட்ஸ்) போன்றவை அளித்தல்.
- **அனுபவம் கூறுதல்** - படத்திலுள்ள காட்சிகளைத் தனது அனுபவங்களோடு தொடர்புபடுத்திக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்தல். (எடு: தண்ணீரில் மீன்களைப் பார்த்தது, தவளைகளோடு தொடர்புள்ள அனுபவங்கள். வானவில் பார்த்தது.
- **ஆசிரியைக்கு** - குழந்தைகளைக்கொண்டு ஏராளமான கருத்துகளைக் கூற வைக்கத் தேவையான கேள்விகள் கேட்டல்.

## மதிப்பீடு :

- படத்திலுள்ள கருத்துகளைக் கண்டறிந்து கூற இயல்கிறது.
- தனது சுய அனுபவங்களோடு தொடர்பு படுத்திப் பேச இயல்கிறது.
- கவர்ச்சிகரமாக வண்ணம் தீட்ட இயல்கிறது.

### பயிற்சித்தாள் - 4.5 கதை கூறுவோமா?

**வளர்ச்சி மண்டலம்** : மொழி வளர்ச்சி

**திறன்கள்** :

1. படக்கதைகளை உற்று நோக்கி கதையை ஊகித்துக் கூற இயல்தல் (18).
2. தனது எண்ணங்கள், உணர்வுகள் கற்பனைகள் போன்றவற்றைப் பிறருடன் பங்கு வைக்க இயல்தல் (26).

**கருத்து** :

- மழை பெய்யும்போது ஏராளம் தண்ணீர் கிடைக்கிறது.

- மழையுடன் காற்று, இடி, மின்னல் போன்றவை ஏற்படுகிறது.

**கருவிகள்** : மழைப்பாட்டுகள்.

**சூழல்** : மழை அனுபவங்கள் கூறுதல் / மழைப்பாடல் போன்றவை வழங்கிய பின்னர்.

### செயல்முறை

- **கதைக்கூற்று** : மழைப்பாட்டும் பாடி, மழைக் காட்சிகளும் பார்த்து வீரன் எறும்பு மரக்கொம்பில் இருந்தது.

  வாய்க்காலில் நிறைய தண்ணீர்..... கீரன் தவளை, தண்ணீரில் மூழ்கியும் மிதந்தும் ரசிக்கிறது.

  தீடீரென காற்று வீசியது. மரக்கொம்புகள் ஆடியது. வீரன் எறும்பு தண்ணீரில் விழுந்தது.... ஐயோ! காப்பற்றுங்கள்.... வீரன் அலறினான்.
- பயிற்சித்தாள் 4.5 ‘கதை கூறுவோமா?’ அளித்தல்.
- **படவாசிப்பு** – படத்தில் எனென்ன காண்கிறீர்கள்?
  – தண்ணீரில் விழுந்த எறும்புக்கு என்ன நிகழ்ந்திருக்கும்?
- **கதை அமைப்போம்**– எறும்பை யார் காப்பாற்றினார்? எவ்வாறு? படம் பார்த்து கதையை ஊகித்துச் சொல்லட்டும்.
- **வரைந்து இணைப்போம்** – கதையில் முதலில் நிகழ்ந்த நிகழ்ச்சி என்ன? தொடர்ந்து என்ன நடந்தது? வரிசை முறையில் படங்களை வரைந்து இணைக்கவும்.

## மதிப்பீடு

– கதையை வரிசைப்படுத்திக் கூற இயல்கிறது.

– வரிசைப்படுத்தி கதைப்படங்களை வரைந்து இணைக்க இயல்கிறது.

## பயிற்சித்தாள் - 4.6 மழைக்காலமும் கோடைக்காலமும்

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்** : படங்களை உற்றுநோக்கி தனித்தன்மைகள் கண்டு பிடிக்கவும், சொல்லவும் இயல்கிறது (30).

**கருத்து** : மழை பெய்யும் காலமும் மழை பெய்யாத காலமும் உண்டு.

**கருவிகள்** : கிரையான்

**சூழல்** : இயற்கை நடத்தம் என்ற செயல்பாடும் கலந்துரையாடலும் நடத்திய பிறகு பயிற்சித்தாள் வழங்கலாம்.

### செயல்முறை

- கதைக்கூற்று ஆமை அண்ணன், மீன் குட்டிகளுக்கு கதை சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தது. முன்னொரு காலத்தில் ஒரு கோடைக்காலத்தில் எல்லா குளங்களும் வரண்டு விட்டது. என்ன வெயில்? என்ன சூடு? தண்ணீரில் உள்ள உயிரினங்கள் எல்லாம் துடித்து இறந்து விட்டன. பறவைகளும் தண்ணீர் கிடைக்காமல் மடிந்தன. மரங்கள் காய்ந்து கரிந்தன. சூரிய ஒளிக்கு தீச்சூடு, நானும் குழந்தைகளும் மண்ணில் பொந்து அமைத்தோம். அங்கே ஒளிந்தோம்.

மழை வந்தது. நாங்கள் வெளியே இறங்கினோம். ஹாய் ! எங்கும் பசுமை. எல்லாம் மாறிவிட்டது. பல மாற்றங்கள். உங்களுக்கு மழைக்காலத்தில் ஏற்படும் மாற்றங்கள் என்னவெல்லாம் என்று தெரியுமா? கூறுங்கள்.

- பயிற்சித்தாள் – 4.6 'மழைக்காலமும் கோடைக்காலமும்' அளித்தல்.
- **படவாசிப்பு**
  - படங்களை உற்று நோக்குதல்
  - முதல் படம் எந்த காலத்தை உணர்த்துகிறது?
  - இரண்டாவதோ?
  - படங்களைப் பார்த்து வேறுபாடு கூறுதல்.
  - குழந்தைகளின் அனுபவத்திலுள்ள மழைக் காலமும் கோடைக்காலமும் கூறுதல்.
  - படத்திற்கு வண்ணம் தீட்டுதல்.

## மதிப்பீடு :

- மழைக்காலத்திலும் கோடைக்காலத்திலும் ஏற்படும் தனித்தன்மைகளைக் கூற இயல்கிறது.
- படங்களுக்குத் தகுந்த வண்ணம் அளிக்க இயல்கிறது.

### பயிற்சித்தாள் – 4.7 'காற்றின் குறும்பு'

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- அறிவுசார் வளர்ச்சி
- உடல் இயக்க வளர்ச்சி.

**திறன்கள்** :
1. எண்களை எண்ணவும், பொருட்களையும் எண்களையும் தொடர்புபடுத்த இயல்கிறது (44).
2. இயற்கையை ரசிக்கவும் படங்களுக்கு வண் ணம் தீட்டவும் இயல்கிறது (79).

**கருத்து** : மழையுடன் காற்று, இடி, மின்னல் போன்றவை ஏற்படுகிறது.

**கருவிகள்** : கிரையான்ஸ்

**செயல்முறை**

- **கதைக்கூற்று** : மழைவந்தது, பெரும்மழை..... மழையுடன் காற்றும் வீசியது. முற்றத்தில் உள்ள அழகான மாமரம் ஆடி அசைந்து.....

  காற்றடித்து மாமரத்திலிருந்து மாம்பழம் விழுந்தது. மழை நின்றதும் சோனு மாமரத்தின் அருகில் ஓடி வந்தான். ''ஹாய்! பழுத்த மாம்பழங்கள். ஆஹா! இனிப்புச் சுவை! எத்தனை மாம்பழங்கள்?'' பாத்தும்மாவிற்கு கொடுக்கவேண்டும். ஒவ்வொருவருக்கும் எத்தனை வீதம் கிடைக்கும்? சோனுவிற்குச் சொல்லிக் கொடுக்கலாமா?

- பயிற்சித்தாள் 4.7 'காற்றின் குறும்பு' அளித்தல்.

  (அரைப் பகுதி முதலில் திறக்கவேண்டும்)

  - காற்று மீண்டும் வீசியது.... மாம்பழங்கள் மீண்டும் விழுந்தன.

  (அடுத்த அரைப் பகுதி திறக்கவும்) இப்போது எத்தனை மாம்பழங்கள்?

- கீழே விழுந்த மாம்பழங்களுக்கு வண்ணம் தீட்டுங்கள்.
- சோனுவிற்கும் பாத்துமாவிற்கும் எத்தனை மாம்பழம் வீதம் கொடுக்கலாம்?

• **ஆசிரியைக்கு** : - பயிற்சித்தாள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நடுவில் உள்ள மாமரத்தை மறைத்துக் கொண்டு இரு பகுதியிலுள்ள மாமரத்தின் பாதி பாகங்களை மடக்கி வைத்து குழந்தைகளுக்கு காண்பிக்க வேண்டும்.

## மதிப்பீடு :

- வண்ணம் தீட்டுவதன் முழுமை
- மாம்பழங்கள் எண்ணவும், பங்கு வைக்கவும் இயல்கிறது.

## மையக் கருத்து 5 **தாவரங்கள் பழங்கள்**

குழந்தைகளுக்கு விளையாடுவதற்கான பொருட்களை அந்தந்த பகுதியிலுள்ள இயற்கை சூழல் நமக்குத் தருகிறது. பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருட்களை விளையாடுவதற்கு சிறு வயதிலே பழக்கப்படுத்திய பின்பு வளர்ந்த பிறகு பிளாஸ்டிக் பொருட்களை தவிர்க்கக் கூறுவதை விட நன்று இயற்கை நட்போடுள்ள விளையாட்டுப் பொருட்கள் வாயிலாக இயற்கையை அனுபவிக்க வேண்டும். இயற்கையோடு ஒன்றி வாழும் வாசலாக வேண்டும் பயிற்சித்தாளின் பயன்பாடு.

## செயல்பாட்டு வரிசை

1. பள்ளிவளாகத்தில் நட்டு வளர்த்திய செடிகளை உற்றுப்பார்த்தல். (பெயர், செடியின் பகுதிகள், சிறியது, பெரியது இலையினுடையவும் பூவினுடையவும் மணம்.....)

↓

2. வீட்டில் நட்டு வளர்த்தும் செடிகளைக் குறித்த கலந்துரையாடல்.

↓

3. மணம் பிரித்தறியும் விளையாட்டு. (இலை. பூ)

↓

4. தாவரங்களைப் பற்றிய பாடல்கள்.

↓

5. இலைகள் வரைவோம் வண்ணம் தீட்டுவோம்.

↓

6. பயிற்சித்தாள் 5.1 'இலை அச்சு' அளித்தல்.

↓

7. இலையைப் பயன்படுத்தி விளையாட்டுப் பொருட்கள் செய்தல்.

↓

8. பயிற்சித்தாள் 5.2 'இலை மிருகக்காட்சிசாலை' அளித்தல்.

↓

9. பலவகைப் பழங்கள் நேரடியாக உற்றுப் பார்த்தல்; தனித்தன்மைகள் கூறுதல்.

↓

10. விருப்பமான பழம் எது? விரும்பிய பழம் உண்ணுதல். (நடித்தல்)

↓

11. பழம் சாப்பிட்ட அனுபவம் பங்கு வைத்தல்.

↓

12. பழங்களைப் பற்றிய பாடல்கள்.

↓

13. பழங்களை எண்ணிக் கூறலாம். (நேர் அனுபவம்)

↓

14. பயிற்சித்தாள் 5.3 'எண்ணிக் கூறுங்கள் வண்ணம் தீட்டுங்கள்' அளித்தல்.

↓

15. பழங்களை குழுக்களாக்கலாம். (நேர் அனுபவம் 2–ன், 3–ன், 4–ன் குழுக்களாக்குதல்)

↓

16. பயிற்சித்தாள் 5.4 'குழுவில் சேராததைக் கண்டுபிடி' அளித்தல்.

↓

17. பழங்களின் முகமூடி பயன்படுத்தி நடித்தல்.

↓

18. பயிற்சித்தாள் 5.5 வரைந்து 'இணைப்போம்' அளித்தல்.

↓

19. பூந்தோட்டம் அமைத்தலும் பாதுகாத்தலும்.

↓

20. இயற்கை நடத்தம்.

↓

21. பயிற்சித்தாள் 5.6 'ஒரே எண்ணிக்கை வருபனவற்றை இணைப்போம்' அளித்தல்.

↓

22. மாதிரியைப் பார்த்து கணித அடுக்குகளை ஒழுங்குபடுத்துதல். (காய்கறி அச்சு)

## பயிற்சித்தாள் – 5.1 இலை அச்சு

**வளர்ச்சி மண்டலம்** : படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்** : பல பொருட்களைப் பயன்படுத்தி அச்சு, தெளிப்பு வண்ணம் செய்ய இயல்தல் (81).

**கருத்து** : வீட்டின் சுற்றுப் புறத்தில் பலவகைச் செடிகள்/ தாவரங்கள் நட்டு வளர்த்தப்படுகிறது.

**கருவிகள்** : பயிற்சித்தாள், இலைகள், கிரையான்ஸ், ஈர்க்கில்.

**சூழல்** : பூ, இலை போன்றவற்றின் தனித்தன்மைகள், பல்வகையான இலைகளைப் பிரித்தறியும் செயல்பாடுகளுக்குப் பிறகு.

### செயல்முறை

- கதைக்கூற்று : சிவானியும் ஆமினாவும் நண்பர்கள். ஒரு நாள் சிவானி, ஆமினாவின் வீட்டிற்குச் சென்றாள். 'ஹாய்! எத்தனை எத்தனை செடிகள்! "இதோ! பூக்கள்' "என்ன அழகு?" என்னென்ன செடிகள் ஆமினாவின் வீட்டில் உண்டு? (ஊகித்துக் கூறுதல்) பூக்களோ?
  அவர்கள் சுற்றிப் பார்த்து செடிகளும் பூக்களும் கண்டனர். சிவானியும் ஆமினாவும் இலையின் பெயர்களைக் கூறி விளையாடினர். நாமும் விளையாடுவோமா? சிவானியின் வீட்டிலிருந்து கொண்டு வந்த இலைகளைப் பார்க்க வேண்டாமா? குழந்தைகளுக்கு பழக்கமான இலைகளைக் காட்டுதல். குழந்தைகள் பெயர் கூறுதல். மாவிலையும், பலா இலையும் காட்டுதல். இவர்கள் ஒருவருக்கொருவர் சந்தித்தால் என்ன பேசுவார்கள்?
  சொல்லிப் பார்ப்போமா? குழந்தைகள் கூறுதல், இனி சேம்பிலையும் வாழை இலையும் சந்தித்தாலோ? என்னென்ன பேசுவார்கள்? குழந்தைகள் கூறுகிறார்கள். சிவானியின் வீட்டில் உள்ள செடிகளின் இலைகளை வரைவோமா?
- **இலை வரைதல்** : குழந்தைகளை சிறு குழுக்களாக்கி வட்டத்தில் அமரச் செய்தல். நடுவில் இலைகளை வைப்போம். காகிதத்தில் குழந்தைகள் விருப்பமான இலை வரைதல். நிறம் அளித்தல், வரைந்து வண்ணம் தீட்டிய இலைகளை காட்சிப்படுத்துதல். இப்போது இலையை காகிதத்தில் ஒப்பி எடுப்போமா?
- பயிற்சித்தாள் 5.1 'இலை அச்சு' அளித்தல்
  - இலை, கிரையான்ஸ் போன்றவற்றை அனைவரும் எடுத்தல்.
  - பயிற்சித்தாளின் கீழே வெற்றுப் பகுதியில் அச்சு எடுக்க வேண்டிய இலையை திருப்பி வைத்தல்.

– காகிதத்தின் மீது கிரையானை உரசி அச்சு எடுத்தல் (ஆசிரியை மாதிரி செய்து காட்ட வேண்டும்).

– 'ஹாய்' இலை அச்சுகள். நாம் காட்சிப் படுத்துவோமா? இலை அச்சு கண்காட்சி. 'ஹாய்! எவ்வளவு அழகு'.

- **உருவாக்கல்** : சிவானியும் ஆமினாவும் பலா இலையும் ஈர்க்கிலும் வைத்து தொப்பியும், மாலையும் வளையலும் செய்து விளையாடினர். நாமும் விளையாடுவோமா?

  பலா இலை, ஈர்க்கில் பயன்படுத்தி தொப்பி, மாலை, வளையல் உருவாக்குதல் காட்சிப்படுத்துதல்.

## மதிப்பீடு :

– படத்தின் கவர்ச்சித்தன்மை

– இலையின் வடிவம் பதியும் படியாக அச்சு செய்யப்பட்டுள்ளது.

## பயிற்சித்தாள் – 5.2. இலை மிருகக்காட்சி சாலை.

**வளர்ச்சி மண்டலம்** : படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்** : இயற்கையில் இருந்து கிடைக்கும் பலவகை பொருட்களைப் பயன்படுத்தி உருவாக்கச் செயல்பாடுகளில் ஈடுபட இயல்கிறது. (83)

**கருத்து** : வீட்டின் அண்மையில் பலவகை தாவரங்கள் உள்ளன.

**கருவிகள்** : இலைகள், பசை

**சூழல் :** இயற்கை நடத்தலுக்குப் பிறகு

**செயல்முறை**

- **கதைக்கூற்று** : யானையும் அணிலும் நண்பர்கள். இவர்களில் யார் பெரியவர்? அணிலா? யானையா? யானை எவ்வாறு நடக்கும்? அணிலோ? (நடத்தல்) யானை தினமும் நடைப் பயணம் மேற்கொள்ளும். அணிலும் அதனுடன் செல்லும். பயிற்சித்தாளிலுள்ள யானையும் அணிலையும் காட்டுதல். (பிற காதாபாத்திரங்களை மறைத்து வைத்தல் வேண்டும்). யானை அணிலை நடக்க வைத்துக் கொண்டு போகவில்லை எனில் எப்படி கொண்டு போகும் (சுதந்திர பிரதிபலிப்பு) யானையின் மேலிருந்து அணில் என்னென்ன செய்யும்? ஒரு நாள் அணில் யானையின் மேலிருந்து மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருந்தது. "ஹாய்! மாம்பழம்" பழுத்த மாம்பழம். அணில் உரக்கச் சொன்னது. "நண்பனே மாமரத்தின் அருகில் செல்". யானை அணிலையும் சுமந்து கொண்டு மாமரத்தின் அடியில் நின்றது. தும்பிக்கை உயர்த்தியது. அணில் என்ன செய்திருக்கும்? கூறுங்கள்? தும்பிக்கை வழி அணில் மேலே ஏறியது. மாம்பழங்களைப் பறித்தது கீழே போட்டது. பிறகு தரையில் இறங்கப் பார்த்தது. 'எப்படி தரையில் இறங்கியிருக்கும்?" "ஐயோ! மாம்பழங்களைக் காணவில்லையே" அணில் திகைத்து நின்றது. சுற்றும் முற்றும் பார்த்தது. அதோ ஒரு எலிக்குஞ்சு மாம்பழத்தைக்

கவ்விக் கொண்டு வளையை நோக்கி ஓடுகிறது. “அவனைப் பிடி” யானை உரக்க அலறியது. எலி செடிகளுக்கிடையே மாம்பழத்தைக் கொண்டு ஓடியது. கீரை, தகரை, பூசணி, கரிசலாங்கண்ணி, துளசி, சேம்பு இவைகளைச்சாய்த்துக் கொண்டு எலி ஓடியது. யானை கொய்யா மரத்தை சாய்த்தது. சாம்பை, காப்பிச் செடி, முருங்கை ஒவ்வொன்றும் முறிந்து விழுந்தது. அணில் செம்பருத்தியில் தாவியது. முல்லையில் தாவியது. கணிக்கொன்றையில் தாவியது..... இதைப் பார்த்த குரங்கு கூறியது, எதற்காக ஓடுகிறீர்கள்? நான் உங்களுக்கு மாம்பழம் பறித்துத் தருகிறேன். எல்லோரும் ஓடுவதை நிறுத்தினர். குரங்கு மாம்பழம் பறித்துக் கொடுத்தது.

- பயிற்சித்தாள் 5.2 ‘இலை மிருகக்காட்சி சாலை’ அளித்தல்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டு வேறொருவர் அங்கே நின்று கொண்டிருந்தார். யார் அந்த நண்பன் ? (சுதந்திர பிரதிபலிப்பு).

- இவரின் வடிவம் இவ்வாறு இருந்தது?
- இதைப்போல் நீங்களும் உருவாக்க வேண்டாமா? குழந்தைகள் பயிற்சித்தாளை உற்றுப்பார்த்தல். இலைகளை ஒட்டிய முறையை ஆசிரியர் கேட்கிறார். தகுந்த இலைகளை ஆசிரியை குழந்தைகளுக்கு அளித்தல் பல வகையான உயிரினங்களின் படங்கள் அமைத்தல்.
- ஆசிரியையின் உதவியுடன் பசையைப் பயன்படுத்தி எ4 காகிதத்தில் ஒட்டுதல்.

- **கண்காட்சி** இனி படங்களைக் காட்சிப்படுத்துவோமா? படத்தைக் குறித்து.
- **சுதந்திரமாகப் பேசுதல்:** படத்தைப் பற்றி பேசுவதற்கான வாய்ப்பு அளித்தல், அணிலுக்கு மாம்பழம் பிடிக்கும். யானைக்கு என்ன பிடிக்கும்?

## மதிப்பீடு :

- இலைகளைச் சேர்த்து வைத்து உயிரினங்களை உருவாக்க இயல்கிறது?
- மாதிரியைப் பார்த்து வேறுபட்டவைகளை வடிவமைக்க இயல்கிறது.

### பயிற்சித்தாள் 5.3 எண்ணிக் கூறுங்கள்... வண்ணம் தீட்டுங்கள்..

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்கள்** :

1. கிரையான் பயன்படுத்தி படங்களுக்கு வண்ணம் தீட்ட இயல்கிறது (05)
2. எண்களை எண்ணவும் பொருட்களையும் எண்களையும் தொடர்புபடுத்தவும் இயல்கிறது. 5-ற்கு குறைவாக (44)

**கருத்து** : பலவகைப் பழங்கள் உள்ளன.

**கருவிகள்** : பயிற்சித்தாள், கிரையான்ஸ்.

**சூழல்:** பல வகைப் பழங்களைப் பழக்கப்பட்ட பிறகு பயிற்சித்தாள் அளித்தல்.

**செயல்முறை**

- **கதைக்கூற்று** உண்ணிக் குட்டனின் வீட்டின் முற்றத்தில் ஒரு மாமரமும் ஒரு பலா மரமும் ஒரு கொய்யா மரமும் இரண்டு பப்பாளிச் செடிகளும் உள்ளன. தினமும் காலையில் உண்ணிக்குட்டன் இவைகளைப் பார்வை இடுவான். எதற்காகப் பார்ப்பான்? ஒரு நாள் உண்ணிக்குட்டன் உரக்கச் சொன்னான்.

"ஹாய் 'பலா பழுக்கத் துவங்கியது.'

'பப்பாளி பழுத்தது'.

'இதோ கொய்யா'

'ஹாய் மாம்பழங்கள்

உண்ணி எண்ணிப் பார்த்தான். அவன் பார்த்த பழங்களைப் பாருங்கள்......

பயிற்சித்தாள் 5.3 'எண்ணிக் கூறுங்கள்.... வண்ணம் தீட்டுங்கள்...' அளித்தல்.

என்னென்ன பழங்கள்? உண்ணி பார்த்த பழங்களை எண்ணிப் பாருங்கள்'

| | | |
|---|---|---|
| பலா | - | 1 |
| பப்பாளி | - | 2 |
| மாம்பழம் | - | 3 |
| கொய்யா | - | 4 |

இனி நிறம் அளிப்போமா? குழந்தைகள் வண்ணம் தீட்டுதல்.

## மதிப்பீடு :

- 1 முதல் 4 வரையுள்ள பொருட்களைத் தொடர்புபடுத்தி எண்ண இயல்கிறது.
- தகுந்த வண்ணம் தீட்ட இயல்கிறது.

## பயிற்சித்தாள் - 5.4 குழுவில் சேராததைக் கண்டுபிடி

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- அறிவு சார் வளர்ச்சி
- உடல் இயக்க வளர்ச்சி

1. படங்களை உற்று நோக்கி குழுவில் சேராததைக் கண்டு பிடித்துக் கூறவும் குழுவில் சேராததற்கு காரணம் கூறவும் செய்தல்.
2. கை விரல்களைப் பயன்படுத்தி சுதந்திரமாக படங்கள் வரைதல்.

**கருத்து:** பல வகையான பழங்கள் உள்ளன.

**கருவிகள்** : கிரையான்ஸ், வண்ணக் கலவை.

**சூழல்** : பல வகையான பழங்களைக் குறித்துக் கலந்துரையாடல்.

**செயல்முறை**

- **கதை சொல்லுதல்** : முத்துவிற்கு முந்திரிப் பழம் சாப்பிட ஆசை. முத்து அம்மாவிடம் கூறினான். எனக்கு முந்திரிப்பழம் வேண்டும். அம்மா சந்தைக்குப் போகத் தயாரானார். "அம்மா நானும் வருகிறேன்" அம்மா முத்துவை அழைத்துக் கொண்டு பழக்கடைக்குள் ஏறினார். தரையில் பழங்கள் கூடைகளில் குவியலாக வைக்கப்பட்டிருந்தன. 'ஹாய் நிறைய பழங்கள்'. முத்து என்னென்ன பழங்கள் பார்த்திருப்பான்? குழந்தைகள் ஊகித்துக் கூறுதல். முத்து கூடைகளை உற்று நோக்கினான். மீண்டும் பார்த்தான். முத்து அந்தக் காட்சியைக் கண்டான். முத்து என்ன

பார்த்திருப்பான்? குழந்தைகள் ஊகித்துக் கூறுதல். முத்து அம்மாவிடம் சுட்டிக் காட்டினான். அப்போது தான் அம்மாவின் கண்ணிலும் அக்காட்சி தென்பட்டது. முத்து என்ன பார்த்தான் என்று தெரிய வேண்டாமா?

பயிற்சித்தாள் 5.4 ‘குழுவில் சேராததைக் கண்டுபிடி’ அளித்தல்.

கூடைகளில் என்னென்ன பழங்கள்? குழுவில் சேராதவை உண்டா? ஒவ்வொரு கூடையையும் ஆசிரியை சுட்டிக் காட்டுதல். இக்கூடையில் தனித்து இருப்பது யார்? தனியாக இருப்பவரை அவருடைய குழுவில் சேர்க்க வேண்டாமா? வரைந்து இணைப்போமா? ஒவ்வொரு பழங்களையும் அந்தந்த குழுவில் வரைந்து இணைத்தல்.

- **வண்ணம் தீட்டுதல்** இப்போது நாம் வண்ணம் தீட்டுவோமா? குழந்தைகள் பழங்களுக்கு வண்ணம் தீட்டுதல். காட்சிப்படுத்துதல். பழங்களைக் குறித்த பாட்டு பாடுதல்.
- **பாட்டு**
  - பலாப் பழத்திற்கு வண்ணம் தீட்டுவோம்
  - விரல் நுனியை வண்ணக்கலவையில் பதித்து கீழே கட்டங்களில் உள்ள பலாப்பழத்தில் பதித்தல்.

## மதிப்பீடு

- குழுவில் சேராத பழங்களைக் கண்டுபிடிக்க இயல்கிறது.
- ஒவ்வொரு பழத்தையும் அதனுடைய கூடையில் இணைத்து வரைய இயல்கிறது.
- வண்ணம் தீட்டியதன் உயர்ந்த தரம்.

## பயிற்சித்தாள் - 5.5 ‘வரைந்து இணைப்போம்’

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்** : கண்டறிதல் செயல்பாட்டில் ஈடுபடவும் அனுவத்தின் அடிப்படையில் பொதுமுடிவு வெளியிடவும் இயல்தல். (33)

**கருத்து** : ஆரோக்கியமாக வாழ பழங்கள் பயன்படுகிறது.

**கருவிகள்** : வாழைப்பழம், பப்பாளி பழுத்தது.

**சூழல்** : பலவகையான பழங்களைக் குறித்து குழந்தைகளுடன் உரையாடல்.

### செயல்முறை

- **கதைக்கூற்று** குண்டு பலாப் பழமும், பப்பாளியும் சண்டையிட்டனர். ‘நான் தான் பெரியவன்’ பலா சொன்னது. ‘இல்லை நான் தான் பெரியவன்’. பப்பாளி சொன்னது. வாக்குவாதம் சண்டையில் முடிந்தது. அவர்கள் உண்ணிக்குட்டனின் பக்கத்தில் வந்தனர். எங்களுள் யார் பெரியவன்? ‘டெங்கு காய்ச்சல் வந்தபோது எல்லோருக்கும் பப்பாளி தேவைப்பட்டது’. உண்ணியின் விடை கேட்டு பப்பாளி நெகிழ்ந்தது.
  அப்போது உண்ணி, பலாவைப்பற்றிக் கூறினான்.

அதைக்கேட்ட பலா பெருமை பேசத் துவங்கியது. என்னவெல்லாம் கூறியிருக்கும்? பப்பாளியும் தன்னைப்பற்றி பேசத் துவங்கியது. அப்போது வேறு இரண்டுபேர் அங்கே வந்தனர். மாங்காயும் வாழைக்குலையும். "நான் சிறியவன். எனக்கு தோல் உள்ளது. பழுத்தால் எனக்கு என்னே! இனிப்பு தெரியுமா?" பச்சை மாங்காயை உப்பில் போடுவார்கள். பழுத்தால் எனக்கு நல்ல மணம். மாங்காய் தலையைத் தூக்கிக் கூறியது. வாழைக்குலை பேசாமல் இருக்குமா? வாழைக் குலையும் சில காரியங்கள் கூறியது வாழைக் குலை சொன்ன காரியங்களை உங்களுக்குச் சொல்ல முடியுமா?

அம்மா கத்தியுடன் வந்தார். பப்பாளியை இரண்டாக வெட்டினார், பலா மூன்று துண்டுகளாக வெட்டப்பட்டது. வாழைப் பழம் வாயில் போடப்பட்டது. மாங்காயை வெட்டிச் சாப்பிட்டனர். அவ்வாறு அவர்களின் சண்டை தீர்ந்தது. எல்லோருக்கும் பழங்களைத் துண்டுகளாக்கி அளித்தல் வேண்டும், ருசித்துப் பார்த்து என்ன பழம் என்று கூற வேண்டும்.

- பயிற்சித்தாள் 5.5 வரைந்து "இணைப்போம்' அளித்தல்.
- **படவாசிப்பு**
  - படத்தில் காண்பதைக் கூறுதல்.
  - படத்திலுள்ள பழங்கள் என்னென்ன?
  - எந்தெந்த மரங்கள்/ செடிகள் படத்தில் உள்ளன?
  - குழந்தைகள் மரம், செடி, பழம் போன்றவற்றைத் தொட்டுக் காண்பித்து பெயர்கள் கூறுதல்.

    செடிகளுடன் அதன் பழத்தை வரைந்து இணைக்கிறார்கள்.
  - ஒருவருக்கொருவர் மதிப்பிடுதல்.

## மதிப்பீடு :

- பரிந்துரைக்கேற்ப தாவரமும் அதன் பழத்தையும் வரைந்து இணைக்க இயல்கிறது.

## பயிற்சித்தாள் : 5.6 "ஒரே எண்ணிக்கை வருபனவற்றை இணைப்போம்'

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்** : எண்கள் எண்ணவும் பொருட்களையும் எண்களையும் தொடர்பு படுத்தவும் இயல்தல். (44)

**கருத்து** : பலவகையான பழங்கள் உள்ளன.

**சூழல்** : சுற்றுச்சூழலில் உள்ள மரங்களையும் பழங்களையும் உற்று நோக்கிய பிறகு பயிற்சித்தாளை அளிக்கலாம்.

**கருவிகள்** : பல்வேறு இலைகள்.

**செயல்முறை**

- விளையாட்டு : இன்று நாம் ஒரு விளையாட்டு விளையாடுவோம். ஆசிரியை ஒரு இலை காட்டுவேன். எந்த தாவரத்தின் இலை என்று கூற வேண்டும். நீங்கள் வந்து இலையைப் பார்க்கலாம். முகர்ந்து

பார்க்கலாம். ருசித்துப்பார்க்கலாம். இலையின் பெயர் சொல்ல வேண்டும். ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு அளித்தல். விடை கூறினால் கைதட்டுதல். ஒருவர் இலையின் பெயர் சொல்லும்போது அடுத்தவர் அச்செடியின் காயின் பெயர் கூறுதல். ஆசிரியை மாவிலை காண்பித்தல். மாவின் கனி எது? சரியான விடைக்கு கை தட்டுதல். பலா இலை, வாழை இலை, பப்பாளி இலை, போன்ற பழங்கள் தரும் மரங்களின் இலைகளைக் காண்பித்து செயல்பாடு தொடர்தல். பழங்கள் இல்லாமல் காட்டும்போது இலையைப் பிரித்தறிந்தால் போதும். மேலும் வேறொரு விளையாட்டு விளையாடுவோம். இலையும் காயும் பார்த்து எண்ணிக் கூறுவோம்.

- பயிற்சித்தாள் 5.6 'ஒரே எண்ணிக்கை வருபனவற்றை இணைப்போம்.' அளித்தல்.

  படத்திலுள்ள பழங்களின் பெயரைக் கூற முடியுமா? இலைகள் எவையென கூறலாமா? ஒவ்வொன்றும் எத்தனை வீதம் உள்ளன? ஒரே போன்று எண்ணிக்கையுள்ள இலைகளையும் பழங்களையும் இணைத்து வரைவோமா? குழந்தைகள் வரைந்து இணைத்தல். சரியாகச் செய்தவர்களுக்கு கைத்தட்டு.

- **இலைப்பாடல்** – இலைப்பாடல் பாடுவோம்.

## மதிப்பீடு :

- ஒரே எண்ணிக்கை வருபனவற்றைக் கண்டறிந்து வரைந்து இணைக்க இயல்கிறது.

## மையக் கருத்து 6 உணவு

அறிவுசார் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் பயிற்சித்தாள்கள் இந்த மையக்கருத்தில் இடம் பெற்றுள்ளன. உற்று நோக்குதல், தனித்தன்மை கண்டறிதல், இணைத்தல், பிரித்தறிதல் போன்ற செயல்த்திறன்களை பெற்றுக்கொள்வதற்குத் தகுந்தவாறு இவை தயாரிக்கப்படுள்ளன. உணவு மையக்கருத்தாக இருப்பதால் 'ருசி அறிதல் அனுபவம்' அளிப்பதைக் கவனத்தில் கொணர்தல் வேண்டும். பாடலும், கதையும், விளையாட்டும் தகுந்த முறையில் ஒருங்கிணைத்து பிற வளர்ச்சி மண்டலங்களுக்கும் உரிய வாய்ப்பைக் கண்டடைய வேண்டும். இந்த மையக்கருத்தை வழங்கும்போது அனைத்து வளர்ச்சி மண்டலங்களுக்கும் சம பங்கீடு அளிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

### செயல்பாட்டு வரிசை

1. பள்ளி வளாகத்தில் நட்டு வளர்த்திய செடிகளை உற்று நோக்குதல். (பெயர், செடியின் பகுதிகள், சிறிது, பெரிது, இலையினுடையவும் பூவினுடையவும் மணம்.....)

↓

1. பசியும் உணவும்.

↓

2. பசி தோன்றும் போதுள்ள நிலையை நடித்தல். (குழந்தைகள், சிறுவர்கள், பூனை, பசு, ஆடு)

↓

3. பலவகை உணவுகள்.

↓

4. வீட்டில் வளர்க்கும் உயிரினங்களின் உணவு.

↓

5. பலவகை ருசிகள்.
   - ருசி கூறி விளையாடுதல். (மிட்டாய், எலுமிச்சை, மிளகு)

6. பயிற்சித்தாள் – 6.1 “ஹாய்!, என்ன ருசி' அளித்தல்.

↓

7. சமையலுக்குப் பயன்படும் கருவிகள், உணவு தயாரித்தல். (சாலட், பழம் தோல் நீக்கி துண்டுகளாக்குதல்.....)

↓

8. உணவுப் பாடல்கள், கதைகள்.

↓

9. விருப்பமான உணவு.

↓

10. பயிற்சித்தாள் – 6.2 'வரைந்து இணைப்போம் அளித்தல்.

↓

11. மாதிரி பார்த்து கணித அடுக்குகள் அமைத்தல். (காய்கறி அச்சு, பூக் கோலம்......)

↓

12. பழம் – காய்கறி – விளையாட்டு.

↓

13. பழம் காய்கறி. (பொம்மலாட்டம்)

↓

14. சமையல் அறைக் கருவிகள் உற்றுப்பார்த்தலும் வகைப்படுத்துதலும்.

↓

15. பயிற்சித்தாள் – 6.3 உண்பதற்குப் பயன்படுத்தும் பொருளுக்கு 'வட்டமிடுவோம்' அளித்தல்.

↓

16. உணவோடு தொடர்புடைய வினா விடைப் பாடல்கள்.

↓

17. சமையலறைப் பொருட்கள் – செயல்பாடுகள்.

↓

18. உணவு எப்போதெல்லாம்?

↓

19. பயிற்சித்தாள் – 6.4 "நல்ல உணவு பழக்கவழக்கங்கள் எவை? படத்திற்கு வண்ணம் தீட்டுங்கள்" அளித்தல்.

↓

20. ஆரோக்கியப்பாடல்கள்.

## பயிற்சித்தாள் – 6.1 ஹாய்! என்ன ருசி

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்** : கண்டறியும் செயல்பாடுகளில் ஈடுபடவும் அனுபவத்தின் அடிப்படையில் பொது முடிவுகள் வெளியிடவும் இயல்தல். (31)

**கருத்து** : மனிதன் மட்டுமல்ல பிற உயிரினங்களும் பசிக்கும் போது உணவு உண்கிறது.

**சூழல்** : நல்ல விருந்து (பொம்மை 204 – ஆம் பக்கத்திலுள்ள உணவோடு தொடர்புடைய பாடல் பாடிய பிறகு

**செயல்முறை**

- **பொம்மலாட்டம்/**

**கதைக்கூற்று** : ஜித்து முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு கிளி ஓசை எழுப்பியது. ஜித்து சுற்றிலும் பார்த்தான். யாரையும் காணவில்லை. அதோ மீண்டும் சத்தம் 'ஹலோ ஹலோ' என அழைப்பது போல்,..... ஜித்து சத்தம் கேட்ட பக்கம் திரும்பினான். அதோ அந்த கொய்யா மரக்கிளையில் பச்சை இலைகளுக்கிடையில்.

"சிவந்த அலகு."
கழுத்தில் ஒரு பட்டு மாலை.
பச்சை வண்ண ஆடை!
பழுத்த கொய்யா தின்கிறது."

அது யாராக இருக்கும்! சொல்ல முடியுமா? (சுதந்திர பிரதிபலிப்பு)

ஜித்து : பச்சைக் கிளியே நலம் தானா?"

கிளி : 'நல்ல பசி ஜித்து'

ஜித்து : வயலில் அறுவடை முடிந்து விட்டதா?

கிளி : "ஆமாம் ஆமாம்.. மொத்தத்தில் பட்டினி தான்."

ஜித்து : "அப்படியா?" "உனக்கு நான் சோறு தரட்டுமா?"

கிளி : "வேண்டாம் ஜித்து, சோறு எனக்குப் பிடிக்காது."

ஜித்து : "அப்படினா இனி என்ன செய்வாய்?"

கிளி : "நான் பசித்து, பறந்து திரிந்த போது இந்த கொய்யாப்பழத்தைக் கண்டேன்."

ஜித்து : "ஒரு கொய்யா தானே உண்டு?"

கிளி : "எனக்கு இது போதும்"

ஜித்து : "நீ என்னுடன் விளையாடுவாயா?"

கிளி : "இல்லை. எனக்குச் செல்ல வேண்டும்.

ஜித்து : "எங்கே செல்ல வேண்டும்?"

கிளி : "காட்டிற்கு"

ஜித்து : "அங்கே உன்னுடன் விளையாட நண்பர்கள் உண்டா?

கிளி : "உண்டு. யாரெல்லாம் தெரியுமா? யானை, முயல், குயில்."

ஜித்து : "அவர்களுக்குப் பசிக்காதா?"

கிளி : "அவர்களுக்கும் பசிக்கும்."

ஜித்து : "யானை எந்த உணவை, விரும்பி உண்ணும்?"

கிளி : "யானைக்கு. தென்னை ஓலைதான் விருப்பமான உணவு."

ஜித்து : மயிலிற்கோ?

கிளி : "காரட்" குயிலின் உணவு என்ன என்று ஜித்து நீ கூறு."

ஜித்து : "புல்", "ஹா ஹா" நல்லாயிருக்கே!" கிளி சிரித்தது. ஏன் கிளி சிரித்தது? காரணம் கூறுங்கள்.

## பயிற்சித்தாள் - 6.2 வரைந்து இணைப்போம்

**வளர்ச்சி மண்டலம்** : அறிவு சார் வளர்ச்சி

**திறன்கள்** :

1. எண்கள் எண்ணவும், எண்களைப் பொருட்களுடன் தொடர்பு படுத்தி எண்ணவும் தொடர்பு படுத்தவும் இயல்தல். (44)
2. கணித பிரச்சனைகளுக்குத் தீர்வு காண இயல்தல் (46)

**கருத்து** : பலவகை ருசிகள் உள்ள உணவுகள் உள்ளன.

**சூழல்** : உணவிற்கு பல ருசிகள் உள்ளன எனக்கலந்துரையாடல் நடத்துதல்.

**செயல்முறை**

- **கதைக்கூற்று**

மணியன் பூனையும் மணிச்சிப் பூனையும் மீனுவின் வீட்டின் மேல்தளத்தில் வாழ்ந்து வந்தன. காலையில் மணிச்சிப் பூனை அழைத்தது. "மியாவ்.....மியாவ்... கறுப்பி.... வெளுப்பி... ஓடிவா" கறுப்பியும் வெளுப்பியும் ஓடி வந்தன. "மியாவ்.... மியாவ்..." இன்று கறுப்பியினுடையவும் வெளுப்பியினுடையவும் பிறந்த நாள். பிறந்த நாள் கொண்டாடுவதற்கான அலங்காரங்கள் நடக்கின்றன. நீங்கள் பிறந்தநாள் கொண்டாடியுள்ளீர்களா? என்னவெல்லாம் செய்வீர்கள்? மணியனும் மணிச்சியும் என்னவெல்லாம் அலங்காரம் செய்திருப்பார்கள் (சுதந்திர பிரதிபலிப்பு) கறுப்பியும் வெளுப்பியும் கேக் வெட்டத் தயாரானார்கள். அவர்கள் பாடத் துவங்கினர். என்ன பாட்டு பாடியிருப்பார்கள்? நாமும் பாடுவோமா!

ஹாப்பி பெர்த்தடே கறுப்பி
மியாவ்..... மியாவ்..... மியாவ்..... மியாவ்.....
ஹாப்பி பெர்த்தடே வெளுப்பி
மியாவ்... மியாவ்..... மியாவ்... மியாவ்....
(மீண்டும் பாடுதல்)

கறுப்பியும் வெளுப்பியும் கேக் வெட்டி எல்லோருக்கும் கொடுத்தனர். அவர்களும் சாப்பிட்டனர். 'ஹாய் நல்ல ருசியான கேக். இனிப்பான கேக் அவர்கள் கூவினர்.

மியாவ்...... மியாவ்..... மியாவ்.....

மியாவ்...... மியாவ்...... மியாவ்.......

என்னெவெல்லாம் பரிசுகள் அவர்களுக்கு கிடைத்திருக்கும்?

இனி உண்ண வேறு ஏதாவது உண்டா? கறுப்பி கேட்டாள். "உண்டு.... மணியன் பூனை ஒரு பொட்டலத்தைத் திறந்தது. ஹாய்! வடை, மிட்டாய், லட்டு"

மணிச்சிப் பூனை ஒரு பொட்டலத்தைத் திறந்தது. ஹாய்! வடை, மிட்டாய், லட்டு"

மணியன் பூனை ஒரு பொட்டலத்தைத் திறந்தது. பொட்டலத்தில் என்னென்ன இருக்கும்?

"ஹாய்! வாழைப்பழம், மாம்பழம், காரட்." வெளுப்பி கூறினாள். இரண்டு பொட்டலத்தையும் கறுப்பியினுடையவும் வெளுப்பியினுடையவும் முன்னே வைத்தனர். விருப்பமுள்ளதை எடுங்கள். ஆனால் ஒரு நிபந்தனை. ஒரு பொட்டலத்திலிருந்து எத்தனை வீதம் எடுப்பீர்களோ அதேபோல் அடுத்த பொட்டலத்திலிருந்தும் எடுக்க வேண்டும். கறுப்பி ஆலோசித்தாள். வெளுப்பி ஆலோசித்தாள். கறுப்பி இரண்டு பொட்டலத்திலிருந்தும் எடுத்தாள். வெளுப்பியும் இரண்டு பொட்டலத்திலிருந்தும் எடுத்தாள். மணிச்சி எண்ணிப்பார்த்தாள். மணியனும் எண்ணிப் பார்த்தான். 'சரி தானே?' கறுப்பி கேட்டாள்! வெளுப்பி கேட்டாள். சரியா?

- பயிற்சித்தாள் 6.2 "வரைந்து இணைப்போம்" அளித்தல்
  - கறுப்பியும் வெளுப்பியும் எப்படி எல்லாம் எடுத்திருப்பார்கள்?
  - ஒவ்வொன்றும் எத்தனை வீதம் உண்டு?
  - கணித பிரச்சனைக்குத் தீர்வுகாண இலகு வினாக்கள் கேட்டல்.
  - எத்தனை வடைகள் உள்ளன?
  - வலப்பக்கத்தில் அதே எண்ணிக்கை வீதமுள்ள பொருள் எது?
  - இந்த முறையில் ஒவ்வொன்றையும் கண்டு பிடித்து வரைந்து இணைத்தல்.
  - ஒருவருக்கொருவர் மதிப்பிட்டு கருத்துக்களைக் கூறட்டும்.
  - ஒரே எண்ணிக்கை வருபனவற்றை இணைத்தாலோ?
  - சரியாக எழுதியவர்களுக்கு ஊக்கம் அளித்தல்.
  - உதவி தேவையுள்ள குழந்தைகளுக்கு ஆசிரியை உதவுதல். அவ்வாறு கறுப்பியும் வெளுப்பியும் வென்றனர். அவர்களுக்குப் பரிசு கிடைத்தது. அப்பரிசு என்ன? அன்பு முத்தங்கள்.

## மதிப்பீடு:

- ஒரே எண்ணிக்கையுள்ளவைகளைத் தொடர்பு படுத்தி இணைத்துள்ளனர்.
- படங்கள் எண்ணிப்பார்த்து எண்ணிக்கை கூற இயல்கிறது.

## பயிற்சித்தாள் - 6.3 உண்பதற்குப் பயன்படுத்தும் பொருளுக்கு வட்டமிடுவோம்.

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்** : கண்டடைதல் செயல்பாடுகளில் ஈடுபடும்போது அனுபவத்தின் பின் துணையில் பொது முடிவுகள் கூறவும் இயல்கிறது. (31)

**கருத்து** : பல வகையான உணவுகள் உள்ளன.

**சூழல்** : பசியுள்ள நிலைமை - நடித்தல் செயல்பாடுகளுக்குப் பிறகு.

**செயல்முறை**

- **கதைக்கூற்று** : முத்து மாமா வடை விற்கப் புறப்பட்டார். வடைகள் நிறைந்த கூடையைச் சுமந்து நடந்தார். முத்து மாமா ஒரு துணியினால் வடையை மூடி வைத்திருந்தார். வடைகளை ஏன் துணி வைத்து மூடியிருந்தார்? முத்து மாமா ஏதோ உரக்கச் சொல்கிறார். என்ன சொல்கிறார் முத்து மாமா? (சுதந்திர பிரதிபலிப்பு) "வடை வேண்டுமா வடை" என உரக்கக் கத்துகிறார். முத்துமாமா சென்று கொண்டிருக்கிறார். முத்துமாமா விற்பனை (நடித்துக் காட்ட முடியுமா?)

அழகிக் காகமும் அழகன் காகமும் இதைக் கண்டனர். "ஹாய் வடைகள்" அவைகளுக்கு ஆவல் தோன்றியது. "எனக்கு வடை சாப்பிடணும்" அழகிக் காகம் கூறியது.

என்ன வழி?

"ஐடியா". அழகன் காகம் கூறியது.

என்னவாக இருக்கும் அந்த ஐடியா? சொல்வீர்களா? (ஊகித்துக் கூறுதல்)

அழகன் காகம் முன்பக்கமும் அழகிக்காகம் பின்பக்கமுமாகப் பறந்து வந்தன. அழகன் காகம் துணியைத் தூக்கிக்கொண்டு பறந்தது. பின் பக்கமாக வந்த அழகிக்காகம் வடையைக் கௌவிக் கொண்டு பறந்தது. முத்து மாமா காகத்தைப் பார்த்து கோபித்தார். காகத்தைப் பார்த்துக் கோபத்துடன் முத்து மாமா என்ன கூறியிருப்பார்? (குழந்தைகள் ஊகித்துக் கூறுதல்)

அவர்கள் பறந்து ஒரு மாமரக் கிளையில் அமர்ந்தனர். அப்போது ஒரு சிரிப்பொலி. அது யாராக இருக்கும்? மாமரத்தின் கிளையில் தொங்கிக் கிடந்த ஒரு பழுத்த மல்கோவா மாம்பழம் தான் சிரித்தது.

"நீங்கள் கூர்மையாகப் பார்ப்பவர்களல்லவா?

நான் பழுத்து நிற்பதை நீங்கள் காணவில்லையே? மாம்பழம் மீண்டும் சிரித்தது. அழகன் காகத்திற்கு கோபம் வந்தது. மாம்பழத்தின் தண்டில் ஒரு

கொத்து. "அம்மாடி!" மாம்பழம் தண்டு அறுந்து கீழே விழுந்தது. இதைக் கண்ட அழகிக் காகம் சிரித்தது. அலகிலிருந்த வடை கீழே விழுந்தது. மாமரத்தின் கீழே மீனுவும் மணியன் பூனையும் விளையாடிக் கொண்டிருந்தனர். டப்...............

சத்தம் கேட்டு மீனு பார்த்தாள்.

"ஹாய் பழுத்த மாம்பழம்"

மீனு மாம்பழம் எடுத்துக் கொள், இன்று உனது பிறந்தநாள் அல்லவா?'' மணியன் பூனை கூறியது.

மணியன் பூனை குதித்து வடையை எடுத்துக் கொண்டு ஓடியது? மணியன் பூனை எப்படி குதித்து வடையை எடுத்துக்கொண்டு ஓடியது? (நடித்தல்)

மாம்பழத்தையும் கையில் பிடித்தவாறே சமையல் அறைக்குச் சென்றாள் மீனு.

அம்மாவிடம் மாம்பழத்தைக் காட்டினாள். அவர்கள் என்ன பேசியிருப்பார்கள்? மீனு மேசை மீது பார்த்தாள். நிறைய பொருட்கள். மேசையின் மீது மீனு பார்த்த பொருட்களை நீங்களும் பார்க்க வேண்டாமா?

பயிற்சித்தாள் 6.3. "உண்பதற்குப் பயன்படுத்தும் பொருளுக்கு வட்டமிடுவோம்" அளித்தல்.

**படவாசிப்பு** : படத்தில் என்னென்ன?
இவைகளில் உணவுக்குப் பயன்படுபவை எவை? அதைச்சுற்றி வட்டம் வரைவோமா?

**மதிப்பீடு :**

- உணவுக்குப் பயன்படும் பொருட்களைப் பிரித்தறிந்து பெயர் கூற இயல்கிறது.
- பேனா, பென்சில் தவிர பிற அனைத்துப் பொருட்களுக்கும் வட்டம் வரையப்பட்டுள்ளது.

**பயிற்சித்தாள் – 6.4 நல்ல உணவுப் பழக்கவழக்கங்கள் எவை? படத்திற்கு வண்ணம் தீட்டுங்கள்.**

**வளர்ச்சி மண்டலம்** : அறிவு சார் வளர்ச்சி

**திறன்** : உணவுப் பழக்கவழக்கங்கள், சுகாதார பழக்கங்கள் போன்றவை அறிதல் (36)

**கருத்து** : சுத்தமான உணவை உண்ண வேண்டும்.

**சூழல்** : நல்ல உணவுப் பழக்கவழக்கங்களைக் கலந்துரையாடிய பிறகு பயிற்சித்தாள் வழங்குதல்.

**செயல்முறை**

- **கதைக்கூற்று** : விருந்து தயார் மீனுவின் அம்மா சொன்னார். மீனுவின் அம்மா ஒரு பாடல் பாடினார். நாமும் பாடுவோமா?

நெய்யில் பொரித்த பப்படமுண்டு
பாயசம் உண்டு பழமும் உண்டு.
பாகற்காய் பொரியலுமுண்டு.
பச்சடி உண்டு கிச்சடி உண்டு
புடலை சேர்த்த சாம்பாருமுண்டு

பொன்னிச் சோறு பரிமாறியதும் உண்டு.
மீனுக் குட்டி உண்டு மகிழ்ந்திடு.

- **விளையாட்டு** : இனி நாம் விளையாடுவோமா?

  குழந்தைகளை இரு குழுவாக்குதல்.

  ஒரு குழு வீட்டில் உள்ள பொருட்களின் பெயரைக் கூற வேண்டும். உணவுக்குப் பயன்படும் பொருட்கள் கூறினால் மட்டும் அடுத்த குழு 'ஞம் ஞம்' என்று சொல்ல வேண்டும். உணவுக்குப் பயன்படாதது என்றால் 'விரலால் நொடிக்க வேண்டும்' (விரல் நொடித்தல்) குழு மாறி விளையாட்டு தொடரலாம். (கூடுதல் புள்ளிகள் கிடைத்தவர்களுக்கு ஊக்கம் அளித்தல்).

- பயிற்சித்தாள் 6.4 "நல்ல உணவுப் பழக்க வழக்கங்கள் எவை? படத்திற்கு வண்ணம் தீட்டுங்கள்"
  - பயிற்சித்தாள் அளித்தல்
  - படத்தில் காண்பவைகளைக் குழந்தைகள் கூறுதல்
  - ஒவ்வொரு படத்தினுடையவும் விரிவான விளக்கம் கூற வேண்டும்.
  - இதில் நல்ல உணவுப் பழக்கங்கள் எவை?
  - செய்யக் கூடாதது எது?
  - நல்ல உணவுப் பழக்கவழக்கங்கள் காட்டும் படத்தின் அருகிலுள்ள கட்டத்தில் வண்ணம் தீட்ட வேண்டும்.

## மதிப்பீடு:

- நல்ல உணவுப் பழக்கவழக்கங்கள் பிரித்தறிந்து வண்ணம் தீட்ட இயல்கிறது.

## மையக் கருத்து 7 விழாக்கள், சுதந்திர தினம்

சுதந்திரம் என்பது புலப்படாத கருத்தாகும். தேசியக் கொடி என்பதும் அப்படிதான். அதனால் வண்ணம் தீட்டியும் அடையாள அட்டை தயாரித்தும் பாடல் வழியாகவும், அனுபவத்தை அளித்தால் மட்டும் போதும்.

### செயல்பாட்டு வரிசை

1. யானையின் பிறந்தநாள் (கதைப்பாடல்) + வண்ணம் தீட்டுதல் பயிற்சித்தாள் 7.1 "குட்டி யானையின் பிறந்தநாள்" அளித்தல்.

↓

2. வகுப்பறை அலங்கரித்தல் – தோரணங்கள் செய்தல் – தோரணங்களுக்கு வண்ணம் தீட்டுதல் (பயிற்சித்தாள் 7.2 "தோரணங்கள் செய்வோம்" அளித்தல்).

↓

3. விளையாட்டுகளில் பங்கேற்றல்.

↓

4. பிறந்தநாள் பாடல்கள்/ சுதந்திர தினப் பாடல்கள்.

↓

5. கொடி வடிவமைத்தல், வண்ணம் தீட்டுதல். பயிற்சித்தாள் 7.3 "கொடி வடிவமைப்போம்" அளித்தல்.

↓

6. ஊர்வலம் பயிற்சித்தாள் 7.4 அடையாள அட்டை தயாரிப்போம் அளித்தல்.

↓

7. அனுபவம் பங்கு வைப்போம்.

↓

8. சுதந்திர விளையாட்டுகள் /சுதந்திர தின விழா நிகழ்ச்சிகள்.

## பயிற்சித்தாள் – 7.1 குட்டி யானையின் பிறந்தநாள்.

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- உடல் இயக்க வளர்ச்சி
- அறிவு சார் வளர்ச்சி

**திறன்கள்** :
1. கிரையான்ஸ் பயன்படுத்தி சுதந்திரமாக படங்களுக்கு வண்ணம் தீட்ட இயல்தல் (4)
2. பொருட்களை ஒப்புமைப்படுத்த கணித மொழி பயன்படுத்துதல் – பெரியது, சிறியது. (39)

**கருத்து** : பிறந்த நாள், திருமணம் போன்ற விழாக்கள் வீட்டில் நடைபெறுவது உண்டு.

**கருவிகள்** : கிரையான்ஸ், கதை, பாடல்

**சூழல்** : பிறந்த நாளோடு தொடர்புடையை கதை / ஒரு குழந்தையின் பிறந்தநாள் தினம் / பிறந்த நாள் அனுபவங்கள் கூறுதல்.

### செயல்முறை

- **கதைப்பாடல்/ கதா பிரசங்கம்:** இந்த கதைப் பாடலை கதையுரையாகவோ கதை சொல்லுதல் வாயிலாகவோ வெளியிடல். பாவனையுடன் நடித்தல், செய்கை போன்றவையுடன் வெளியிட வேண்டும்.

யானைக் குட்டியின் பிறந்தநாள்<br>
இன்றல்லவா பிறந்தநாள்!<br>
புத்தாடை தைக்கவில்லை<br>
யானைக் குட்டி அறியவில்லை!<br>
வாடா மகனே செல்லமே!<br>
நதியில் சென்று நீராடலாம்.

அப்பா கொம்பன் அழைத்திட்டார்!
சோம்பேறிக் குட்டியானை அசையவில்லை.
வாடா மகனே கற்கண்டே!
நதியில் சென்று நீராடலாம்.
அம்மா யானை அழைத்திட்டார்!
சோம்பேறிக் குட்டியானை அசையவில்லை.
தும்பிக்கையில் தண்ணீருடன்
அம்மா யானை வந்தாளாம்!
தும்பிக்கையில் தண்ணீருடன்
அப்பா கொம்பன் வந்தாராம்!
சோ சோ சோ சோ மழையாக
சோம்பேறிக் குட்டன் குளித்தானே!
குளித்து விட்டான் குட்டியானை
பௌடர் போட்டான் குட்டியானை!
காரியம் என்னென்று தெரியாமல்
சிங்கரித்தான் குட்டியானை!
சின்ன எலியும் குட்டி முயலும்
புள்ளி மானும் வந்தனரே!
கரும்பு, வெல்லம், காட்டுப் பலா
இனிப்புப் பழங்கள் தென்னோலை!
உணவுகள் வந்து குவிந்த போது
காரியம் என்னவென்று தெரியாமல்
விழித்து நின்றான் வியப்போடு!
கொண்டாட்டம் என்ன சொல்லுங்க அம்மா?
கொண்டாட்டம் என்ன சொல்லுங்க அப்பா?
“ஹாப்பி ஹாப்பி குட்டியானை
ஹாப்பி பெர்த்டே குட்டியானை”
நண்பர்களின் சிரிப்பொலி கேட்டு
குட்டியானையும் வெட்கப்பட்டான்

கதைப்பாடல் வெளியிட்டபின் கேள்வி கேட்டல்.

குட்டி யானைக்கு நண்பர்கள் என்னென்ன பொருட்கள் பிறந்தநாளுக்கு வழங்கினர்?

(கதைப்பாடலின் முக்கிய பகுதிகளை மீண்டும் பாடுதல்).

ஒரு முக்கியமான காரியம் மறந்து விட்டனர். என்னவென்று கூற முடியுமா?

- பயற்சித்தாள் 7.1. ‘குட்டி யானையின் பிறந்தநாள்’ அளித்தல்
- **பட வாசிப்பு**
  - குட்டியானை என்ன செய்கிறது?
  - படத்திலுள்ள மிகப்பெரிய விலங்கு எது?
  - மிகச் சிறிய விலங்கு எது?
  - எத்தனை பரிசுப் பொட்டலங்கள் உள்ளன? எண்ணிப் பாருங்கள்.
- **வண்ணம் தீட்டுவோம்**
  - குட்டியானைக்கு உங்களுக்கு விருப்பமான வண்ணம் தீட்டுங்கள். (குழந்தைகள் வேறுபட்ட வண்ணம் கொடுக்கலாம்.)

  அவர்களை அங்கீகரிக்க வேண்டும்.

  “சிவப்பு ஆடை அணிந்த யானை மிக அழகாக இருக்கிறதே!” “இதோ நீல யானை, என்ன அழகு!...... இவ்வாறு..... குழந்தைகளின் பிறந்தநாள் நிகழ்ச்சிகளைக் கலந்துரையாட வேண்டும்.

## மதிப்பீடு :

- குட்டியானையைக் கண்டு பிடித்து அழகாக வண்ண தீட்ட இயல்கிறது.
- வண்ணம் தீட்டியுள்ளதன் முழுமை.
- உயிரினங்களைப் பிரித்தறிய இயல்கிறது.
- மிகப்பெரிய / மிகச் சிறிய விலங்குகளைக் கண்டுபிடித்துக் கூற இயல்கிறது.

## பயற்சித்தாள் - 7.2 தோரணங்கள் செய்வோம்

**வளர்ச்சி மண்டலம்** : உடல் இயக்க வளர்ச்சி

**திறன்** : கிரையான்ஸ் பயன்படுத்தி சுதந்திரமாக படங்களுக்கு வண்ணம் தீட்ட இயல்தல்.

**கருத்து** : விழாக்களை முன்னிட்டு வீட்டையும் சுற்றுப்புறத்தையும் பள்ளியையும் அலங்கரிக்கின்றனர்.

**கருவிகள்**: சணல் நூல், வண்ணக் காகிதம், குருத்தோலை, இலைகள், பசை, ஈர்க்கில், கட்அவுட்.

**சூழல்** : சுதந்திர தின விழா.

**செயல்முறை**

- **உருவாக்குதல்** : தோரணங்கள்
- **கலந்துரையாடல்** : விழாக்கள் கொண்டாடும் போது அலங்கரிப்போமல்லவா? எவ்வாறெல்லாம் அலங்கரிக்கலாம்.
  - குருத்தோலை வைத்து
  - இலைகள், துணி
  - மின் விளக்குகள்
  - வண்ணக் காகிதங்கள் வைத்து
- **உருவாக்குதல்** : நாமும் தோரணங்கள் செய்வோம். சணல் நூல், பசை, வண்ணக் காகிதம் போன்றவை அளித்தல். நூலை இழுத்துக் கட்ட வேண்டும். பசை சிரட்டையில் கொடுக்க வேண்டும். ஈர்க்கிலைப் பசையில் மூழ்க வைத்து பின் தோரணத்தின் மேற்பகுதியில் தேய்த்து நூலில் ஒட்டும் முறையைக் காட்டிக் கொடுக்க வேண்டும். குழந்தைகள் தோரணம் ஒட்டட்டும். உதவவும், செயல்பாடு முழுமையானால் தோரணத்தை வகுப்பில் உயரத்தில் இழுத்துக் கட்ட வேண்டும். விழாக்கள், பண்டிகைகளுக்குக் கட்டும் துணித் தோரணங்களின் சிறு மாதிரிகளை வகுப்பில் காட்சிப்படுத்த வேண்டும். தனித்தன்மைகள் (நிறம், வடிவம், காற்றில் அசைவதற்குத் தேவையான நீளம் போன்றவை குறித்து கலந்துரையாட வேண்டும்) தொலைவிலிருந்தாலும் நிறம், அசைவு, வடிவம் போன்றவை ஈர்க்கும் வகையில் இருந்தால் கவனிப்பார்கள்.
- பயிற்சித்தாள் 7.2 'தோரணங்கள் செய்வோம்' அளித்தல்

  இதுபோன்ற வண்ணத் தோரணங்களின் படங்களை உங்களுக்குத் தருகிறேன். ஒன்றிற்கு நீங்கள் தான் வண்ணம் தீட்ட வேண்டும். மஞ்சள், சிவப்பு, நீலம், பச்சை போன்ற நிறங்கள் (கிரையான்ஸ்,

வண்ண பென்சில்) அளித்தல். முதலில் சிவப்பு, பிறகு நீலம், தொடர்ந்து பச்சை, இறுதியில் மஞ்சள் என்ற முறையில் வண்ணம் அளிக்கட்டும், இதோடு உள்ள கட்அவுட் வழங்கியும் வண்ணமிட கேட்டுக் கொள்ளலாம். இயற்கையோடு ஒன்றிய முறையில் குருத்தோலை இலைகள் பயன்படுத்தி தோரணமும் செய்யலாம்.

- வண்ணம் தீட்டிய தோரணங்களைக் குழந்தைகள் உற்று நோக்குதல்.
- எத்தனை தோரணங்கள்?
- வண்ணம் தீட்டாத தோரணத்தில், வண்ணம் தீட்டிய தோரணத்தைப் போன்று வண்ணம் தீட்ட பரிந்துரைத்தல்.

## மதிப்பீடு :

- பரிந்துரைக் கேற்றவாறு வண்ணம் தீட்ட இயல்கிறது.

### பயிற்சித்தாள் – 7.3 கொடி வடிவமைப்போம்

**வளர்ச்சி மண்டலம்** : உடல் இயக்க வளர்ச்சி

**திறன்கள்** :
1. படத்திற்கு கிரையான்ஸ் பயன்படுத்தி வண்ணம் தீட்ட இயல்தல் (4)
2. காகிதம் வெட்டவும் ஒட்டவும் இயல்தல்.
3. கத்தரிக்கோல் பயன்படுத்தி வெட்ட இயல்தல். (7)

**கருத்து** : விழாக்களின் போது வீடும் சுற்றுப்புறமும் பள்ளியும் அலங்கரிக்கப்படுகிறது.

**கருவிகள்** : பசை, ஈர்க்கில், உறிஞ்சு குழல், ஸ்டாப்பிலர்.

**சூழல்** : சுதந்திர நாளின் முன் தினம் கொடி வடிவமைத்தல்.

**செயல்முறை**

- **உருவாக்குதல்** : கொடி வடிவமைத்தல்.
  இந்தியாவின் தேசியக் கொடி ஆடி அசையும் படம்.
- **காணொளிக் காட்சி**: காணொளி காண்பித்தல். கொடி உயர்த்தும் போது எப்படி நிற்க வேண்டும்?
  - ஒரு பாடல் பாடுவோம்.
- **பாட்டு பாடுதல்** : எல்லோரும் எழுந்து நிற்க வேண்டும்.

வருக வருக நண்பரே
வரிசையாக நில்லுங்கள்
தலை நிமிர்ந்து முறையாய் நின்று
கொடியை நாமும் வணங்குவோம்
பச்சை, வெள்ளை, காவி
மூன்று நிறங்கள் உள்ளனவே
நடுப் பகுதி கொடியில் ஒரு
நீல சக்கரம் உள்ளதே
நமது நாட்டின் கொடியிது
நாமும் கொடியை வணங்குவோம்.

இரண்டாம் முறை பாட்டு பாடும்போது குழந்தைகள் காணொளிக் காட்சியில் பார்த்த பாடலில் நிற்பது போல் நிற்க வேண்டும். நிறங்களையும் அசோகச் சக்கரத்தையும்

சுட்டிக் காட்டி பச்சை, வெள்ளை, காவி என்ற வரிகள் பாட வேண்டும்.

- பயிற்சித்தாள் 7.3. 'கொடி வடிவமைப்போம்' அளித்தல்.

பரிந்துரைக்கேற்ற முறையில் வண்ணம் தீட்டுதல். வண்ணம் தீட்டிய கொடியை ஈர்க்கலில்/ ஸ்டிரா, பசை தேய்த்து ஒட்டுதல். (ஸ்ட்ராப்பிலர் செய்தாலும் போதும்) எல்லோரும் கொடி உயர்த்திப் பிடித்து பச்சை, வெள்ளை, காவி...... வரிகள் பாடுதல்.

– சுதந்திர தின ஊர்வலத்தில் தேசியக் கொடியைப் பயன்படுத்துதல்.

## மதிப்பீடு :

– முறையாக வண்ணம் தீட்டியுள்ளனர்.

– கத்தரிக்கோல் பயன்படுத்தி சரியாக வெட்ட இயல்கிறது.

– அழகாக ஒட்ட இயல்கிறது.

## பயிற்சித்தாள் – 7.4 அடையாள அட்டை தயாரிப்போம்

**வளர்ச்சி மண்டலம்** : உடல் இயக்க வளர்ச்சி

**திறன்கள்** :

1. படத்திற்கு கிரையான்ஸ் பயன்படுத்தி வண்ணம் தீட்ட இயல்தல். (4)
2. கத்தரிக்கோல் பயன்படுத்தி வெட்ட இயல்தல். (7)

**கருத்து** : விழாவை முன்னிட்டு வீடும் சுற்றுப்புறமும் பள்ளியும் அலங்கரித்தல்.

**கருவிகள்** : கத்தரிக்கோல், கிரையான்ஸ்

**சூழல்** : சுதந்திர தினத்தின் முன் தினம் செய்ய வேண்டிய செயல்பாடு.

### செயல்முறை

- **பாட்டுபாடுதல்** : பாட்டுபாடுவோம் (உரையாடல் பாடல்)

குழந்தை : முல்லைச் செடியே பூ தருவாயா?
மாலை கட்ட நீ வருவாயா?
முல்லை : எதற்கு குழந்தாய் முல்லைப்பூ?
சின்னத் தலையில் சூடவா?
குழந்தை : என் தலையில் சூடுவதற்கல்ல.
வேறொரு காரியம் உண்டன்றோ!
முல்லை : எனக்கு தண்ணீர் தந்தவளே!
நீயே எடுத்துக்கொள் பூவெல்லாம்.
குழந்தை : பூக்கள் பறிப்பேன் நான் இப்போது.
மாலை கட்டுவேன் நானிப்போது.
முல்லை : யாருக்கு கொடுப்பாய் இம்மாலையை?
யாரை அணிவிப்பாய் இம்மாலையை?
குழந்தை : சுவரில் இருக்கும் காந்தித் தாத்தா!
நமது தேசத் தந்தை காந்திக்கு!

காந்திஜியின் படம் காட்டுதல் ஊர்வலத்திற்காக நாம் கொடி வடிவமைத்தோம் அல்லவா? இப்போது ஒவ்வொருவருக்கும் அடையாள அட்டை தயாரிப்போம்.

- பயிற்சித்தாள் 7.4 'அடையாள அட்டை தயாரிப்போம்' அளித்தல்.

அடையாள அட்டை அளித்தல். இதை அணிந்து கொண்டு தான் ஊர்வலத்திற்குச்

செல்ல வேண்டும். அடையாள அட்டைக்கு வண்ணம் தீட்டுவோம் கீழே உள்ள ரிப்பனிற்கு பச்சை. இடது பக்கம் காவி, வலது பக்கத்திற்கு நீல நிறம் தீட்டினாலோ? பிற வண்ணங்களைக் குழந்தைகள் கூறட்டும். வண்ணம் தீட்டிய பின் அடையாள அட்டையை வெட்டி பெயர் எழுதி குழந்தைகளுக்கு அணிவிக்க வேண்டும்.

தாத்தா காந்தி சிரிப்பைப் பார் - அதில்
தவழும் அன்பின் ஒளியைப்பார்
நாட்டின் விடுதலைக்காக பல காலம்
போராட்டம் செய்த உத்தமர் பார்.
இவர்தான் நமது தேசத் தந்தை
இவரே நமது காந்தித் தாத்தா

- அடையாள அட்டையின் நடுவில் உள்ள படம் யாருடையது?

**மதிப்பீடு :**

- முறையாக வண்ணம் தீட்டியுள்ளனர்.
- கத்தரிக்கோல் பயன்படுத்தி வெட்டி எடுக்க இயல்கிறது.

# மையக் கருத்து 8 உடல் நலம், நோய்கள், மருத்துவமனை

கொளாஷ், சைகைப்பாடல், போலச் செய்தல் விளையாட்டு போன்ற குறியீடுகளுடன் இணைத்து பயிற்சித்தாள்கள் வழங்க வேண்டும். செயல்பாட்டு வரிசை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### செயல்பாட்டு வரிசை

1. பாடல்கள்.

↓

2. தூய்மைப் படுத்தும் செயல்பாடுகள் + குப்பைத் தொட்டி உருவாக்குதல் + பயிற்சித்தாள் – 8.1 "என்னவெல்லாம்?" வழங்குதல்.

↓

3. சுதந்திரமாக உரையாடுதல்.

↓

4. பட வாசிப்பு.

↓

5. தனி நபர் சுத்தம் கடைபிடித்தல். (பல் தேய்த்தல், கை கழுவுதல் – துடைத்தல்)

↓

6. சுயமாகச் செய்யும் செயல்கள். (செருப்பு அணிதல், தலைமுடி சீவுதல், ஆடை அணிதல்)

↓

7. படவாசிப்பு, பயிற்சித்தாள் 8.2 'யார் சரி?' வழங்குதல்.

↓

8. பாத்திர நடிப்பு – மருத்துவமனை.

பயிற்சித்தாள் – 8.3 'மருத்துவ மனைக்குச் செல்லும் வழி வழங்குதல்.

↓

9. மருத்துவர், செவிலியர் போலச் செய்து விளையாடுதல்.

↓

10. பயிற்சித்தாள் 8.4 "படம் பார்த்துக் கூறுவோம்" வழங்குதல்.

↓

11. மருத்துவர் செட் விளையாட்டுப் பொருட்களைப் பயன்படுத்தி விளையாடுதல்.

## பயிற்சித்தாள் – 8.1 என்னவெல்லாம்?

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி.

**திறன்கள்** : படத்தை உற்றுப் பார்த்து குழுவில் சேராததைப் பிரித்தறிந்து கண்டுபிடித்துச் சொல்லவும் அதன் காரணம் கூறவும் இயல்தல். (33)

**கருத்து** : தனிநபர் சுத்தம், சுற்றுப்புற சுத்தம் போன்றவற்றைக் கடைபிடித்தால் நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

**கருவிகள்** : பல வண்ணக் காகிதங்கள் (இதழ்கள், பத்திரிகைகள் போன்றவற்றிலிருந்து வெட்டி எடுத்தவை போதுமானது) பசை, எ4 காகிதம், கட்அவுட்

**சூழல்** : சுற்றுப்புறத் தூய்மை செய்யும் செயல்பாட்டிற்குப் பிறகு.

### செயல்முறை

- உருவாக்குதல் : கொளாஷ் உருவாக்குதல்.

சிவப்பு, பச்சை, மஞ்சள் போன்ற வண்ணக்

காகிதங்களை சிறிய சிறிய துண்டுகளாக்க வேண்டும்.

குழந்தைகளே வெட்டி எடுக்கட்டும், கையால் வெட்டினால் போதும். ஆசிரியை மரத்தின் கட்அவுட்டை வைத்து அனைவருக்கும் அவுட்லைன் வரைந்து கொடுக்க வேண்டும். மரத்தின் வடிவக் கோட்டிற்குள் விருப்பத்திற்கு பச்சை, மஞ்சள், சிவப்பு போன்ற வண்ணத் துண்டுகளை ஒட்ட வேண்டும். (பசை தேய்க்க உதவ வேண்டும்) பச்சை வண்ணத் துண்டுகள் ஏராளம் இருக்க வேண்டும். மரத்தின் தடிப் பகுதிக்கு தவிட்டு நிறமுள்ள கிரையான் பயன்படுத்தி வண்ணம் தீட்டவும். தரையில் பச்சையும் கறுப்பும் நிறத் துண்டுகளை ஒட்ட வேண்டும். சிவப்புப் பொட்டை வானத்தில் ஒட்டக் கொடுக்க வேண்டும் (சூரியன்). அனைவரின் படங்களையும் ஒருவருக்கொருவர் பார்ப்பதற்கான வாய்ப்பு அளிக்க வேண்டும். கொளாஷ் தயாரிக்கும் போது பல வண்ணத் துண்டுகள் தரையில் விழுந்து கிடக்கும். அதை என்ன செய்ய வேண்டும் என்று கேட்க வேண்டும்.

குப்பைகளைச் சுத்தம் செய்யும் கருவிகளின் படம் வரைதல். (விளக்கமாறு, குப்பை அள்ளி, தரை துடைப்பான்)

குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் போடுதல்.

- பயற்சித்தாள் 8.1 "என்னவெல்லாம்" வழங்குதல்.
  - பயிற்சித்தாளில் உள்ள படத்தை உற்று நோக்குதல்.
  - படத்தில் என்னென்ன உள்ளது?
  - இவைகளில் மீண்டும் பயன்படுத்துபவை என்னென்ன?
  - இதில் குப்பைத் தொட்டியில் போட வேண்டிய பொருட்களைக் கண்டுபிடித்து அவைகளுக்கு வட்டமிடுங்கள்.
  - குப்பைத் தொட்டி எதற்காக?
  - குப்பைத் தொட்டியில் குப்பைகள் நிறைந்தால் என்ன செய்ய வேண்டும்? கலந்துரையாடல்.

## மதிப்பீடு :

குப்பைத் தொட்டியில் போட வேண்டிய பொருட்களைக் கண்டுபிடிக்க இயல்கிறது.

## பயிற்சித்தாள் - 8.2 யார் சரி?

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்கள்** :

1. ஆரோக்கிய பழக்க வழக்கங்கள் சுகாதார பழக்க வழக்கங்கள் போன்றவை பற்றி அறிதல். (36)
2. கண்டுபிடித்தல் செயல்பாடுகளில் ஈடுபடவும் அனுபவத்தின் பின்துணையோடு பொது முடிவுகள் வெளியிடவும் இயல்கிறது. (31)

**கருத்து** : ஆரோக்கியத்திற்கு சுகாதார பழக்கவழக்கங்கள் கடைபிடிப்பது மிகவும் முக்கியமாகும்.

**கருவிகள்** : சோப்பு, கிரையான்ஸ்

**சூழல்** : ஆரோக்கிய பழக்க வழக்கங்களைக் குறித்து கலந்துரையாடல்.

**செயல்முறை**

- **சைகைப்பாடல்** : காகம் பறப்பதைப் பார்த்ததுண்டா?
  இதுபோல் இதுபோல் இது போல (சைகை)
  தவளைகள் குதித்துச் செல்வதைப் பார்த்த துண்டா?
  இது போல் இதுபோல் இது போல (சைகை)
  பந்து விளையாடுவதைப் பார்த்ததுண்டா?
  இது போல் இது போல் இது போல (சைகை)
  மண்ணைக் குழைப்பதைப் பாரத்ததுண்டா?
  இதுபோல் இதுபோல் இது போல (சைகை)
  தண்ணீர் இறைப்பதைப் பார்த்ததுண்டா?
  இதுபோல் இதுபோல் இது போல (சைகை)
  கைகள் கழுவுதலைப் பார்த்ததுண்டா?
  இதுபோல் இது போல் இது போல (சைகை)

  கை எப்போதெல்லாம் கழுவுவீர்கள்? எதற்காக? கலந்துரையாடல். கை கழுவத் தெரியுமா? வெளியில் சென்று சோப்பு போட்டு நன்றாக கைகள் கழுவுதல். அனைத்து விரல்களின் இடையிலும் உள்ள அழுக்கு நீங்கும் படியாக இரு கைகளின் விரல்களையும் சேர்த்து உரசி கழுவும் முறையைப் பழக்கப்படுத்த வேண்டும். (அறிவியல் முறையிலான கை கழுவுதல் போதும்)

தொடர்ந்து

- பயிற்சித்தாள் – 8.2 'யார் சரி?' வழங்குதல்.
- **கலந்துரையாடல்** – படத்தில் பார்க்கும் செயல்களைப் பற்றி பேசுதல்.
- **கதைக்கூற்று** – மாலை நேரம் ஆனது குணசேகர் பந்துடன் விளையாடச் சென்றான். விளையாடிய பிறகு அவன் தொலைக்காட்சி பார்க்க அமர்ந்தான். அப்போது அம்மா உணவு உண்ண அழைத்தார். அவன் உணவு உண்டபின் உறங்கினான். (மேலே தரப்பட்டுள்ள படம்)
  - கீழே உள்ள படத்தில் அகிலனைப் பாருங்கள்.
  - அகிலன் செய்த காரியங்களை அதே போன்று குழந்தைகள் கூறட்டும்.
  - மேலே உள்ள படத்திற்கும் கீழே உள்ள படத்திற்கும் ஏதாவது வேறுபாடு உண்டா?
  - என்ன வேறுபாடு?
  - விளையாடி விட்டு வீட்டிற்கு வந்த பிறகு அகிலன் ஏன் குளித்தான்?
  - எந்த படத்திலுள்ள குழந்தை சரியான ஆரோக்கிய பழக்க வழக்கங்களைக் கடை பிடித்தது?
  - அந்தப் படத்தைக் கண்டுபிடித்து இடது பக்கத்திலுள்ள முகத்திற்கு (சிரிக்கும் முகம்) வண்ணம் தீட்ட வேண்டும்.

## மதிப்பீடு:

– சரியான ஆரோக்கிய பழக்க வழக்கங்களைக் கடைபிடிக்கும் குழந்தையின் படத்தைப் பிரித்தறிந்து அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

### பயிற்சித்தாள் – 8.3 'மருந்துவ மனைக்குச் செல்லும் வழி'

**வளர்ச்சி மண்டலங்கள் :**
- உடல் இயக்க வளர்ச்சி
- அறிவு சார் வளர்ச்சி

**திறன்** : முன் எழுத்து செயல்பாடுகளில் ஈடுபட இயல்தல் (13)

**கருத்துகள்** :
- நோய் வந்தால் சிகிட்சை செய்யும் இடம் தான் மருத்துவமனை.
- மருத்துவமனையில் மருத்துவர், செவிலியர் போன்றோர் உள்ளனர்.

**சூழல்** : ஆரோக்கியப் பாடல் பாடிய பிறகு.

**செயல்முறை**

- **பாடல்**

வயிறே சரணம் என்று பாடி நடப்பான்
குண்டுப் பையன் குணசேகர்.
கண்ணில் கண்டதைத் தின்று நடப்பான்
கையும் வாயும் கழுவாமல்.
வயிற்று வலி..... பல் வலி......
வலி வலி முழுவதும் வலி.
ஒன்றும் உண்ண முடியாமல்
கூவி அழுதான் குண சேகர்.
வைத்தியர் வந்தார்; மருத்துவர் வந்தார்.
கூச்சல் குழப்பம் ஆரவாரம்.
உண்பதற்கு முன்னும் பின்னும்
கையும் வாயும் கழுவுவாய்.
சுத்தமாக நடக்கா விட்டால்
நோய்கள் நம்மைத் தொற்றி விடும்!

இப்பாடலைக் குழுவாகப் பாடி வெளியிட்ட பிறகு நிகழ்வுகளை நடிக்க வேண்டும்.

குணசேகரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

- பயிற்சித்தாள் 8.3 'மருத்துவமனைக்குச் செல்லும் வழி' வழங்குதல்
  - படத்தில் யார் யார் மருத்துவமனைக்குச் செல்கின்றனர்? குழந்தைகளின் பிரதிபலிப்பு.
  - அவர்களை வழி தவறாமல் மருத்துவ மனைக்கு கொண்டு செல்வீர்களா?
  - குழந்தைகள் ஒவ்வொருவருடையவும் வழிகளை விரலினால் வரைதல்.
  - பின்னர் கிரையான் பயன்படுத்தி வரைதல்.
  - ஒவ்வொருவரும் வெவ்வேறு வண்ணங்களைப் பயன்படுத்த பரிந்துரைக்க வேண்டும்.
  - ஒவ்வொருவருக்கும் தனித்தனி வழி வரைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.
  - மருத்துவமனை அனுபவங்கள் பற்றி சுதந்திர உரையாடல்.

## மதிப்பீடு:

- மருத்துவர், செவிலியர், நோயாளி போன்றவர்களின் படங்களைப் பிரித்தறிய இயல்கிறது.
- பல்வேறு வண்ண கிரையான்ஸைப் பயன்படுத்தி மூன்று வழிகளையும் வரைந்துள்ளனர்.
- வரையப்பட்டுள்ளதன் நுட்பம்
- மருத்துவமனையில் உள்ள கருவிகளின் நேராக உள்ள வட்டத்திற்குள் சரி அடையாளம் இட்டுள்ளனர்.

## பயிற்சித்தாள் – 8.4 படம் பார்த்துக் கூறுவோம்

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்கள்** : கண்டு பிடிக்கும் செயல்பாடுகளில் ஈடுபடவும் அனுபவத்தின் பின்துணையோடு பொது முடிவுகளை வெளியிடவும் இயல்தல்.

**கருத்து** : நோய் வந்தால் சிகிட்சை அளிக்கும் இடம் தான் மருத்துவமனை.

**கருவிகள்** : மருத்துவர்செட்

**சூழல்** : ஆசிரியையும் குழந்தைகளும் சேர்ந்து மருத்துவர் செட்டைப் பயன்படுத்தி மருத்துவமனை விளையாட்டு விளையாடுதல் குழந்தைகள் மருத்துவராகவும் செவிலியர்களாகவும் நோயாளிகளாகவும் போலச் செய்து விளையாடுதல். ஒவ்வொருவரும் கருவிகளைப் பயன்படுத்தட்டும்.

**செயல்முறை**

- **மருத்துவமனை விளையாட்டு** : சில குழந்தைகள் நோயாளிகள், ஒரு மருத்துவர், ஒரு செவிலியர். குழந்தைகள் வரிசை வரிசையாக வருதல். மருத்துவர் பரிசோதித்தல் (கண், வாய், உடல் வெப்பம், நாடித்துடிப்பு.....)
  - மருந்து எழுதிக் கொடுத்தல்
  - செவிலியர் ஊசி போடுதல்

  (மருத்துவர் பெட்டியில் உள்ள கருவிகளைப் பயன்படுத்துதல்).
- பயிற்சித்தாள். 8.4 "படம் பார்த்துக் கூறுவோம்" வழங்குதல்.
  - பயிற்சித்தாளில் உள்ள படத்தில் உள்ளது என்ன? விளையாட்டு ஸ்டெதஸ்கோப்பைப் பயன்படுத்தி ஒருவருக்கொருவர் இதயத் துடிப்பைக் கேட்கட்டும்.
- **கலந்துரையாடல்**
  - விளையாட்டைப் பற்றிய கலந்துரையாடல்
  - மருத்துவராக நடித்தது யார்?
  - மருத்துவரின் கையில் உள்ள கருவியின் பெயர் என்ன?
  - படத்தின் கீழே உள்ள வட்டத்திற்குள் என்னென்ன?
  - குழந்தைகளின் பிரதிபலிப்பு
  - அவைகளில் மருத்துவமனையில் உள்ள கருவிகள் என்னென்ன?

- குழந்தைகளின் பிரதிபலிப்பு
- மருத்துவமனை கருவிகளுக்கு நேராக உள்ள வட்டத்திற்குள் சரி அடையாளம் இடுங்கள்.

**மதிப்பீடு :**

- மருத்துவமனைக் கருவிகள் பிரித்தறியப் பட்டுள்ளது.

# மையக் கருத்து 9 பூக்கள், பூந்தோட்டம் வண்ணத்துப்பூச்சிகள்

பூக்களை வகுப்பில் எதற்காகக் கொண்டு வருகிறோம்? பூந்தோட்டத்தை உற்றுப்பார்ப்பதைத் தவிர்க்கக்கூடாது. மழலையர் பள்ளியில் பூந்தோட்டம் மிக இன்றியமையாதது ஆகும். பயிற்சித்தாள்கள் வழங்கும் போது ரசிப்பதற்கேற்றவாறும். சுயமான முறைகளையும் பின்பற்றலாம். கற்பனை உலகத்திற்குள் நுழைய வைக்க சில வாய்ப்புகள் இங்கே பயன்படுத்தப் பட்டுள்ளன. தாய்ச் செடிகளைத் தொடவையுங்கள் என்ற செயல்பாட்டு அட்டை ஆசிரியர்களுக்கு சுதந்திரமாகப் பயன்படுத்துவதற்கு தரப் பட்டுள்ளதாகும். முன் செயல்பாடுகளின் கருத்துக்களின் அடிப்படையில் செயல்பாடுகளை விரிவுபடுத்திக் கொள்ளலாம்.

## செயல்பாட்டு வரிசை

1. கதைக்கூற்று.

↓

2. பயிற்சித்தாள் – 9.1 'வரைவோம், வண்ணம் தீட்டுவோம்.'

↓

3. சுதந்திரமாக பூக்கள், பூந்தோட்டம் போன்றவை வரைதல் அழகு படுத்துதல். (கொளாஷ், மணல், மரப்பொடி, கிரையான், வண்ணக் கலவை போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.)

↓

4. கதைக்கூற்று.

↓

5. தனது பூந்தோட்டத்தைப் பற்றிக் கூறுதல். (வீட்டில் வளர்த்தும் செடிகள்)

↓

6. பூக்களைப் பிரித்தறிதல் பயிற்சித்தாள் – 9.2 "தாய்ச் செடிகளைத் தொடவைத்தல்" வழங்குதல்.

↓

7. பயிற்சித்தாள் – 9.3 "வண்ணம் தீட்டுவோம் குழுக்களைக் கண்டறிவோம்".

↓

8. இயற்கையை உற்று நோக்கி நடத்தல்.

↓

9. பார்த்த காரியங்களைக் கூறுதல்.

↓

10. சேகரித்த பூக்களை மணமுள்ளது, மணமற்றது, வழுவழுப்பானது, சொரசொரப்பானது என வகைப்படுத்துதல்.

↓

11. பயிற்சித்தாள் – 9.4. 'நண்பனைக் கண்டுபிடிப்போம்' வழங்குதல்.

↓

12. பெருமை பேசுதல்.

↓

13. பயிற்சித்தாள் – 9.5 "வண்ணம் தீட்டுவோம் பெருமை பேசுவோம்" வழங்குதல்.

↓

14. வகைப்படுத்துதல்.

↓

15. மணல் தட்டில் பூக்களை நட்டு அலங்கரித்தல்.

↓

16. மலர் கூஜாவில் பூக்களை ஒழுங்குபடுத்தி வைத்தல்.

↓

17. மாலை கட்டுதல் பயிற்சித்தாள் 9.6 "பூ செய்வோம்" வழங்குதல்.

↓

18. பூந்தோட்டம் பராமரித்தல்.

↓

19. பயிற்சித்தாள் – 9.7 'படத்தை முழுமை செய்வோம்' வழங்குதல்.

## பயிற்சித்தாள் 9.1 வரைவோம் வண்ணம் தீட்டுவோம்

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- அறிவுசார் வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்கள்** :
1. இயற்கையை ரசிக்கவும் படம் வாயிலாக வெளிப்படுத்தவும் வண்ணம் தீட்டவும் இயல்தல். (80)
2. கணிதப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல். (46)

**கருத்துகள்** :
- பூ பூக்கும் தாவரங்கள் உள்ளன.
- பல வண்ணங்களில் பூக்கள் உள்ளன.
- பூக்களில் வண்டுகளும், வண்ணத்துப் பூச்சிகளும், தேனீக்களும் தேன் குடிக்க வருகின்றன.

**கருவிகள்** : கிரையான்ஸ்

**சூழல்** : பூந்தோட்டம், வண்ணத்துப் பூச்சி போன்றவற்றைப் பற்றிய பாடல்களைப் பாடுதல்.

**செயல்முறை**

- கதைக்கூற்று : "அனு... அனு... அனு."

அனு கண் விழித்தாள். யார் அழைத்தது? ஆஹா! நீங்களா? அவளைத் தொட்டபடியே ஒருபுள்ளியுள்ள வண்ணத்துப் பூச்சி பறந்து சென்றது. "ஏய்! வண்ணத்துப் பூச்சியே சற்று நில்!" அவள் அதன் பின்னே ஓடினாள். வண்ணத்துப் பூச்சி பறந்து பறந்து பூந்தோட்டத்தை அடைந்தது. அது செம்பருத்திப் பூவில் அமர்ந்தது. அவள் மெல்ல மெல்ல பதுங்கிப் பதுங்கிச் சென்றாள். கைகள் நீட்டினாள். (நடித்தல்) தொட்டும் தொடாமலும் வண்ணத்துப் பூச்சி பறந்து விட்டது. 'நிறைய வண்ணத்துப் பூச்சிகள்! ஒன்றையாவது பிடிக்க வேண்டும்.' வண்ணத்துப் பூச்சிகள் அனுவைக் கண்டதும் உயர்ந்து பறந்து பின் தாழ்வாகப் பறந்து வட்டம் சுற்றி அவளின் அருகே வந்தது. மீண்டும் பறந்து ஒவ்வொரு பூவிலும் சென்று அமர்ந்தது. அவள் மீண்டும் மெல்ல மெல்ல பதுங்கிப் பதுங்கிச் சென்றாள். மெல்ல கைகள் நீட்டினாள். (நடித்தல்) வண்ணத்துப் பூச்சி சட்டெனப் பறந்தது. "இப் பூ இருப்பதால் தானே உனக்கு கர்வம்? அவள் வண்ணத்துப் பூச்சியைப் பார்த்து கோபப்பட்டாள். அவள் பூ பறிக்க நண்பர்களை அழைத்தாள்.

"பூ பறிக்க வாரீரோ வாரீரோ விடியலில்" யாரும் வரவில்லை. அனு பூக்கள் பறிக்க முல்லையின் அருகே வந்தாள். முல்லைக் கொடி விரைவில் வளர்ந்து படர்ந்து கொய்யாவில் சுற்றிச் சுற்றி ஏறியது. அவள் ரோஜாவின் அருகே வந்தாள்.

ரோஜாவும் வளர்ந்து வளர்ந்து அவளைவிட உயரத்தில் பூவைப் பூக்கச் செய்தது.

மரக்கிளையிலிருந்து மைனா இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தது.

"அனு..... உன்னை யாராவது பிடித்து கட்டிப் போட்டால் உனக்குப் பிடிக்குமா?" இல்லை. அப்படியென்றால் நீ ஏன் வண்ணத்துப் பூச்சியைப் பிடிக்கச் சென்றாய்? அதற்கு வருத்தம் தோன்றாதா?"

"பூக்களைப் பறித்தால் பூந்தோட்டத்தின் அழகு குறையாதா?" என்று மைனா கேட்டது. சரி தானே! அனு ஆலோசித்தாள். அவள் கையைத் தட்டி வண்ணத்துப் பூச்சியை அழைத்தாள்.

"புள்ளிச் சட்டையணிந்த வண்ணத்துப் பூச்சியே
பூந்தேன் அருந்த வருவாயோ நீ
எங்கே குதித்துப் பறக்கின்றாய்?
எங்கே ஓடியொளிகின்றாய்?
எதற்கு ஓடியொளிகின்றாய்?'.

வண்ணத்துப் பூச்சிகள் அனைத்தும் பறந்து வந்தன. செடிகளும் கொடிகளும் கிளைகளைச் சாய்த்து அவள் அருகே வந்தன. அவளைத் தொட்டு வருடியது. என்ன அழகான பூந்தோட்டம்! அனுவும் வண்ணத்துப் பூச்சிகளும் பூக்களும் சேர்ந்து பாடினர். நாமும் சேர்ந்து பாடுவோமா?

"மலர்கள் நாங்கள் மலர்கள்
நாங்கள் ரோஜா மலர்கள்
சிவப்பு ரோஜா மலர்கள்
மலர்கள் நாங்கள் மலர்கள்
மலர்கள் நல்ல மலர்கள்
நல்ல நல்ல மலர்கள்
பல வண்ண மலர்கள்
பல வடிவ மலர்கள்
நறு மணம் வீசும் மலர்கள்
..............................................................
..............................................................

புதிய வரிகளை உருவாக்கிப் பாடலாம்.

அனுவின் பூந்தோட்டத்தை நீங்கள் பார்க்க வேண்டாமா?

பயிற்சித்தாள் 9.1 "வரைவோம் வண்ணம் தீட்டுவோம்" வழங்குதல்.

- **படவாசிப்பு**
  - படத்தில் என்னென்ன? சுதந்திர பிரதிபலிப்பு.
  - ஒரு தாய்ச் செடி ஏன் வருத்தத்துடன் நிற்கிறது? பூவில்லாமல் இருப்பதாலா?
  - பூவை வரைந்து இணைப்போமா?
  - பூவிற்கு வண்ணம் தீட்டவேண்டாமா?
  - இலைகளுக்கோ?
  - வண்ணத்துப்பூச்சிகளுக்கோ?
- **வண்ணம் தீட்டுதல்**
  - வண்ணம் தீட்டலாம்.
  - ஒவ்வொரு வண்ணத்துப் பூச்சிக்கும் ஒவ்வொரு பூவில் அமர வேண்டும். என்ன செய்யலாம்?

- **கலந்துரையாடல்** – ஒவ்வொரு பூவிற்கும் ஒவ்வொரு வண்ணத்துப் பூச்சி வேண்டும். என்ன செய்யலாம்?
  - நண்பர்களை வரைந்து இணைப்போம்.
  - எத்தனை தும்பிகள் உள்ளன?
  - வண்ணத்துப் பூச்சிகளின் எண்ணிக்கைக் கேற்ப இனி எத்தனை தும்பிகள் வேண்டும்?
    (ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொன்றென இணைத்தல்)
  - வண்ணத்துப்பூச்சிக்கு நண்பனை வரைந்து இணையுங்கள்.
  - முழுமை செய்தவர்கள் பயிற்சித்தாளை காட்சிப் படுத்துதல். குழந்தைகளுக்குப் பார்ப்பதற்கான வாய்ப்பு அளித்தல்.

## மதிப்பீடு:

- கணிதப் பிரச்சனைக்குத் தீர்வு காண இயல்கிறது.
- அழகாக வண்ணம் தீட்டுப்பட்டுள்ளது.
- படம் வரைந்து இணைக்க இயல்கிறது. (பூ, தும்பி)

## பயிற்சித்தாள் – 9.3 வண்ணம் தீட்டுவோம், குழுக்களைக் கண்டறிவோம்.

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்** : பொருட்களை ஒப்புமைப்படுத்த கணித மொழி பயன்படுத்துதல் (39)

**கருத்துகள்** :
- பல வண்ணங்களில் பூக்கள் உள்ளன.
- அலங்காரத்திற்கு பூக்கள் பயன்படுகின்றன.

**கருவிகள்** : கிரையான்ஸ்

**சூழல்** : ஆசிரியை காட்சிப் படுத்திய பூக்களைக் குழுக்களாக்குதல். பெரிய குழு சிறிய குழு என குழந்தைகள் கண்டு பிடிக்க வேண்டும்.

**செயல்முறை**

- **கதைக்கூற்று** : இன்று அனுவின் பிறந்தநாள். என்ன கொடுக்கலாம்? ஆமினா ஆலோசித்தாள். அவளுக்கு பூக்கள் மிகவும் பிடிக்குமே. ஆமினா பூந்தோட்டத்திலிருந்து பூக்கள் பறித்தாள். அம்மா எனக்கொரு மலர்க்கொத்து செய்து தருவீங்களா? அனுவிற்கான பிறந்த நாள் பரிசு இது. அம்மா இரண்டு மலர்க்கொத்துகள் செய்தார். ஒன்று ஆமினாவிற்கும் மற்றொன்று அனுவிற்கும். மீதியுள்ள பூக்களை வைத்து இரண்டு மாலைகளையும் கட்டினார். ஆமினாவின் அம்மா செய்த மலர்க்கொத்தையும் மாலையை யும் பாருங்கள்!
- பயிற்சித்தாள் 9.3 “வண்ணம் தீட்டுவோம், குழுக்களைக் கண்டறிவோம்”. வழங்குதல்.
- **படவாசிப்பு** :
  - படத்தில் என்னென்ன?
  - கூடுதல் பூக்கள் உள்ள மலர்க்கொத்து எது?
- **வண்ணம் தீட்டுவோம்**
  - கூடுதல் பூக்கள் உள்ள மலர்க்கொத்தில்,

பூக்களுக்கு மஞ்சள் நிறமும் இலைகளுக்கு பச்சை நிறமும் அளியுங்கள்.

- கூடுதல் பூக்களுள்ள மாலைக்கு வண்ணம் தீட்டுங்கள்!
- முழுமை செய்யப்பட்ட பயற்சித்தாள்களைக் காட்சிப் படுத்துதல்.

- **பாடல்** – ஆசிரியை பாடும்போது குழந்தைகள் ஏற்று பாடுதல்.

மாலை நல்ல மாலை
நாங்கள் கட்டிய மாலை
ஆஹா நல்ல மாலை
அழகான மாலை

- பயிற்சித்தாளில் கூடுதல் பூக்கள் உள்ள மாலையைக் கண்டுபிடித்தல்.
- கூடுதல் பூக்கள் உள்ள பெரிய குழுவைக் கண்டுபிடித்து மாலைக்கு வண்ணம் தீட்டுதல்.

## மதிப்பிடுதல் :

- பெரிய குழுவை கண்டுபிடிக்க இயல்கிறது.
- பூக்களைப் பயன்படுத்திச் செய்யும் அலங்காரப் பொருட்களைப் பிரித்தறிய இயல்கிறது.

**பயிற்சித்தாள் – 9.4 நண்பனைக் கண்டுபிடிப்போம்**

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்** : வண்ணம், வடிவம், அளவு போன்ற ஒன்றிற்கு மேலான அளவுகோலைப் பயன்படுத்தி பொருட்களை வகைப்படுத்தி ஒழுங்குபடுத்த இயல்கிறது. (41)

**கருத்துகள்** :

- பல வண்ணங்களில் பூக்கள் உள்ளன.
- மணமுள்ள பூக்களும் மணமற்ற பூக்களும் உள்ளன.

**கருவிகள்** : கிரையான்ஸ்

**சூழல்** :

- வகுப்பில் பூக்களைக் கொண்டு வருதல்.
- ஒரே மாதிரியானவற்றை வகைப்படுத்துதல்.
- இதழ்கள், வண்ணம் பார்த்துக் கூறுதல்.
- முகர்ந்து பார்த்துக் கூறுதல். (மணம் உண்டு/இல்லை)
- 'பொம்மை' பக்கம் 206 –ல் உள்ள பாடல்களைப் பாடுதல்.
  - பால் போல் நல்ல வெள்ளை......
  - மணமுண்டு..... மணமுண்டு.......

**செயல்முறை**

- **இயற்கையை உற்றுநோக்கி நடத்தல்** – இன்று நாம் பள்ளியில் உள்ள பூந்தோட்டத்திற்குச் செல்வோமா? ஆசிரியையும் குழந்தைகளும் இயற்கையை உற்று நோக்கி நடத்தல்.
  - செடிகள், பூக்கள், உயிரினங்கள் போன்றவற்றை உற்று நோக்குதல்.
  - அவர்களுக்கு விருப்பமானவற்றைச் சேகரித்தல்.

- வகுப்பறைக்குத் திரும்பி வந்து பார்த்த காரியங்களைக் கூறுதல்.
- சேகரித்த பூக்களில் ஒரே மாதிரியானவற்றை வகைப்படுத்துதல்.
- வகைப்படுத்தியதன் அடிப்படையில் கூறுதல்.

- பயிற்சித்தாள் – 9.4 "நண்பனைக் கண்டுபிடிப்போம்" வழங்குதல்.
  - வடிவம் பார்த்து நிழல் படங்களைக் கண்டு பிடித்தல்.
  - வரைந்து இணைத்தல்.
  - பூவின் வண்ணத்தைப் பிரித்தறிதல். அதே நிறம் நிழல் படத்திற்கு வழங்குதல்.

## மதிப்பிடுதல் :

- நிழல் படங்களைக் கண்டுபிடிக்க இயன்றுள்ளது.
- சரியான வண்ணம் தீட்டப் பட்டுள்ளது.

## பயிற்சித்தாள் – 9.5வண்ணம் தீட்டுவோம், பெருமை பேசுவோம்

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- உடல் இயக்க வளர்ச்சி
- மொழி வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு.

**திறன்கள்** :
1. காகிதம், துணி போன்றவற்றை மடிக்கவும் வெட்டவும் ஒட்டவும் இயல்கிறது. (6)
2. கத்தரிக்கோல் பயன்படுத்தி வெட்ட இயல்தல் (7)

**கருத்துகள்** :
- பல வண்ணங்களில் பூக்கள் உள்ளன.
- அலங்கரிக்க பூக்கள் பயன்படுத்தப் படுகின்றன.

**கருவிகள்** : சூரியகாந்திப் பூவின் பட நகல்கள், கத்தரிக்கோல், கிரையான்ஸ், காட்சிப் பலகை.

**சூழல்** : ஆசிரியை ஒரு தாமரைப் பூவின் கட் அவுட்டைக் காட்டி பெருமை பேசுதல்.

### செயல்முறை

- **பெருமைபேசுதல்** : ஆசிரியை ஒரு தாமரைப் பூவின் கட் அவுட்டைக் காட்டி பெருமை கூறுதல்.

  'என் நிறம் சிவப்பு ஆகும்.
  நான் பெரியவன்.
  ஏராளம் இதழ்கள் உள்ளன.
  தண்ணீரில் வளர்வேன்.
  சொல்லுங்கள் சொல்லுங்கள் நான் யார்?

  - பிற பூக்களின் பெருமை பேசுதல்.

- பயிற்சித்தாள் 9.5 'வண்ணம் தீட்டுவோம் பெருமை பேசுவோம்" வழங்குதல்.
  - சூரியகாந்திப் பூவின் நிறமுள்ள படத்தைக் காண்பித்தல்.
  - சூரியகாந்திப் பூவின் பெருமை பேசுதல்.
  - சூரிய காந்திக்கு வண்ணம் தீட்டுதல்.

    (படம் வெட்டிச் செய்யும் செயல்பாடு என்பதால் பட நகலைக் குழந்தைகளுக்கு

வழங்கி செயல்பாடைச் செய்யவைக்க வேண்டும்.)

- படத்தை கத்தரிக்கோலால் வெட்டுதல்.
- படங்களை காட்சிப்பலகையில்/சுவரில் ஒட்டுதல், சுவரில் பூந்தோட்டம் (வால் கார்டன்) உருவாக்குதல்.

## மதிப்பீடு :

- அழகாக வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.
- பூவைப் பற்றிக் கூற இயல்கிறது.
- கத்தரிக்கோல் பயன்படுத்தி வெட்டி எடுக்க இயல்கிறது.

## பயிற்சித்தாள் - 9.6 பூ செய்வோம்

**வளர்ச்சி மண்டலங்கள் :**
- உடல் இயக்க வளர்ச்சி
- சமூக உள வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு.

**திறன்கள் :**
1. காகிதத்தை வெட்டவும் ஒட்டவும் இயல்தல். (6)
2. கத்தரிக்கோல் பயன்படுத்தி வெட்ட இயல்தல். (7)
3. உருவாக்குதல் செயல்பாடுகளில் தனித்தும் குழுவாகவும் பெரியோர்களுடன் சேர்ந்தும் ஒற்றுமை மனப்பான்மையுடன், தலைமை தாங்கி செயல்பட இயல்தல். (52)
4. பொருட்களை ஒப்புமைப்படுத்த, கணித மொழியைப் பயன்படுத்த இயல்தல். (39)

**கருத்து :**
- பல வண்ணங்களில் பூக்கள் உள்ளன.
- பூக்கள் அலங்காரத்திற்குப் பயன்படுகின்றன.

**கருவிகள் :** பயிற்சித்தாளின் நகல்கள், கத்தரிக்கோல், பசை கிரையான்ஸ்.

**சூழல் :** பூக்களது பயன்களில் முக்கியமானது அலங்காரப் பொருட்களின் உருவாக்கம், மாலை, மலர்க்கொத்து, பூக்கூடை (மலர் கூஜா) அலங்காரம். கலந்துரையாடல்.

**செயல்முறை**

- **அலங்கரித்தல் :** இன்று நமது வகுப்பறையை நாம் பூக்களால் அலங்கரிப்போமா.
- பயிற்சித்தாள் 9.6 'பூ செய்வோம்' வழங்குதல்.
- **பட வாசிப்பு**
  - அனைத்துப் பூக்களும் ஒரே அளவிலானதா?
  - நிறமில்லாத எத்தனை பூக்கள் உள்ளன?
  - எத்தனை இலைகள் உள்ளன?
- **வண்ணம் தீட்டுதல்**
  - பூக்கள், இலைகள் போன்றவற்றிற்கு வேறுபட்ட வண்ணம் தீட்டுதல்.
  - தொடர்ந்துள்ள செயல்பாடுகள் கத்தரிக் கோல் பயன்படுத்தி வெட்டவும் ஒட்டவும் செய்யவேண்டிய செயல்பாடு ஆனதால் பயிற்சித்தாளின் நகல் வழங்க வேண்டும்.
  - படங்களைக் கத்தரிக்கோல் பயன்படுத்தி வெட்டுதல்.

- மாதிரியைப் பார்த்து, அடிப்பகுதியில் பூ வருவதற்கேற்றவாறு பெரியதிலிருந்து சிறியதற்கு என்ற முறையில் அடுக்கடுக்காக முறைப்படுத்தி ஒட்டுதல். அடிப்பாகத்தில் இலைகளை ஒட்டவேண்டும்.
- தனது பூவைப் பற்றி பெருமையாகப் பேசு தல்.
- உருவாக்கிய பூக்களின் கண்காட்சி.

**ஆசிரியைக்கு** : உருவாக்கல் செயல்பாடு நடைபெறும்போது அடிப்பகுதியில், கீழே, நடுவில், மேலே போன்ற சொற்களை மனப்பூர்வமாக பயன்படுத்த வேண்டும்.

## மதிப்பீடு :

- அழகாக வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.
- கத்தரிக்கோல் பயன்படுத்தி சரியாக வெட்டி எடுக்கப்பட்டுள்ளது.
- ஒட்டி பூ செய்ய இயல்கிறது.
- உருவாக்கல் செயல்பாட்டில் ஒற்றுமையுடன் தலைமை தாங்கி ஈடுபட இயல்கிறது.

### பயிற்சித்தாள் - 9.7 படத்தை முழுமைப் படுத்தலாம்.

**வளர்ச்சி மண்டலம்** : உடல் இயக்க வளர்ச்சி.

**திறன்** : காகிதம், துணி (பஞ்சு) மடிக்கவும் வெட்டவும் ஒட்டவும் இயல்தல். (*6*)

**கருத்து** : பூக்களில் வண்ணத்துப் பூச்சிகளும் வண்டுகளும் தேனீக்களும் தேன் அருந்த வருகின்றன.

**கருவிகள்** : வண்ணத்தில் முக்கிய பஞ்சு, பென்சில் சீவிய துண்டுகள், துணியின் துண்டுகள், காகிதம்

**சூழல்** : பூந்தோட்டத்தில் என்னென்ன? கலந்துரையாடல்.

**செயல்முறை**

- **கதை**
  - அழகான பூந்தோட்டம் - (பொம்மை பக்கம் - 206)
  - பூந்தோட்டத்தோடு தொடர்புடைய கதையை மணல் தட்டின் உதவியுடன் / பெரிய படத்தின் (Big picture) உதவியுடன் கூறுதல்.
- **விளையாட்டு**
  - பூக்களின் பெயர் சொல்லும் விளையாட்டு.
  - வட்டத்தில் நிற்க வேண்டும்.
  - ஒவ்வொருவராக பூக்களின் பெயர்களைக் கூறுதல்.
  - பெயர் கூற இயலாதவர்கள் உட்கார வேண்டும்.
- **பாடல் பாடுதல்**
  - பாடலைக் குழுவாகப் பாடுதல்
    'வண்ண வண்ண பூக்களால்
    எண்ணமெல்லாம் துள்ளுதே..... (பொம்மை பக்கம் 207).
- **பயிற்சித்தாள்** - 9.7 'படத்தை முழுமை செய்வோம்' வழங்குதல்.
  - வண்ணத்தில் முக்கிய பஞ்சு, பென்சில் சீவிய துண்டுகள், துணித்துண்டுகள், காகிதம்

போன்றவற்றை வெட்டி ஒட்டி பூந் தோட்டத்தை அழகு படுத்துதல்.

- ஒவ்வொருவரும் தங்களது பூந்தோட்டத்தைப் பற்றிக் கூறுகிறார்கள்.
- அனைவரது படங்களையும் காட்சிப் படுத்துதல் / ரசித்தல்.

**மதிப்பீடு :**

- கட்டத்தின் உள்ளே மட்டும் ஒட்டப் பட்டுள்ளது.
- வண்ணம் தீட்டப் பட்டுள்ளது.
- தனது படங்களைப் பற்றி தயக்கமின்றி கூற இயல்கிறது.

## மையக் கருத்து 10 ஓணம், ரம்சான்

அனைத்து வளர்ச்சி மண்டலங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது என்பதை உறுதி செய்தல் வேண்டும். ஆசிரியை தகுந்த செயல்பாடுகளைச் சேர்த்துக் கொள்ளவும் தரப்பட்டுள்ள செயல்பாடுகளுக் கேற்றவாறு மேன்மைப்படுத்தவும் செய்யலாம்.

**செயல்பாட்டு வரிசை**

1. கதை சொல்லுதல் + பயிற்சித்தாள் 10,1 "வண்ணம் தீட்டுவோம் சொல்வோம்" அளித்தல்.
↓
2. சுதந்திர விளையாட்டுகள்.
↓
3. அலங்கரித்தல், பரிந்துரைகள் அளித்தல்.
↓
4. பூந்தோட்டம் அமைத்தல்.
↓
5. பயிற்சித்தாள் 10.2 'பூக்கோலத்திற்கு வண்ணம் தீட்டுவோம் அளித்தல்.
↓
6. பிறந்தநாள் கொண்டாட்டம் – அனுபவம் பங்குவைத்தல்.
↓
7. விளையாட்டுகளில் ஈடுபடுதல்.
↓
8. அனுபவங்கள் பங்குவைத்தல் (ரம்சான்) + பயிற்சித்தாள் 10.3 "வண்ணம் தீட்டுவோம் சொல்வோம்" அளித்தல்.
↓
9. மருதாணி போடுதல்.
↓
10. உணவுப் பாடல் பயிற்சித்தாள் 10.4 'ஒண விருந்து' அளித்தல்.

### பயிற்சித்தாள் – 10.1 வண்ணம் தீட்டுவோம் சொல்வோம்

**வளர்ச்சி மண்டலம்** :
- உடல் இயக்க வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்கள்** :
1. சுதந்திரமாக படம் வரைந்து வண்ணம் தீட்ட இயல்தல்.
2. இயற்கையை ரசிக்கவும் படம் வாயிலாக வெளியிடவும் வண்ணம் தீட்டவும் இயல் தல் (79)

**கருத்துகள்** :
- ஓணம், ரம்சான் போன்ற பல விழாக்கள் உள்ளன.
- ஒவ்வொன்றிற்கும் அதற்கே உரிய தனித் தன்மைகள் உள்ளன.

**கருவிகள்** : கிரையான்ஸ்

**சூழல்** : ஓணத்தோடு தொடர்புடைய அனுபவம் கூறுதல். வகுப்பில் அத்தப் பூக்கோலம் போடுதல்.

**செயல்முறை**

- **கதைக்கூற்று** : ஜோஸ் செடிகள் நட்டான். தண்ணீர் பாய்ச்சினான். செடிகள் வளர்ந்தன. ஆனால் பூ வரவில்லை. ஒவ்வொரு நாளும் சென்று பார்ப்பான். ஒரு செடியும் பூப்பதில்லை. நாளை நீ பூக்க வேண்டும். அவன் ஒவ்வொரு செடியின் அருகில் சென்று ரகசியமாகக் கூறினான். செடிகள் தலையாட்டின. ஆனால் அடுத்த நாள் செல்லும் போதும் எல்லாம்

பழையது போலத் தான். ஒரு நாள் அவன் ஜன்னல் வழியாகப் பார்த்தபோது ஒருவர் செடிகளுக்கிடையில் நிற்கிறார். அழகான குடையும் பிடித்துக்கொண்டு நிற்கிறார். குடை நிறைய பல வண்ணங்கள். ஜோஸ் உற்றுப் பார்த்தான். வண்ணங்கள் அசைகிறது. மறுபடியும் உன்னிப்பாகப் பார்த்தான். அவைகள் அனைத்தும் வண்ணத்துப் பூச்சிகள். ‘வண்ணத்துப் பூச்சிக் குடை! அந்த குடைக்காரர் ஒவ்வொரு செடியின் அருகில் சென்று செடிகளைத் தொட்டுத் தழுவினார். அற்புதம்! அப்போது செடிகள் பூக்கத் தொடங்கின. எல்லா செடிகளும் பூக்களால் நிறைந்தன. வண்ணத்துப் பூச்சிகள் குடையிலிருந்து பூக்களை நோக்கிப் பறந்தன. அது ஒரு ஓலைக்குடை என்று அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. “யார் அது?” ஜோஸ் கிளியிடம் கேட்டான். கிளி ஒரு பாட்டு பாடியது.

ஓணம் வந்தது பொன்னோணம் வந்தது
மாவேலி வந்தபோது ஓணம் வந்தது.
பூக்கள் மலர்ந்தன தும்பிகள் பறந்தன
பூக்கோலமிடுவோம் ஆரவாரமிடுவோம்
நண்பர்களே ஓடியாடி வாருங்கள்.

தாளம் போட்டு சேர்ந்து பாடுதல்.

”அது யார் என்று இப்போது புரிந்ததா?”

பூந்தோட்டத்தில் மாவேலி நிற்கும் படம் காண்பித்தல்.

- பயிற்சித்தாள் – 10.1 ‘வண்ணம் தீட்டுவோம் சொல்வோம்’ அளித்தல்.

- **பூப்பாடல்**
  - தொடர்ந்து பூப் பாடல் பாடுதல்.
  - படத்தில் பார்ப்பதைக் கூறுதல்.
  - பரிந்துரைக்கேற்ப பூக்களுக்கு வண்ணம் தீட்டுதல்.
  - ஒருவருக்கொருவர் மதிப்பிடுதல்.
  - படத்தில் என்னென்ன உள்ளது என்பதைக் கூற வாய்ப்பு அளித்தல்.
  - இடப்பக்கத்தின் மேலே உள்ள பூவின் நிறம் என்ன?
  - அதுபோன்ற பூ படத்தில் எங்குள்ளது என்று கண்டுபிடி.
  - அதற்கு அவ் வண்ணம் (நீலம்) அளித்தல்.
  - இம்முறையில் பிற பூக்களைக் கண்டு பிடித்து இணைத்து வண்ணம் தீட்டுதல்.
  - இலைகளை இணைத்து வண்ணம் தீட்டுதல்.
  - மீதியுள்ள படங்களுக்குத் தகுந்த வண்ணம் தீட்டி அழகுபடுத்துதல்.

## மதிப்பீடு :

- பரிந்துரைக் கேற்றவாறு வண்ணம் தீட்டியுள்ளனர்.
- வண்ணம் தீட்டியதன் உயர்ந்த தரம்.

## பயிற்சித்தாள் – 10.2 பூக்கோலத்திற்கு வண்ணம் தீட்டு வோம்

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்** : கணித பிரச்சனைகளுக்குத் தீர்வு காண இயல்தல் (46)

**கருத்துகள்** :

- ஓணம், ரம்சான் போன்ற பல விழாக்கள் உள்ளன.
- ஒவ்வொன்றிற்கும் அதற்கே உரிய தனித்தன்மைகள் உள்ளன.

**கருவிகள்** : காகிதப் பொட்டு

**சூழல்** : விழாக்களோடு (ஓணம்) தொடர்புடைய கதை சொல்லுதல்.

**செயல்முறை**

- **கதை சொல்லுதல்** : அனுவுக்கு கடுமையான காய்ச்சல், தொட்டால் சுடுகிறது. அவள் படுத்துக் கிடக்கிறாள். வெளியில் குழந்தைகளின் கூச்சல், 'பூ பறிக்க வாரீரோ வாரீரோ விடியலில்.' குழந்தைகள் பாடி விளையாடுகிறார்கள்.

அனுவுக்கு பூக்கோலம் போட ஆசை தோன்றியது. அவள் எழும்பினாள். முடியவில்லை. மிகுந்த களைப்பு, அவள் மீண்டும் படுத்தாள். உறங்கிவிட்டாள். அப்போது வாசல் வழி ஒவ்வொருவராக வரத்தொடங்கினர். அறையில் மணம் வீசியது. பல வகைப் பூக்கள் வந்தன. (ஒவ்வொரு பூவின் பெயரும் கூற வேண்டும். ரோஜா பூ வந்தது. என்று கூறும்போது. ஹாய்! நல்ல மணம் என்று ரசித்து மணம் நுகர்ந்து குழந்தைகள் கூற வேண்டும்). மேசை மீதிருந்த சாக்பீஸ் தரையில் குதித்தது. அது ஒரு பெரிய வட்டம் வரைந்தது. 'நான் நடுவில் இருப்பேன். ரோஜாப்பூ கூறியது. அனு எழும்பும் போது முதலில் என்னைப் பார்ப்பாள். 'நான் அருகில் இருப்பேனே! முல்லை கூறியது. என் மணம் முதலில் கிடைக்குமே! செம்பருத்திப்பூ முல்லைப் பூவிடமும் சாமந்திப் பூவிடமும் மணம் கடன் கேட்டது. அவர்கள் யாரும் கொடுக்கவில்லை. ''மணமில்லை என்றால் என்ன? நல்ல அழகுண்டல்லவா? செம்பருத்தி இரண்டாம் வரிசையில் அமர்ந்தது. 'நான் பெரியது தானே என்னை முதலில் பார்ப்பாள்.'' ஒவ்வொரு பூவும் ஒவ்வொரு இடத்தில் அமர்ந்தன. அனு விழித்தாள். தரையில் பார்த்தாள். "ஹாய் என்ன அழகான பூக்கோலம்" அப்போது யாரோ அழும் குரல் கேட்டது. முக்குற்றிப் பூக்கள்! அவைகளுக்கு அமர யாரும் இடம் கொடுக்கவில்லை. அனு அவர்களை எடுத்து சுற்றிலும் வைத்தாள். எல்லோரும் மகிழ்ந்தனர். அனு கைபேசியில் பூக்களத்தின் படம் பிடித்தாள். புகைப் படத்தைப் பாருங்கள் வண்ணம் தீட்டுங்கள்!

- பயிற்சித்தாள் 10.2 : 'பூக்கோலத்திற்கு வண்ணம் தீட்டுவோம்' அளித்தல்.

- **பட வாசிப்பு**
  - படத்தில் என்னென்ன உள்ளது என்பதைக் கூற வாய்ப்பளித்தல்.
  - பூவிற்கு தகுந்த வண்ணம் தீட்டுதல்.
  - வண்ணம் தீட்டிய படங்களைக் காட்சிப் படுத்துதல்.

- கணித வாய்ப்பு (எண்ணிக்கை கூடுதல்/ குறைவு) பயன்படுத்துதல்.

## மதிப்பீடு :

- கவர்ச்சிகரமாக வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.
- ரோஜா, செம்பருத்தி, சாமந்திப் பூ போன்ற பூக்களின் எண்ணிக்கையைக் கூற இயல்கிறது.

## பயிற்சித்தாள் – 10.3. வண்ணம் தீட்டுவோம், சொல்வோம்.

**வளர்ச்சி மண்டலங்கள்** :
- மொழி வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு.

**திறன்கள்** :
1. பொருட்களுடையவும் நிகழ்வுகளுடையவும் படங்களை உற்று நோக்கி விவரிக்கவும் கண்டு பிடிக்கவும் வெளியிடவும் இயல்தல். (21)
2. இயற்கையை ரசிக்கவும் படங்களுக்கு வண்ணம் தீட்டவும் இயல்தல். (79)
3. எண்களையும் பொருட்களையும் தொடர்பு படுத்த இயல்தல். (44)

**கருத்து** : ஒவ்வொரு விழாக்களுக்கும் அதற்கே உரிய தனித்தன்மைகள் உள்ளன.

**கருவிகள்** : கிரையான்ஸ், பாடல்கள்

**சூழல்** : 'பொம்மை' பக்கம் 208 – ல் உள்ள ஓணப் பாட்டுகள். தொடர்ந்து பயிற்சித்தாள் அளித்தல்.

**செயல்முறை**

- **கதைக்கூற்று** : ஆமினாவிற்கு உம்மா பரிசுப் பொட்டலம் அளித்தார். அவள் பிரித்தாள். இது காதிற்கு, இது கழுத்திற்கு, இது கைகளுக்கு. (பரிசுப் பொட்டலத்தில் என்னவாக இருந்திருக்கும்?) 'உம்மா.....' "என்ன மகளே," "இந்த வளையல்களை இரு கைகளிலும் சமமாகப் போட்டுத் தருவீங்களா?" உம்மா வளையல் எடுத்தார். வலது கையில் அணிவித்தார். (எல்லோரும் வளையல் போடுவது போல் நடிக்க வேண்டும்). இடது கையில் வளையல் அணிவித்தார். (இடப்பக்கம் வலப்பக்கம் அறிதல். நடிப்பு) ஒரு வளையல் மீதி வந்தது.! ஆமினா உரக்கச் சொன்னாள். இரண்டு கைகளுக்கு மூன்று வளையல் (சரியா?, படத்தைப் பாருங்கள்! சொல்லிக்கொண்டே தொட்டு எண்ணுதல்). அவள் கம்மல் எடுத்தாள். காதில் வைத்தாள். நடித்தல். உரக்கச் சொன்னாள். இரண்டு காதிற்கு இரண்டு கம்மல்... (சரியா?)
- பயிற்சித்தாள் 10.1 "ஆமினாவிற்கு வண்ணம் தீட்டுவோம், சொல்வோம் அளித்தல்.

  படத்தைப் பாருங்கள். தொட்டு எண்ணுங்கள். காதில் கம்மல் போடுவது போல் நடித்தல். (மாலை எத்தனை உள்ளது? (எண்ணிக் கூறுங்கள்!) அவள் எண்ணினாள். ஒரு நபருக்கு ஒரு மாலை போதும். அவள் கூறினாள். ஆமினா ஒரு மாலையும் ஒரு வளையலும் உம்மாவுக்கு அளித்தாள். உம்மா அவளுக்கு ஒரு பரிசு கூட அளித்தார். என்னவாக இருக்கும்? ஆசை முத்தம் (இனி ஆமினாவின் ஆடைக்கு வண்ணம்

தீட்டுவோம். மூன்று வண்ணமுள்ள ஆடை - வண்ணம் தீட்டுங்கள்.)

## மதிப்பீடு:

- படத்திலுள்ள பொருட்களை எண்ணிக் கூற இயல்கிறது.
- தகுந்த வண்ணம் தீட்டப் பட்டுள்ளது.
- வண்ணம் தீட்டப்பட்டுள்ளதன் உயர்ந்த தரம்.

## பயிற்சித்தாள் - 10.4. ஓண விருந்து.

**வளர்ச்சி மண்டலம்** :
- மொழி வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்கள்** :

1. பொருட்களுடையவும் நிகழ்வுகளுடையவும் படங்களை உற்று நோக்கி விவரிக்கவும் கண்டுபிடிக்கவும் வெளியிடவும் இயல்தல் (21)
2. இயற்கையை நேசிக்கவும் படங்களுக்கு வண்ணம் தீட்டவும் இயல்தல். (79)

**கருத்து** : ஓணம், ரம்சான் போன்ற பல்வேறு பண்டிகைகள் உள்ளன. ஒவ்வொன்றிற்கும் அதற்கே உரிய தனித்தன்மைகள் உள்ளன. சில விழாக்கள் பள்ளியில் கொண்டாடப்படுகின்றன.

**கருவிகள்** : கிரையான்ஸ், ஓண விருந்து.

**சூழல்** : கொண்டாட்டங்களோடு தொடர்புள்ள அனுபவங்கள் கூறுதல்.

**செயல்முறை**

- **பாடல்** : பாடலைக் குழுவாகப் பாடுதல்.

"ஓணக் கறிகள் பலவுண்டு
நன்றாய் உண்ண வழியுண்டு
பச்சடி, கிச்சடி, ஊறுகாய்
பருப்பு, சாம்பார், புளிசேரி
ஓலன், காளன், நெல்லிக்காய்
சேனைப் பொரியல், பப்படம்
பூசணிக் குழம்பு, உப்பேரி
ஜிம் ஜிம் ஜிம் ஜிம் புளிஇஞ்சி
தொட்டு ருசிக்க சம்மந்தி
ஓணக் கறிகள் பலவுண்டு

கொதியுடன் எப்படி வரைவேன் நான்?

- பயிற்சித்தாள் 10.4 'ஓண விருந்து' அளித்தல்.

ஒவ்வொரு வரிகள் பாடும் போதும் அந்த வகை (கறிகள்) இலையில் வரைந்து சேர்க்க வேண்டும். இல்லையென்றால் தாய்மார்களின் உதவியுடன் முன்னரே இத்தனை வகைக் கறிகளும் தயார் செய்து வைக்க வேண்டும். பாடல் பாடி, படம் வரைந்த பின் விருந்து. அனைவருக்கும் விருந்தில் இந்த வகைகளைப் பரிமாறும் போதும் பாடி மகிழலாம்.

## மதிப்பீடு :

- குறிப்புகளின் அடிப்படையில் வண்ணம் தீட்ட இயல்கிறது.
- வண்ணம் தீட்டப்பட்டுள்ளதன் கவர்ச்சி.
- படங்களை உற்று நோக்கி தகவல்களைக் கூற இயல்கிறது.